நூல் நிலையம்,
சென்னை-600090.

தமிழர் நேசன்

முதலாவது (1917—18) தொகுதியி

பொருள் அடக்கம்.

விஷயம்:—
நமது சங்கம் ... ...
பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம் * M. ... 10, 115,
ஏகாம்பரநாதையர், M. A., L. T.
ஆன்றோராற்றுப்படை—அ. மாதவையர் B. A.
(1) தாதாபாய் நௌரோஜி * 18 (3) ஜி. சுப்பிரமணிய ஐயர்*
(2) ராஜாராம்மோஹனராய்* 93 (4) லார்வில்லியம் வெடர்பர்
ஸ்திரீ சுதந்திரம்—M. லக்ஷ்மியம்மாள் ... 31, 124
சுவாதிக் கதை—அ. மாதவையர் B. A. ... ...
இரசாயன சாஸ்திரம்—K. C. வீரராகவைய்யர் M. A., F. C.
86, 159.
காலையில் எழுந்திருத்தல்—Dr. A. Y. நாராயணையர் L. M. & S.
பதார்த்த குணநிச்சயக் குறிப்புகள் *—M. C. S. அனந்தபத்ம
நாபராவ் M. A., L. T. 47, 104, 167, 272,
வைசூரி—Dr. S. முத்துலக்ஷ்மியம்மாள் M. B. & C. M. ...
தமிழ்ச் செல்வம்—அ. மாதவையர் B. A; 57, 145, 239, 314, 38
388, 391, 394, 466.
வான சாஸ்திரம் *—P. N. அப்புஸ்வாமி ஐயர் B. A., B. L; 59,
139, 210, 316, 375, 439.
ாடுகளை விருத்தியாக்கி வளர்த்தல்—V. P. சுப்பிரமணிய முதலியார்
G. B. V. C. 66, 136, 206, 288, 382.
ங்கில காவிய மொழிபெயர்ப்புக்கள்—அ. மாதவையர் B. A;
1) எனது பழைய தோழர் 69 (7) நீ மனம் எங்கிடாதே 265
(2) பழைய நாள் நினைவு 123 (8) உயிர் 287
(3) எனது புத்தகங்களின் (9) உலகம் 321
மத்தியிலே ... 144 (10) என் காதல் கிளைக்கு 322
(4) கடவுள் அருள் ... 218 (11) சிறந்த தொண்டு ... 346
(5) இந்தியா, எம் அன்னையே 226 (12) அமோரதி ... 389
(6) உலகமே, மேன்மையாய் (13) மரணம் ... 456
ஒழுகு ... 232
ஐரோப்பாவின் ஆதிசரித்திரம் *—T. S. சுப்பிரமணிய ஐயர்
M. A. L. T. 70, 147, 223, 291.

…பொருள் அடக்கம்

…தைகள்—அ. மாதவையர் B. A.
…ியும் * ... 78 (3) காக்கையும் வேடனும் * 24…
…ே! * ... 154 (4) எலிகளும் பூனையும் * 32…
…ால்*—T. ஏகாம்பரமையர் M. A., L. T. ... 8…
…ம்*—C. K. கிருஷ்ணசாமி பிள்ளை M. A. ... 12…
…தி—Dr. A. Y. நாராயணையர் L. M. & S. ... 21…
…்தமான தமிழ்ச் சொற்கள்—233, 283, 390.
…் சங்கத்தின் முதலாவது வருஷாந்திரக் கூட்டம்—1-8 (244-245.)
…ளாகா—M. R. இராமசாமி சிவன் B.A., Dip. Agr; 345
…திய சரித்திர மூலங்கள்—C. R. இராகவேந்திர ராவ் M. A. ... 258, 420
…ர்த்தன் மூப்பினையறிதல்—அ. மாதவையர் B. A. ... 266
…ரங்களும் அவைகளின் தற்காப்பும்*—R. கோபாலையர் M. A., L. T., ... 306
…ைகளைப்பற்றிய சில குறிப்புகள்—Dr. A. Y. நாராயணையர் L. M. & S. 323
…இந்திய இரசாயன ஆராய்ச்சி *—P. C. ரே & க. கு. வீரராகவையர் M. A. L. T. 331
…த் தொண்டு—அ. மாதவையர் B. A; 344
…ப் பாம்புகள் *—M. ஏகாம்பரநாதையர் M. A., L. T; ... 347
…வர சாஸ்திரம்—R. கோபாலையர் M. A., L. T; ... 361
…ன்கு வர்ணங்கள்-T. R. வேங்கடராம சாஸ்திரியார் B.A.,B.L; 395
…ந்த சுத்தி—Dr. A. Y. நாராயணையர் L. M. & S. ... 413
…ூதி ஆயுர்வேத சாஸ்திரமும் நுண்ணுயிர் நூலும்—ஜி. பி சோலெக் A. A. M. S. & M. லக்ஷ்மியம்மாள் 43…
…தாவர மாம்ஸ பக்ஷிணிகள் *—R. கோபாலையர் M. A., L. T; 45…
வால்நீண்ட வரிப்புலியார்—பங்கிம் சந்திர சட்டர்ஜி & N. இராமசாமி ஐயர்... ... ... 4…
சந்தாதாரர்களுக்கு அறிக்கை ... ... 4…
சிற்றுரைகள்—17, 30, 34, 45, 56, 65, 85, 92, 135, 157, 16… 197, 243, 257, 286, 290, 294, 305, 318, 41… 430, 450.
மதிப்புரை—80, 158, 244, 330, 392, 467.
அநுபந்தம்—ராவ் பகதூர் ச. பவானந்தம் பிள்ளை:
(1) அரிச்சந்திரன் * 1-8
(2) சிதாபகரணம் 1-32

* இவ் வுடுக்குறி யிட்டுள்ளன சித்திரப் படங்களுடன் கூடிய…

ாக்டர். உ. வே.
நூல் நிலையம்,
சென்னை - 600090.

தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.)

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.

தொகுதி I. } பிங்களஸு ஆவணிமீ { பகுதி I.

நமது சங்கம்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என்னுடைய வம் இலர்." என்பது தமிழ் வேதமாக மதிக்கப்படும் திருக் ர் வாக்கு. ஐரோப்பாவில் மிகச்சிறந்த மேதாவியாய் விளங்கிய கன் (Bacon) என்னும் தத்துவ ஞானியும் "அறிவேசக்தி" று கூறியிருக்கிறார். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பிற விப்பயன்களை, அறிவின்றி அடையமுடியாது; ஒருவேளை ஊழ்வலி யால் ஒருவன் செல்வத்தைப் பெற்றாலும், உலக வாழ்க்கை நாடகத் ல்தி சூத்திரதாரிக்குச் சமானமான அறிவு இல்லாமல், ஒன்றும் சிறக் காது; பயன்படாது. ஆகவே, அறிவின் சிறப்பைப்பற்றி அதிகம் பேச வேண்டுவதில்லை.

தமிழ்ப் பத்திரிகைகள் புஸ்தகங்கள் பிரசங்கங்கள் முதலியவற் றின் மூலமாய், இங்கிலீஷ் தெரியாத தமிழ் நாட்டாருக்குள் தற்கால த்து நவீன அறிவைப் பரவச் செய்வதுதான் நமது சங்கத்தின் முக் கிய நோக்கம். ஆயின், இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே அரசர்களும் புலவர் பெருமக்களும் சங்கங்கள் கூடி, திருக்குறள் தொல் காப்பியம் போன்ற இலக்கிய இலக்கணங்களை இயற்றியுள்ள தமிழகத் தில் இல்லாததா அந்த நவீன அறிவு? தமிழ் மொழியில் இல்லை யெ னில், பல சாஸ்திர நூல்கள் வழங்கும் வடமொழியிலும் அது இல்லை யோ? இவ்விரு பாஷைகளிலும் இல்லாத அந்த நவீன அறிவு எத்தன் மையது? "கல்விகரையில, கற்பவர் நாள்சில" வாயிருக்க, நமது நாட் ல் உள்ள அறிவு போதாமல், பிறரிடத்தில் புதிதாய்

றுக் கொள்ளும்படி நமக்கு என்ன குறைகள் இருக்கின்றன? அந்த நவீன அறிவைத் தெரிந்து கொள்ளாவிடில் என்னுகும்? அதை எங்கிருந்து கடன் கொண்டு, எவ்வாறு தமிழ் மக்களுக்குப் புகட்டுவதாக உமது சங்கத்தின் உத்தேசம்? என்னும் கேள்விகள் நியாயமாய்ப் பிறக்கலாம். இவ்வினுக்களுக்கு முறையே விடைகூறிவிட்டால் நமது சங்கத்தின் கோட்பாடுகளும் எண்ணங்களும் நன்ருக விளங்கிவிடு மாதலின், அவ்வண்ணம் செய்வோம்.

பண்டைக் காலத்தில், நம் தாய் நாடாகிய இந்தியா தேசம், மண்டலத்தில் உள்ள மற்ற நாடுகளெல்லாம் தன் கை நோக்கி நிற்க, கண்டவர் யாவரும் அதிசயிக்கும்படி கல்வியில் மேன்மையுற்றுப் பெரும் புகழ் படைத்து, நாகரீகங்களுக்கெல்லாம் ஒரு நாற்றங்கால் போல விளங்கிற்று என்பதை எவரும் அறிவர். வடமொழியிலும் தென்மொழியிலும் இப்பொழுது நாம் தலைமேல் தாங்கிக் கொண்டாடும் அரிய பெரிய நூல்கள், பெரும்பாலும் அக்காலத்த[illegible] யாம். ஆதி காலத்து நூல்களில் அநேகம், பல காரணங்க[illegible] நாளாவட்டத்தில் இறந்து போயின; நமது முன்னேர் இய[illegible] நூல்களில் சிலவே நம்மை எட்டியிருக்கின்றன. இந்நூல்களை ஆரா[illegible]மிடத்து, புருஷார்த்தங்களுக்குள் தர்மம் காமம் மோக்ஷம் என்னும் மூன்றினையும் பற்றியே அவை விசேஷமாய்ப் பேசுகின்றன என்பதும், தர்மத்தைச் செய்வதற்கும் காமத்தை அநுபவித்தற்கும் இன்றியமையாததாகிய அர்த்தத்தைப் பற்றிய நூல்கள் மிகச் சிலவே என்பதும், தெளிவாகும். நாம் இப்பொழுது பலவற்றை மறந்தும், பலவற்றை விபரீதப் பொருள் கொண்டும் உள்ள நமது புராதன கிரந்தங்களைக் கசடறக் கற்று, அதற்குத்தக ஒழுகுவோமாயின், பொருள் ஒன்று இன்றி மற்றப் பிறவிப் பேறுகளை எவ்வளவு அடையக் கூடுமோ அவ்வளவு அடைந்து வாழலாம் என்பதில் சந்தேகமில்லை; பொருளைத் தவிர்த்த விஷயங்களில், பிறர் அறியாத பலவற்றை நாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கலாம் என்பதும் நிச்சயமே. பொருளைத் தேடும் வழிகளில் மட்டும், மற்ற நாட்டார் அநேகர், நம்மிலும் எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், நமக்கு உச்ச காலமாயிருந்த ஆதிகாலம் கழிந்தபின், பலவித இடையூறுகளால் நாம் மேன்மை அழிந்து, நாளுக்கு நாள் அறிவில் ஏற்றம் அடையாமல் நின்று விட்டோம்; முன்

னிருந்த ஞானமும், மறதி மிகுதியினாலும் பயிற்சிக் குறைவினாலும், போய்விட்டது; 'தலை பிழைத்தது தாலிப் பாக்கியம்' என்பதுபோல, நாம் முற்றிலும் உரு அழிந்து போகாமல், உயிருடன் இருப்பதே சிரமமாகிவிட்டது; அப்படிப்பட்ட அவஸ்தையில், அறிவில் பெருகுவது அசாத்தியமாய்விட்டது. நாம் இவ்வண்ணம் கிரகண வாழ்க்கையில் இருக்கும்பொழுது, பூர்வத்தில் நமது கைபார்த்துப் பிழைத்த நாட்டார் பலர் அறிவினும் ஆக்கத்திலும் வளர்ந்தேறி, பொருளைத் தேடும் வழிகளிலேயே தமது புத்தியை அதிகம் செலுத்தி, மிகுந்த சிறப்பை விரைவில் அடைந்து விட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் மற்றொரு உண்மையும் நாம் கவனிக்கத் தக்கது: எடுக்கக் குறையாத, கொடுக்கக் குறையாத செல்வமாகும் அறிவு என்பது, ஒரு நிலையாய் நிற்பதன்று; நாளுக்கு நாள், தலைமுறைக்குத் தலைமுறை, வளருவதாகும். மனிதர், மாறி மாறி வந்து உலகத்தில் பிறப்பது, மேன் மேலும் அறிவில் விருத்தி அடையும் பொருட்டே என்றும் ஒருவாறு கூறலாம். தந்தையினும் மகன் அறிவில் பெருகி, மகனினும் அவன் மகன் அறிவில் பெருகித், தலைமுறை தலைமுறையாக அறிவு வளர்ந்தேறுவது, உலகத்தில் யாவர்க்கும் நன்மையே ஆகும். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> "தம்மில் தம்மக்கள் அறிவுடைமை, மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்று கூறியிருப்பதின் உட்கருத்து இதுவே. அங்ஙனமிருக்க, இந்தியராகும் நாம் அறிவில் மேன்மையுறக் கூடாத நிலைமையில் இருந்து வந்த காலத்தில்; பல சாஸ்திரங்களையும் பயின்று, இயற்கையில் ஏற்பட்ட புத்திக் கூர்மையோடு தூரதிருஷ்டிக் கருவி, அணுதரிசினி, முதலிய கருவிகளையும் பலவிதமான யந்திர சக்திகளையும் உதவியாகக் கொண்டு, அறிவைத்தேடும் பெரு முயற்சியில் இடைவிடாது உழைத்துவந்த வேறு தேசத்தார் சிலர், நம்மினும் அதிக அறிவடைந்திருப்பது, ஆச்சரியமன்று. அவ்வித உபகரணங்கள் ஒன்றுமே இல்லாத நமது முன்னோர்,தமது ஐம்புலன்களையும் மூளை வலிமையையுமே கொண்டு, ஆதிகாலத்தில் அவ்வளவு பேரறிவைத் தேடியதுதான் ஆச்சரியமாகும்; சில அம்சங்களில், அவர்கள் எய்திய அறிவை, இன்னும் இக்காலத்தவர் எட்டிலர் அன்றோ? நமது நாட்டு வடமொழி தென்மொழிகளில் பொருள் தேடும் வழிகளைச் சுட்டும்

நூல்கள் மிகக் குறைவாயிருப்பதற்கும், மேல் நாட்டாரது பிற்காலத்து நூல்கள், நமது முற்காலத்து நூல்களினும் மேலாக, வேறு ...ல அம்சங்களை நன்கு விளக்குவதற்கும், இவைதாம் காரணங்கள். ...க்காலத்து நவீன அறிவு என்று நாம் முதலில் உரைத்தது, இந்த ...ல்நாட்டு அறிவையே.

இனி, அவ்வறிவு நமக்கு இக்காலத்தில் அவசியமா? ஏன் அவசியம்? என்பவைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். உலக வாழ்க்கையில் தாம் பெற்ற அநுபவத்தையெல்லாம் உருட்டித் திரட்டி உருக்கி வார்த்தது போன்ற ஓர் உத்தமக் குறளில், "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று, நாயனார் கூறியிருக்கிறார். அதன் உண்மையை நம்முள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் அநுபவத்தில் உணருகிறோம். ஆகவே, நாமும் பிறரைப்போல் செல்வத்தில் செழித்தோங்க விரும்புவோமாயின், அந்த நவீன அறிவை நாமும் பெற்றாலன்றி முடியாது. இந்நாள் நவீன நாகரீகத்தைச் சிறந்த தொன்றாக மதியாது சிலர் இகழ்ந்து பழிக்கின்றனர். அப்படிப்பட்டவர்களும் கூட, நாம்அடியோடு அழிந்துபோகாமல், நமது சுதேசியக் கோட்பாடுகளுக்கிணங்கச் சுகமாய்வாழவேண்டுமென்று எண்ணுவாராயின்; நவீனநாகரீகத்தை நாம் முழுதும் பின்பற்றாவிட்டாலும், நாமும் ஒரு தனிநாட்டாராக, ஆதிகாலத்தில் பெரும் கீர்த்தியும் படைத்த நமது முன்னோருக்கு ஏற்ற சந்ததியாராக, அயல்நாட்டார்நடுவே மதிப்புற்று ...ழ்வதற்கு இன்றியமையாத அளவு, அவரது நவீன அறிவையும் கல் ...ப் பயிற்சியையும் தேடி அடைய வேண்டுமென்று ஒப்புக்கொள்வர். ...னெனின், 'நிருவாண தேசத்தில் கோவணம் கட்டினவன் பைத் ...யக் காரன்' அன்றோ? அதுவும் அன்றி, 'தன் வீட்டுக்குத் தானே ராஜா' என்று, கிணற்றுத் தவளைகள்போல், ஒவ்வொரு நாட்டாரும் தனித்தனியே வாழும் காலம் சென்றுவிட்டது. உலகத்திலுள்ள பலவேறுசினமயார்களும், கைத்தொழில், வியாபாரம், படைத்திறன், வாழ்க்கையில் சுகந்தரும் போகபோக்கியங்கள் முதலிய நாகரீக சம்பந்தமான எல்லாவிஷயங்களிலும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு இகலிக், கெலித்தவர் தோற்றவரைக் குதிரையேறும் காலமாயிருக்கிறது இது. நாமோ, நடுவில் நேர்ந்த விபத்துக்களாலும் நெடுந் தூக்கத்தாலும், இந்த நாகரீகப் பந்தய ஓட்டத்தில் காலொ...ந்த சோம்பேறிகள்போல் ஆகிவிட்டோம். நமது கால் ஊனம் குண

மாகி, மந்தகதிபோய், வேககதியைக்கொண்டு, இதுவரை நாம் இழந்து விட்ட தூரத்தையும் அதிவேகமாய் ஓடிக்கடந்து, பந்தய ஓட்டத்தில் முன்செல்வார் வரிசையை அடைந்தாலன்றி, நாம், எப்பொழுதும் தாழ்வான நிலைமையில் இருக்க வேண்டியதுதான். நெடுங்கால மாய் மாசுபடிந்து துருப்பிடித்துள்ள நமது புராதனமான அறிவைப் புதுக்கித் துலக்கிக்கொண்டு, நம்மிடம் இல்லாத நவீன அறிவையும் சீக்கிரம் தேடிக் கொள்ளாவிடின், அவ்வாறு நாம் முன் செல்வதே முடியாததாகிவிடும். ஏனெனில், அறிவோ, நிற்பதொன்றன்று; நாளுக்கு நாள் வளர்ந்தேறுகிறது. இப்பொழுது தூண் அளவா யிருக்கும் நவீன அறிவை நாம் கற்றுக்கொண்டு, நாமும் நாளுக்கு நாள் அறிவில் மேன்மேலும் வளர்ந்தோங்க மாட்டாது நின்று விடின், தூண் பாறையாகி, பாறை குன்றாகி, குன்று பெரிய மலையாகி விடும்; அப்பால், அந்த மலையளவு அறிவை நாம் அடைவது அசாத் திய மாகிவிடும்.

இக்காலத்தில் நமக்குள் காணும் சீர்கேடுகளைச் சிந்தித்துப் பார்த்தால், நமது அறிவின் குறைவும், நாம் புதிய அறிவைத் தேட வேண்டிய அவசியமும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கி விடும். நமது பாஷைகளில் இருப்பதுபோல வேறு எவர் பாஷையிலும் இவ்வளவு சிறந்த தர்மசாஸ்திரங்கள் இல்லை என்று நியாயமாய்ப் பெருமை பாராட்டும் நாம், நமது தினசரி வாழ்க்கையில் அறஞ் செய் வதைக் கவனித்தால், நகைப்புக்கு இடமாகும். நமது வாழ்க்கைத் துணைவிகளாகும் பெண்பாலரர் அஞ்ஞானக் களஞ்சியங்களா யிருக் கின்றனர். தமிழ் பேசும் 81 லக்ஷம் ஸ்திரீகளில், 77 ஆயிரம் பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ; அதாவது, நூற்றில் ஒருத்திக்கும் குறைவே ; மற்றோரெல்லாம் எண்ணிக்கை நபர்களே; திருவள்ளுவர் உரைப்படி, கண்களுக்குப் பதிலாக முகத்தில் இரண்டு புண்களை உடையவர்களே. இப்பொழுது நம் நாட்டு ராஜபாஷையும், நாம்கூறிய நவீன அறிவு மிகுந்துள்ள பாஷையுமான இங்கிலீஷ் தெரிந்தவரோ, மொத்தம் 1550 பேர்தாம்; அதாவது, பதினாயிரத்தில் இரண்டு பேர் கூட இல்லை. நமது சென்னை மாகாணத்தில் மட்டும் 479 வெவ்வேறு ஜாதிகள் இருக்கின்றனவாம். "ஊர் இரண்டு (2) பட்டால் கூத்தாடிக் குக் கொண்டாட்டம்" என்பர். ஊர் 479 பிரிவுகள் ஆய்விட்டால், என் சொல்வது? பகைமை பொறாமை பேராசை கோபம் வீண்பெருமை

முதலியவற்றால் நமக்குள் விளையும் தீங்குகளைப்பற்றி விவரிக்க வேண்டுவதில்லை. மொத்தமுள்ள 160 லக்ஷம் தமிழ் மக்களுக்குள் கால் பாகத்தாரைத் தீண்டாச் சாதிகளாக நாம் விலக்கி வைத்து, அவர்களை மிருகங்களினும் தாழ்வாக நடத்திவர அது காரணமாய் அவர்கள் அந்நியரிடம் அடைக்கலம் புகுந்தும், அந்நிய மதங்களையும் ஆசாரங்களையும் தழுவியும், ஊரைவிட்டோடியும் படும் கஷ்ட நிஷ்டூரங்கள், நாம் அறஞ் செய்யும் அழகைப் பறையறைந்து விளக்குகின்றன. நமது தேவாலயங்களும் மடங்களும் இருக்கும் சீர்கெட்ட நிலைமையையும், பக்தியிலும் வேதாந்த சித்தாந்தங்களிலும் சிறந்தவராக விளங்குவோருங்கூட, தினசரி வாழ்க்கையில் தமது மனச்சாக்ஷிக்கு விரோதமாகவும், அஞ்ஞான வசமாகவும், தம் நயமே கருத்தாகவும், ஒழுகும் ஒழுக்கத்தையும் பற்றி எடுத்துரைக்கில், பெருகும். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே நாம் கற்றுக் கரைகண்ட அறத்தாறு இப்படியெனில், பொருளைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? நமது வீடுகளில் சுகவாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக நாம் கொண்டு கையாளும் பல வஸ்துக்களும், படிக்கும் புத்தகங்களும், எழுதும் எழுதுகோல் காகிதங்களும், சிறிய குண்டூசி முதல் பெரிய மோட்டார் வண்டி இறுதியாகவுள்ள எல்லா நாகரீக சாமான்களும், உடுக்கும் உடையும் குடிக்கும் 'கோக்கோ'வும் கூட, மலையினும் பெரிய நமது அறியாமையையும், பிறர் கைபார்த்துப் பிழைக்கும் நமது ஈனப் பிழைப்பையும் நன்கு துலக்குகின்றன. புதிய முறைகளைத் தெரிந்து கொள்ளாமையால், நமக்கு ஜீவனாதாரமாகிய பூமியிலிருந்தும் கால்நடைகளிலிருந்தும், பிறநாட்டாரினும் மிகவும் சொற்பமான பலனையே நாம் பெறுவதையும்; கைத்தொழில் வியாபார முறைகளையும் அவற்றைத் தழுவிய சாஸ்திரங்களையும் அறியாமல், நமது விளைவுகளைப் பிறநாடுகளுக்கு அனுப்பி, அவற்றைப்பிறர் பண்படுத்திய பிறகு நாம் விலைக்குக் கொண்டு, அதனால் அடையும் அளப்பரிய நஷ்டத்தையும்; பரஸ்பர நம்பிக்கையும் அந்நியோந்நியமும் பலர்கூடி ஒத்துப் பிழைக்கும் சமர்த்தும் இன்றி, நமக்குள்ள அற்ப திரவியத்தையும் விருத்தி வழிகளில் செலுத்தி நல்ல பலனடைய மாட்டாதவர்களாய், எதற்கும் துரைத்தனத்தார் உதவியை எதிர்பார்த்து நாம் தவிப்பதையும் பற்றி யாவரும் அறிவர். உலகத்திலுள்ள பிராணிகளுக்கெல்லாம் பொதுவான இயற்கைப் பிரமாணங்களை உணராமலோ, அசட்டை செய்தோ, மறந்தோ, ஆண்டாண்டுதோறும், முன்

யோசனையினாலும் மதி வலியினாலும் விலக்கக்கூடிய வாந்திபேதி, சீதபேதி, விஷசுரம், கொள்ளை நோய், வைசூரி, க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு, நமது தேசத்தின் க்ஷேமத்துக்கும் ஆக்கப் பெருக்குக்கும் அச்சாணிகள்போன்ற லக்ஷக்கணக்கான உயிர்களை நாம் இரை கொடுப்பது, அந்தோ, எவ்வளவு மூடத்தனம்! இது நிற்க: இன்பத்துறையாகிய சம்சார வாழ்க்கையைப்பற்றிப் பேசுமிடத்து, ஒரு வயது நிறையாத பெண் சிசுக்களுக்குள் 31 விதவைகளும், ஒன்றுக்குமேல் இரண்டு வயதுக்குள் 34 விதவைகளும், இரண்டுக்கு மேல் மூன்று வயதுக்குள் 85 விதவைகளும், மூன்றுக்குமேல் நான்கு வயதுக்குள் 140 விதவைகளும், நாலுக்குமேல் ஐந்து வயதுக்குள் 383 விதவைகளும், மொத்தம் பதினைந்து வயதுக்குள் 23,068 விதவைகளும், 1911-ம் வருஷ ஜனசங்கைப்படி நம்முள் இருக்கின்றனர் எனில், விவாக விஷயத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளவர்களாக நம்மைக் கூறுவது? ஹிந்துக்களுக்குள் பெரும்பாலும், விதவைகள் மறு விவாகம் செய்துகொள்ள முடியாது. அப்படியிருக்க, முப்பது வயதுக்குட்பட்ட யுவதிகளுக்குள் சற்றுக்குறைய 3¾ லக்ஷம் விதவைகள் இருக்கிறார்கள் எனில், நமது நாட்டுக்கு, அது எவ்வளவு பிரஜா நஷ்டமாகும்? அவர்கள் படும் துயரமும் விடும் கண்ணீரும் நமது க்ஷேமத்தைப் பெருக்குமென்று எண்ணலாமா? இதுவுமன்றி, நமது சிசுவிவாக வழக்கத்தாலும் அறியாமையாலும், வருஷா வருஷம் எத்தனையோ ஆயிரக்கணக்கான வாலிபப் பெண்கள் பிரசவத்தில் மாண்டு போவதையும், அப்படிப்பட்ட சின்னஞ்சிறு தாய்தந்தையருக்குப் பிறக்குங்குழந்தைகள் பல்லாயிரக்கணக்காய் மடிவதையும், நோய்களால் வருந்துவதையும், பிஞ்சில் பழுத்து வெம்பி உதிர்வதுபோல் சிறுவயதில் மாளுவதையும், கணக்கிட முடியுமோ? 'தாம்' 'தமது,' என்பதை மறந்து, என்புமே பிறர்க்குரியராய், பரோபகாரம் செய்வதே பெருந்துறவு என்றெண்ணி உழைத்து வரும் சில மகான்களைத் தவிர, தான் தோன்றிப் பெருவயிற்றுப் பெண்டுபிடித் தம்பிரான்களாய்த் திரியும் எண்ணிறந்த சன்னியாசிகளும், பண்டாரங்களும், பக்கிரிகளும், கள்ளு கஞ்சா அபினிச் சாமியார்களும் நாம் மோக்ஷ சாம்பிராச்சியத்தைத் தேடும் வழிகளுக்கு ஏற்ற சாக்ஷிகளாவர்.

எல்லாச் சாதியார் எல்லா நாட்டார்களுக்குள்ளும் இப்படிப்பட்ட குறைகள் சில காணப்படுகின்றமையால், நாமே நம்மை இவ்

வண்ணம் பழிதூற்றுவது தகுதியன்று என்று, சிலர் நினைக்கலாம். குற்றமில்லாத மனிதனே இல்லை என்பது நிச்சயமே. ஆயினும், நாம் பிறப்பதும், அறிவில் பெருகுவதும், குறைகள் நீக்கி மேன்மை அடையும் பொருட்டேயன்றோ? ஒருவன் குறை நீக்குவதற்கு, தன் குறைகளை அறிவது முதற்படி அன்றோ? அதனால்தான், இச் சங்க முயற்சியைப் பற்றித் தமிழ் மக்களுக்கு எழுதும் இவ்வறிக்கையில், நமது குறைகளை இவ்வாறு கணக்கிட நேர்ந்தது. இனி, நாம் இக்குறைவுகளை நீக்கவல்ல அறிவைத்தேடுவது அத்தியாவசியம் என்று, எவர்தாம் ஒப்புக்கொள்ளார் ?

அவரவர் கைக்கொண்ட ஜீவனோபாயத்துக்குத் தக்கபடி பொருள் சம்பாதிக்கும் வழிகளைப்பற்றிய அறிவு மட்டும் வேறுபடுமே யன்றி, மற்றெல்லாவித அறிவும், தோட்டிமுதல் தொண்டமான்வரை, யாவருக்கும் பொதுவான சொத்தே; எல்லோருக்கும் அவசியமானதே; அவரவர் மூளை வன்மைக்கு இயன்ற மட்டும், யாவரும் அறிவை அடைதற்குரியவரே. முற்கூறிய நவீன அறிவு,மேல் நாட்டுப் பாஷைகளிலுள்ள நூல்களில்தான் தற்காலத்தில் விசேஷமாய் விளங்குகிறதென்று இதற்குமுன் குறிப்பித்திருக்கிறோம். அதனால், அவ்வறிவைத் தமிழ் மக்களுக்கு ஊட்டும் பொருட்டு, மனித வாழ்க்கைக்கு எவ்வாற்றானும் பயன்படக் கூடிய பல வேறு சாஸ்திரங்களின் உண்மைகளையும் துணிவுகளையும் விவரணங்களையும் பற்றி, அந்த அந்தக் கலைகளைக் கற்றுத்தேர்ந்த மேதையார், யாவருக்கும் தெளிவாய்ப் பொருள்படும்படி எளிய நடையில் எழுதும் வியாசங்கள்,நமது சங்க முயற்சியில்முன்வந்த இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். "கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த புத்தியும் நீடித்து உதவமாட்டா" என்பது மெய்யுரை ஆகவே, முற்கூறிய வண்ணம் விஷய அறிவைப் போதிப்பதைவிட "எப்பொருள், யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது, அறிவு" என்னும் நாயனர் வாக்கியப்படி, அவரவர் தாமாகவே விஷயங்களின் உண்மையைத் தமது மூளை வலிமையினால் ஆராய்ந்து பார்த்து அறிந்துகொள்ளும் வண்ணம், அவரவர்க்குரிய இயற்கை யறிவைக் கூர்மைப்படுத்துவது அவசியம், சிலாக்கியம்,என்பது நிச்சயம். அதற்கேற்றவாறு, இப்பத்திரிகை, அறியாமையை நீக்கிப், போலிக்கொள்கைகளையும் எண்ணங்களையும் சீர்திருத்தி,இதுகாறும் பெரியோர்களால் சித்தாந்தம் செய்யப்பட்டுள்ள

தெள்ளறிவை நமது தமிழ்நாட்டுப் பொது ஜனங்களுக்குப் புகட்ட உழைப்பதும் அன்றி, பலவழிகளாலும் அவர்கள் புத்தியைக் கூரிய தாக்கி, மனத்தையும் சித்த விருத்திகளையும் விசாலப்படுத்தவும் முயலும். இதுவுமன்றி, தேசாபிமானத்தை வளர்த்துக், தமிழறிவைப் பெருக்கி, அம் மொழியில் ருசியை உண்டாக்கி, மனத்தை நல்ல வழிகளில் செலுத்தி மகிழச் செய்பத்தக்க பெரியோரது சரித்திரங்களும், தமிழிலும் இதர பாஷைகளிலுமுள்ள அருமை பெருமை வாய்ந்த விஷயங்களை எடுத்தோதும் உரைகளும், இனிய கதைகளும், பாடல்களும், அப்போதைக்கப்போது, இதில் வெளிவரும். இற்றைக்கு இருநூறு வருஷங்களுக்கு முன் ஒப்புயர்வற்ற மகா மேதாவியாய் விளங்கி, புவனங்கள் யாவற்றையும் ஆட்டுவிக்கும் சர்வ குருத்துவப் பிரமாணத்தைக் கண்டு பிடித்துதவிய ஐஸக் நியூட்டன் என்பவரே, கல்வியைக் கடலுக்கும், தாம் அறிந்தனவற்றை எல்லாம் அதன் கரையில் தாம் கண்டெடுத்த சில சிறு கற்களுக்கும் உவமித்துக் கூறினர் எனில், அவர் காலத்துக்குப் பிற்பட்ட இந்த இருநூறு வருஷங்களுக்குள் ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடியாகக் கலைஞானம் வளர்ந்தேறி, ஒவ்வொரு சாஸ்திரத்தின் ஒரு சிறு பகுதியையே கற்றறிதற்கும் ஒருவன் ஆயுள் முழுதும் போதாது என்று மலைக்கும் படியாயுள்ள இந்நாளிலே, எம்மைப் போன்ற சொற்பமதிச் சிற்றறிவாளர் என் உரைப்பது? இயற்கை அறிவிலும் கல்விப் பயிற்சியிலும் அநுபவ ஞானத்திலும் மிகச் சிறியேம் எனினும், நமது அன்னை இந்தியா மாதாவின் பக்தியில் பெரியேம் ஆதலின், இத்தறுவாயில் கற்றறிந்த சகோதரர் பலரும் மனமுவந்து உதவுவரென முழுதும் நம்பிச், சாலப் பெரிய இவ்வேலையை மேற்கொண்டுவிட்டேம். இப்பத்திரிகையையும் இச்சங்கத்தின் மற்றப் பிரசுரங்களையும் படிப்பவர், அறிவிற் சிறந்தவராம் ஊதியத்தை அடையவும்; அதைக்கண்டு, இம் முயற்சிக்கு மேன்மேலும் உதவும் கல்வி செல்வங்களில் மிக்க கனதனவான்கள், தினம் தவறு உதாரத்தை அடையவும்; அவ்விரு காரணங்களாலும், இவ்வேலையில் புகுந்து விட்டேயாம், மனந்தளரா உற்சாகத்தை அடையவும், கடவுள் அருள் புரிவாராக.

பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம்.

[பாலக்காடு விக்டோரியா கலாசாலையில் போதகரான

ம-ா-ா-ஸ்ரீ மா. ஏகாம்பர நாதன் அவர்கள் M. A., L. T., எழுதியது.]

சில வருஷங்களுக்கு முன், நான் ஒரு நாள் சாயங்காலம் சென்னையில் சைனுபஜார் வீதி வழியாகப் போய்க் கொண்டிருக்கையில், பெரிய தலைப்பாகை தரித்தவரும் வயது சென்றவருமான ஓர் ஆந்திர தேசத்தவர் என்னைப் பார்த்து, "சார், நீங்கள்————ருடைய தம்பி அல்லவா?" என்று கேட்டார். நான் அவரை முன்னறியாததனால் திடுக்கிட்டு, "ஆம், நீங்கள் யார்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "எனக்கு விசாகப்பட்டணம்; நான் உங்கள் தமையனாரின் சிநேகிதர்; அவர் உங்களைப்பற்றி என்னிடம் பேசியிருப்பதுண்டு; உங்கள் முகச் சாடையிலிருந்து அவருடைய தம்பியாக இருக்கலாமென்று ஊகித்தேன்" என்றனர். இம்மாதிரியாக அவர் என்னைக் கண்டு தெரிந்துகொண்டது எனக்கு ஆச்சரியமாக விருந்தாலும், சற்று ஆலோசித்துப் பார்த்தால், முகச்சாடையிலிருந்து உதிர சம்பந்தத்தைத் தெரிந்து கொள்ளுதல் சாதாரணமானதென்றே சொல்லலாம்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் "அக்குழந்தை யார் சாயல்?" என்று ஒருவர் கேட்பதும், அதற்குப் பதிலாக "அப்பனை (அல்லது அம்மாவை)த்தான் வெச்சு உரிச்சிருக்கு" என்று ஒருத்தி பதில் சொல்வதும் சாதாரணமே இந்தச் சாயலை (உருவ ஒற்றுமையை) சற்று உற்றுநோக்கினால், பெற்றோருக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் ஒற்றுமை அதிகமாக இருக்கிறதென்றும், பாட்டனுருக்கும் பேரன்மார்களுக்கும் உள்ள ஒற்றுமை இதைவிடச் சற்று குறையுமென்றும் நாம் பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொள்ளலாம். இன்னும், இராமனுக்குக்கூட்டத்தில் மூக்கு அப்படி இருக்குமென்றும், அப்பாசாமியாத்துக் கூட்டத்தில் நெற்றி இப்படி இருக்குமென்றும் நம்மவர்களுள் சாதாரணமாகச் சொல்லுவதைக் கேட்டிருக்கலாம். இம்மாதிரி வழங்கிவரும் பேச்சுகளிலிருந்து ...கச் சாடைகளிலும் முகச்சாடைகளிலும் ஒற்றுமையிருந்தால்,

அப்படி ஒற்றுமையுள்ளவர்களை இரத்த சம்பந்தப்பட்டவர்களென்று நாம் தெரிந்து கொள்ளுவதாகச் சொல்லலாமல்லவா?

இப்போது குடும்பங்களிலிருந்து ஜாதியார்களுக்குச் செல்லுமிடத்து, வெவ்வேறு ஜாதியார்களுக்குள் வெவ்வேறு பொதுக்குறிகள் இருப்பதாக மானிட தத்துவ சாஸ்திரிகள் (Anthropologists) சொல்லுகின்றனர்; உதாரணம்: ஆரியர், திராவிடர், மங்கோலியர் முதலான ஒவ்வொரு ஜாதியாருக்குள்ளும் சிற் சில அங்கவொற்றுமைகள் இருக்கின்றன. ஆனால் இப்படி ஒவ்வொரு ஜாதியாருக்குள் ஒற்றுமையும், வெவ்வேறு ஜாதியாருக்குள் வேற்றுமையும் இருந்தாலும், எல்லா மனிதர்களுக்கும் சில குணங்களும் சுவபாவங்களும் பொதுவாக இருக்குங் காரணமாக, மனிதர் எல்லாரும் ஒரே வர்க்கத்தினர், அல்லது பெரிய குடும்பத்தினர் என்று சொல்லுதல் தகும்.

இம்மாதிரியான மனித வர்க்கத்தின் உற்பத்தியைப்பற்றியும், மனிதர்கள் இந்தப் பிரகிருதியில் எந்த ஸ்தானத்தை வகிக்கின்றனரென்றும் சற்று ஆலோசிப்போம். இவ்விஷயத்தில் வெவ்வேறு தேசத்தவர்களும் மதத்தவர்களும் வெவ்வேறு அபிப்பிராயங்கொண்டிருந்தனரென்று புராண (Mythology) மூலமாக நமக்குத் தெரிகிறது. காசியபப் பிரஜாபதி என்பவர் அதிதியை மணந்து அதனால் காசினியில் ஜனிததவர்களே மனிதர்கள் என்பது ஹிந்துக்களின் கொள்கை. கடவுள் பூமியிலிருந்து மண்ணெடுத்து, அதைத் தம்முருவம்போல் செய்து, அதன் நாசிக்குள் சுவாசத்தை ஊதி முதல் மனிதனாகிய ஆதாமை (Adam) சிருஷ்டித்ததாகவும், பிறகு அவ்வாதாமின் விலாவெலும்பி லிருந்து முதல் ஸ்திரீயாகிய ஏவாளை (Eve) சிருஷ்டித்ததாகவும், அவ்விருவருடைய சந்ததியே நாமெல்லோரும் என்றும், கிறிஸ்தவ வேத புஸ்தகமாகிய 'பைபிள்' (Bible) கூறுகிறது. ப்ரொமீதியஸ் (Prometheus) என்ற ஒரு வீரன் களிமண்ணினால் மனித உருவம் ஒன்றினைச் செய்து, அதற்கு உயிர் வருத்தி முதல் மனிதனை சிருஷ்டிததனனென்பது ஆதி கிரேக்கர்களுடைய கொள்கை. வெவ்வேறு ஜாதியாருக்குள் வெவ்வேறு அபிப்பிராயங்கள் இருந்த போதிலும், மனிதன் ஒரு தெய்வத்தாலோ அல்லது அமானுஷ்யமான (Superhuman) ஒருவராலோ சிருஷ்டிக்கப்பட்டவன் என்ற அபிப்பிராயததில் எல்லா மதத்தாரும் ஒரு மனதாகவே இருக்கின்றனர். கடவுள் எல்லா ஜந்துக்களையும் சிருஷ்டித்த பிறகு, அவற்றிற் கெல்லாம் மேலான பதவியிலிருநது அவற்றை ஆண்டு

கொண்டு வரும்படியாகத் தம்முடைய பிம்பத்தைப்போற் செய்து, தம்முடைய பரிசுத்த ஆவியாகிய 'ஆத்மாவை' ஊதி மனிதனை சிருஷ்டித்தார் என்பது பெரும்பாலோர் கொள்கையாகும்.

மனித வர்க்கத்தின் உற்பத்தியைப் பற்றிப் புராணமூலமாக நாம் அறிந்துகொள்வதைத்தவிர, இயற்கைப் பரிசோதனை (Enquiry into Nature) மூலமாக என்ன தெரிந்து கொள்ளலாமென்று சற்று ஆலோசிப்போம். நம்மவர்கள் இவ்விதம் ஆராய்ச்சி செய்தனரோ வென்று கவனித்தால், நம்முடைய தேசத்தில் எல்லாக் காலத்திலும் ஆத்ம விஷயங்களைப்பற்றியும் வேதாந்த விஷயங்களைப்பற்றியும் அதிகமாக ஆராய்ச்சி செய்து வந்தனராகத் தெரிகிறதே யொழிய, மனிதனுடைய ஸ்தூல சரீரத்தைப்பற்றி (Physical Body) அதிகமாக ஆராய்ச்சி நடந்ததாகத் தெரியவில்லை. மேல் நாடுகளில் பதினாறாவது நூற்றாண்டு வரையில் மனிதனுடைய உற்பத்தி அமைப்பு முதலானவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள முயல்வதும், அவனுடைய சரீரத்தின் அமைப்பை மற்ற ஜந்துக்களின் தேக அமைப்புடன் தாரதம்மியப் படுத்துவதும், பெருங்குற்றமாகவும் தெய்வ நிந்தனையாகவும் கருதப்பட்டன. இதுமாத்திரமல்ல; மனிதனல்லாத இயற்கைப் பொருள்களைப் பற்றியுங்கூட கிறிஸ்துவ மதாசாரியர்கள் அனுசரித்து வந்த கொள்கைகளுக்கு விரோதமான அபிப்பிராயங்கள் கொள்வது பெருந் தப்பிதமாகவும், பெருந் தண்டனைக்கு ஹேதுவாகவும் கருதப்பட்டது. ப்ருனோ (Bruno) என்றவரும், கோபர்னிக்ஸ் (Copernicus) என்றவரும் வானசாஸ்திர விஷயமாக அக்காலத்திலிருந்த கொள்கைக்கு விரோதமான சில உண்மைகளைக் கண்டுபிடித்ததற்காகவும், லவாய்சிர் (Lavoisier) என்பவர் ரசாயன சாஸ்திர (Chemistry) விஷயமாகச் சில உண்மைகளைக் கண்டுபிடித்ததற்காகவும், விசேலியஸ் (Vesalius) என்ற ஓர் அங்கதத்துவ சாஸ்திரி (Anatomist) ஒரு சவத்தைப் பரிசோதித்ததற்காகவும் கொடுந்தண்டனை யடைந்தனர்.

பதினாறாவது நூற்றாண்டிற்குமேல் இயற்கைப் பரிசோதனை விஷயமாக மேற்கூறிய நிர்ப்பந்தங்கள் இல்லாத காரணத்தால், எல்லாவித சாஸ்திரங்களும் நன்றாக விருத்தியடைந்தன. ஜீவதத்துவ சாஸ்திரிகள் (Biologists) ஜந்துக்களின் சரீர அமைப்பைப் பற்றியும், அவற்றின் அங்கங்களுடைய வேலைகளைப்பற்றியும் பரிசோதித்து, அநேக புதிய விஷயங்களை உலகினர்க்கு அறிவித்தனர். இப்படி ஜந்

துக்களின் அமைப்பைப்பற்றிப் பரிசோதிப்பதில் பற்பல ஜந்துக்களைத் தாரதம்மியப்படுத்தி ஆராய்ந்தனர். பூமியின் அமைப்பைப்பற்றியும் அதனுள்ளே புதைந்துள்ள வஸ்துக்களைப்பற்றியும் கூறும பூதத்துவ சாஸ்திரம் என்ற புதிய நூல் (Geology) ஒன்றினை விருத்தி செய்தனர். பூமியைப் பரிசோதித்ததில், மடிந்து போன அனேக ஜந்துக்களின் பாகங்கள் பூமியில் புதைந்து கிடப்பனவாகவும், அவற்றுள் சில இவ்வுலகின் கண் இப்போது ஜீவித்துவரும் சில ஜந்துக்களின் பாகங்களை ஒத்திருப்பனவாகவும், மற்றும் சில இவற்றினின்று வேறுபட்டிருப்பனவாகவும் கண்டனர்; இம்மாதிரியாக பூர்வ ஜந்து சாஸ்திரம் (Palaeontology) என்ற மற்றோர் புதிய நூலையும் விருத்தி செய்தனர்.

இவ்விதமாக ஜந்துக்களைப்பற்றித் தாரதம்மியப்படுத்தி ஆராய்ச்சி செய்ததிலிருந்தும், மனிதனுடைய அங்கங்களைப்பற்றிப் பரிக்ஷித்ததிலிருந்தும், அங்கவமைப்பு முதலானவற்றில் மனிதனுக்கும் ஜந்துக்களுக்கும் அனேக ஒற்றுமைகள் இருப்பனவாகத் தெரியவந்தது. அவற்றுள் சிலவற்றை இங்கே சொல்லுவோம்:—

(1) மனிதனுடைய பொதுவமைப்பானது குதிரை, வௌவால், குரங்கு முதலான நாலுகால் ஜந்துக்களின் அமைப்பைப் போலவே இருக்கின்றது. (2) மனிதனுடைய அவயவங்களின் ஏற்பாடும், நரம்பு இருதயம் இரத்தக்குழல் முதலானவற்றின் ஏற்பாடும் ஸ்தன்யபான ஜந்துக்களுள் (Mammals) உள்ளன போலவே இருக்கின்றன. (3) மனிதனுடைய மூளையின் பொதுவமைப்பு குரங்கினுடைய மூளையின் பொதுவமைப்பை அதிகமாக ஒத்திருக்கிறது. (4) நம்முடைய தேகத்தில் சிலவிதமான பீஜங்கள் செல்லுவதனால் சில சர்மவியாதிகள் உண்டாவதாக வைத்திய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். படர்தேமல் (Ringworm) போன்ற சர்மவியாதிகள் நாற்கால் ஜந்துக்களுள் சாதாரணமென்றும், அவற்றுடன் பழகும் ஜனங்களுக்கு சுலபமாக அவ்வியாதிகள் தொற்றிக் கொள்ளுகின்றனவென்றும் கண்டுபிடித்திருக்கின்றனர். இவ்வியாதிகளுக்குக் காரணமாகிய பீஜங்கள் சுகமாக வாழவேண்டுமானால், சில வாழ்க்கை நியமங்கள் (Conditions of life.) அவசியமென்று ஜீவதத்துவ சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்தப் பீஜங்கள் மனிதனுடைய சரீரத்திலும் நாலுகால் ஜந்துக்களுடைய சரீரத்திலும் சுகமாக

வாழ்கின்றனவென்பதிலிருந்து அவற்றின் வாழ்க்கைக்குரிய சௌகரியங்கள் இவ்விருவகை ஜந்துக்களிலும் ஒன்றுபோலிருக்கின்றனவென்று தெரிந்துகொள்கிறோம்; அதாவது, இரத்தம், தாதுக்கள் (Tissues) முதலானவற்றின் சுவபாவம் ஒரே மாதிரி இருக்கிறதென்று சொல்லலாம். மனிதர்களுக்கு வருவதுபோல, ஜல தோஷம், குடல் வேக்காடு, இபிரம முதலான வியாதிகள் குரங்குகளுக்கும் வருவதாகத் தெரிகிறது. (5) மனிதர்களுக்குள்ளது போலவே குரங்குகளுக்கும் காபி, டீ, லாகிரி வஸ்துக்கள் முதலானவற்றில் அதிக விருப்பம் இருப்பதாகத் தெரிகிறது. லாகிரி பானங்களை உட்கொள்ளுவதனால் மனிதனிடத்தில் எக்குணங்கள் காணலாமோ, அவையெல்லாம் இக் குரங்குகளிடத்தும் காணலாமென்று பரிசோதனை மூலமாகக் கண்டறிந்துள்ளார். லாகிரி பானம் மூளையைப் பாதிப்பதாகவும், அது காரணமாகப் பானம் செய்தவரிடத்துச் சில குணங்களைக் காணலாமென்றும் வைத்திய சாஸ்திரிகள் கூறுகின்றனர். மனிதனுக்கு லாகிரி வஸ்துக்கள் எவ்விதத்தில் மூளையை பாதிக்கின்றனவோ அவ்விதமாகவே குரங்குக்கும் பாதிக்கின்றன வென்றால், இது ஒரு விசேஷ ஒற்றுமையைக் காட்டுகிறதன்றோ? (6) எல்லா ஜந்துக்களுள்ளும் சந்ததி அற்றுப் போகாமல் விர்த்தியாகும் பொருட்டு சில ஏற்பாடுகள் இருப்பனவாக நாம் காண்கிறோம். பெரும்பாலும் ஜந்துக்களில் ஆண், பெண் என்றிரு வகுப்புகளிருப்பதும், அவ்விரண்டிற்கும் ஜனனேந்திரியங்களில் சில வித்யாசங்கள் இருப்பதும் எல்லாருக்கும் தெரியும். ஒரே ஜாதியின் ஆண் பெண் கூடுதலினால் கருத்தரித்தலும், குறித்த காலத்திற்குள் அக்கருவில் மாறுபாடுகள் உண்டாகி, அது முழுவளர்ச்சியை அடைந்து, இவ்வுலகினில் சிறு பிராணியாக ஜனிப்பதும் எல்லா ஜந்துக்களுக்கும் உள்ளதே; இவ்விஷயங்களில் மனுஷனுக்கும், ஸ்தன்யபான ஜந்துக்களுக்கும் அதிக வித்தியாசமிருப்பதாகத் தெரியவில்லை. கர்ப்பம் தரித்துச் சில மாத காலம் வரையில் தாயின் வயிற்றில் வளர்ந்து, பிறகு பூமியில் ஜனித்துத் தாய்ப்பால் குடித்து வளர்ந்து வருவது, அநேகமாய் மனிதனுக்கும் குரங்குக்கும் ஒரேமாதிரி இருக்கிறதை எல்லோரும் அறியக்கூடும். இம்மாதிரியான பொது ஒற்றுமையிருப்பதுடன், கர்ப்பப்பையில் கரு வளர்ந்துகொண்டு வரும் காலத்திலேயே மனிதனையும் குரங்குபோன்ற ஜந்துவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், வளர்ச்சியில் அநேக ஒற்றுமைகள் இருப்பனவாக கர்ப்ப சாஸ்திர நிபுணர்

கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இம்மாதிரியான ஒற்றுமை இருப்பதேன் என்று நியாயமாக ஒவ்வொருவரும் கேட்கக்கூடியது தான். இதைப்பற்றிப் பின்பு விவரிப்போம். (7) பற்பல ஜந்துக்களின் அங்கங்களைப்பற்றித் தாரதம்மியப்படுத்திப் பரிசோதித்ததில், சிற்சில ஜந்துக்களில் நன்றாக வளர்ந்துள்ள சில அங்கங்கள், மற்ற ஜந்துக்களுள் வளர்ச்சி குன்றி, பிரயோஜனமற்றிருப்பனவாகக் கண்டறிந்துளர். மனிதசரீரத்தில் இம்மாதிரியான உபயோகமற்ற அங்கங்கள் * அனேகம் இருப்பனவாகவும், அவை அனேக தாழ்ந்த ஜந்துக்களில் நன்றாக வளர்ந்து வெகு உபயோகமாக இருப்பனவாகவும் தெரிகிறது. இப்படிப்பட்ட பிரயோசனமற்ற அங்கங்கள் நம்முடைய தேகத்தில் இருப்பதேன்? இவ்வினாவிற்குப் பதிலும் பின்பு கூறுவோம்.

இதுவரையில், மனிதனுக்கும் தாழ்ந்த ஜந்துக்களுள் ஸ்தன்யபான ஜந்துக்களுக்கும் அனேக விஷயங்களில ஒற்றுமையிருப்பதாகக் கண்டோம். இம்மாதிரியான ஒற்றுமைக்குக் காரணமென்ன? மனிதனுடைய அங்கங்களின் அமைப்பு சிலதாழ்ந்த ஜந்துக்களுடையதுபோல் இருப்பதேன்? கர்ப்பப் பையில் கருவளர்ந்து வருகையில் மனிதனுடைய கருவிற்கும் தாழ்ந்த ஜந்துக்களின் (முக்கியமாகக் குரங்கின்) கருவிற்கும் அதிக ஒற்றுமை இருப்பதேன்? கீழ் ஜந்துக்களில் நன்றாகவளர்ந்துள்ள சிலஅங்கங்கள் நம்முடைய தேகத்தில்உபயோகமில்லாமல் இருப்பதேன்? இக்கேள்விகளைக் கேட்பதே முன்காலத்தில் தெய்வத்துரோகமாகக் கருதப்பட்டது. இவற்றுக்கெல்லாம் சாதாரணமாக ஒரே பதில் தான் சொல்லிவந்தனர். என்னவென்றால்: "ஈசுவர சிருஷ்டி அப்படி; கடவுள் ஆறுநாட்களில் இவ்வுலகை சிருஷ்டிக்கும்போது அந்தந்த ஜந்துக்கள் அந்தந்த விதமாக இருக்கவேண்டுமென்று இஷ்டப்பட்டார்; அவ்விதமே சிருஷ்டித்தார்; அவற்றைக் கண்டு ஆனந்தித்தார்!" என்பதே. "சர்வவல்லமையுள்ள கடவுள் மேல்குறித்த அனாவசியமான சில அங்கங்களை தேகத்தில் ஏன் சிருஷ்டித்தார்?" என்று கேட்டால், "ஈசுவர சிருஷ்டியின் மாயையை நம்மால் உணர முடியாது" என்பதே பதிலாயிருந்தது.

---

* இவற்றை அங்கபுச்சங்கள் (Rudimentary organs) என்று சொல்லலாம். மனிதனுடைய சரீரத்தில் சிறுகுடலுக்கும் பெருங்குடலுக்கும் நடுவில் விரல்போன்ற சிறிய உபாங்கம் (Appendix) ஒன்று இருக்கிறது; இது முயல்போன்ற தாழ்ந்த ஜந்துக்களில் நன்றாக வளர்ந்திருக்கிறது. மனிதனுக்கு இது உபயோகமில்லை.

நம்மவர்களுள் இருக்கும் சில அங்க வொற்றுமைகளிலிருந்தும் முகச்சாடைகளிலிருந்தும் அம்மாதிரி ஒற்றுமையுள்ளவர் ஒரே குடும்பத்தினர் என்று நாம சாதாரணமாகத் தெரிந்துகொள்ளுகிறோமென்று முகவில் குறித்தோம். இதுபோலவே, மனிதனுக்கும் நாலுகால் ஜந்துக்களுக்குமுள்ள ஒற்றுமைகளிலிருந்து, மனிதன் ஸ்தன்யபான ஜந்துக்களுக்கு அதிக ஒற்றுமையுள்ள ஒரு ஜந்துவென்று ஜீவதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். இன்னும் ஜந்துவர்க்கத்தில் ஸ்தன்யபான ஜந்துகளுக்குக் கிட்டிய பந்துக்கள் எவையென்று பார்க்குங்கால், ஊர்வன (Reptiles) போன்ற சில தாழ்ந்த ஜந்துக்களென்று தெரிகிறது. இம்மாதிரியாகவே பின்னுக்குப் பரிசோதிக்குங்கால், ஜந்துக்களெல்லாம் 'ஜந்துவர்க்கம்' என்ற ஒரு பெரிய குடும்பமாக இருப்பதாகவும், அதில் வெவ்வேறு ஜாதி ஜந்துக்களை வெவ்வேறு சிறு குடும்பங்களாகச்சொல்லலாமென்றும், இச்சிறு குடும்பங்களில் அனேக ஜந்துக்கள் இருப்பனவாகவும் தெரிகிறது; அவற்றுள் மனிதனும் ஒரு ஜந்துவே என்று ஜீவதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். மேற்கூறிய ஒற்றுமையில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் ஒற்றுமை அதிகமாக இருக்குங் காரணம்பற்றி அவர்களுக்குள் பந்துத்துவம் அதிகமென்று தெரிந்துகொள்வதுபோல், மனிதனுக்கும் எந்தஜந்துவுக்கும்அதிக அங்கவொற்றுமைகள் இருக்கின்றனவோ அந்த ஜந்துவுடன் மனிதனுக்குக் கிட்டினசம்பந்தம் இருப்பதாகத் தெரிந்துகொள்ளலாமல்லவா ? ஆனால் இக்கிட்டின ஜந்து குரங்காக இருக்கிறது. கடவுள் தம் வடிவமாகவும் தம்முடைய பரிசுத்த ஆவியை நாசியில் ஊதியும் சிருஷ்டித்ததாகக் கூறும் மனிதன், ஒரு குரங்குடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறுவது மனிதனுக்கு ஒரு குறைவல்லவா வென்று சொல்லலாம். நாம் அத்தாக்ஷி மூலமாக அறிந்து கொள்ளும் விஷயங்கள், நம்முடைய கவுரவத்துக்கும், பாரம்பரியமாகக் கேட்டுவரும் கொள்கைக்கும் விரோதமாக விருப்பதால், தவறு என்று சொல்லலாமா?

இதிலிருந்து மனிதன் குரங்கின் வயிற்றில் பிறந்தான் என்று நினைக்கக்கூடாது. டார்வின் (Darwin) ஹக்ஸ்லி (Huxley) என்ற இரண்டு ஆங்கில ஜீவதத்துவ சாஸ்திரிகள், மனிதன் உலகின்கணுள்ள ஜந்துக்களில ஒன்றே யாவனென்றும், ஸ்தன்யபான ஜந்துக் குழுவில் ஒன்றாகிய குரங்கு மனிதனை அதிகமாக ஒத்திருப்பதாக

வும் பொது ஜனங்களுக்கு முதலில் தெரிவித்தார்கள். அப்போது சுவபாவமாகவே ஜனங்களுக்கு அவர்களிடம் கோபம் வந்து, அவர்களை நோக்கி, "உம் தகப்பனார் குரங்கின் வயிற்றில் ஜனித்தவரா? தாயார் ஜனித்தவரா? அல்லது உம் பாட்டனாரா?" என்று கேட்டுப் பரிகசிக்க ஆரம்பித்தனர். இப்படிக் கேட்பது சரியான வழக்கு ஆகுமோ? இவர்கள் சொல்வதென்னவென்றால், மனிதன் உள்பட சகல ஜந்துக்களும் தனித்தனியாக (வெவ்வேறு ஜாதியாக) சிருஷ்டிக்கப்பட்டனவல்லவென்பதும், இவ்வுலகின்கணுள்ள பற்பல ஜந்துக்கள் அவ்வவற்றின் வாழ்க்கைக்குத் தகுந்தபடி பற்பல மாறுபாடுகளையடைந்து, அவ்வாறு புது மாறுபாடுகள் கூடின காரணமாகப் புதிய ஜந்துக்கள் என்று சொல்லும்படியான வெவ்வேறு ஜந்து இனங்கள் காலக்கிரமத்தில் உண்டாயின என்பதுமே; இக்கொள்கையைப் பரிணாம வாதம் (Theory of Evolution) என்றும், ஈசுவர சிருஷ்டியால் இவ்வுலகின்கணுள்ள வெவ்வேறு ஜந்து இனங்கள் உண்டாயினவென்பதை சிருஷ்டிவாதம் (Theory of Special Creation) என்றுஞ் சொல்லலாம்.

(இன்னும் வரும்.)

---

* இவ்வியாசகர்த்தர் கூறும் பரிணாமவாதத்தை (Evolution theory), ஆதிகாலத்திலேயே, தமது மூளை வலிமையினால் ஊகித்தறிந்து, சாங்கிய யோகத்தை ஸ்தாபித்த கபிலர் என்பவர் குறிப்பித்திருக்கின்றனர்.

[த—நே; ப-ர்.]

ஹக்ஸ்லியும் பிஷப் வில்பர்போர்ஸும்:—"பிறகு, மமதையோடு தமது எதிரியை நோக்கிப் புன் சிரிப்புடன் திரும்பி: "தங்கள் பாட்டனார் வழியிலோ பாட்டியார் வழியிலோ குரங்கிலிருந்து தாங்கள் உற்பவித்தது?" என்று பிஷப் கேட்டார். அதற்கு ஹக்ஸ்லி பதில் சொன்னதாவது:—"என் வமிசத்து பூர்வ புருஷர் ஒரு குரங்காயிருந்தால், அது எனக்கு அவமானமாகாது; ஒரு மனிதன் மகாமேதாவியாயிருந்தும் உண்மையை ஒளிக்க முயலுவானாயின், அவன் உறவையே நான் அவமானமாய் மதிப்பேன். தாழ்ந்த அறிவும் கூன உடலும் உடையதாய், நம்மைக்கண்டு பல்லிளித்துக் கீச்சிடும் ஏழைப் பிராணியாகிய குரங்கோ; அல்லது, சிறந்தபுத்தி வன்மையும் உயர்ந்த ஸ்தானமும் உள்ளவராக இருந்தும், உண்மையை நாடி உழைப்பவரை, (தாம் கண்டுபிடித்த உண்மைகளைப் பரவச்செய்ய ஒட்டாமல்) தமது சக்தியால் அடக்கி நிந்தை செய்ய முயலும் ஒரு பெரியவரோ, உன் குலத்தின் மூல புருஷராக இருத்தல் உனக்கு இஷ்டம் என்று என்னைக்கேட்டால், நான் யோசித்தே விடை கூறவேண்டும்" [Huxley's *Life and Letters.*]

ஆன்றோர் ஆற்றுப்படை. *

"நமது வாழ்நாளில் அரிய செயல்களைச் செய்து நாமும் மேன்மையாக வாழலாம்; அவ்வாறு ஒழுகும் நமது அடிச்சுவடுகள் காலம் என்னும் பாதையில் பதிவாக, நமக்குப் பின்னால் வருபவர் எவரேனும், உலக வாழ்க்கையில் நெறிதவறித் தத்தளிக்கும் பொழுது, நாம் முன்சென்ற அந்தச் சுவடுகளைக் கண்டு, மனம் தைரியங்கொண்டு, அவ்வழியில் நடந்து, நன்மை பெறலாகும் என்னும் உண்மையை, பெரியோரது ஜீவியசரித்திரங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன."

1. தாதாபாய் நௌரோஜி.

"இந்தியாவின் விருத்த மகான்" என்னும் அருமைப் பெயரால் உலகம் எங்கும் நெடுநாள் இசைபெற்றிலங்கி, இந்த வருஷம் ஜூன் மீ 30-ம் தேதியன்று தமது 92-வது வயதில், நிலையாத பொய் உடம்பை விட்டு அழியாத புகழ் உடம்பை எய்திய தேசாபிமானிகள் சிரோமணியான ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி என்பவர், 1825-ம் வருஷம் செப்டம்பர் மீ 4-ம்தேதி யன்று, புரோகித விருத்தியை அநுஷ்டித்துவந்த ஒரு பார்ஸி குடும்பத்தில் பிறந்தார். பார்ஸி சாதியர், ஹிந்துக்கள், மகமதியர், கிறிஸ்துவரைப் போல், வேறொரு மதத்தினர்; அக்கினியைப் புனிதமாக மதிப்பவர்; சோராஸ்தர் என்பவரே அவர்களது பூர்வ மதாசாரியர்; பேர்ஸியாவில் பாரசீக நாட்டில் இருந்து ஆதி மகமதியரின் கொடுமையை அஞ்சி, ஏழாம் நூற்றாண்டில், இந்தியாவின் மேல் சமுத்திரக்கரையில் வந்து அவர்கள் குடியேறினர்; நடை உடை பாவனைகளிலும், நாகரீகத்திலும், ஹிந்துக்களினின்றும் மாறுபட்டவரே எனினும், அக்காலத்து ஹிந்து அரசரால் அபயங்கொடுத்து ஆதரிக்கப்பட்டு, நாளுக்கு நாள், பார்ஸிகள் விருத்தியடைந்து வந்தனர். இக்காலத்தில் அவர்கள் விசேஷமாய் வசிப்பது பம்பாய் நகரமே; எனினும், உலகம் எங்கும் பரவியிருக்கின்றனர். பிச்சைக்காரரும் இச்சை மாதரும் தமக்குள் இல்லையென்று பெருமை பாராட்டும் சாதியினர் அவர். செல்வவளத்திலும், வியாபாரத்

---

* "ஆற்றுப்படை" என்பது தமிழ்ப் பிரபந்தங்களில் ஒருவகை; "வழிப்படுத்துவது" என்பது அதன் பொருள். பெரியோரது சரிதங்களால் ஆகும் இந்நூல், படிப்பவரைப் பெரியோர் சென்ற வழிப்படுத்தும் ஆதலின், இப்பெயர் இதற்கு இடப்பட்டது.

"இந்தியாவின் விருத்தமகான்"

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி

4-9-1825: 30-6-1917.

"எப்பொழுதும் நீங்கள் ஒற்றுமையாயிருந்து, இடைவிடாது முயன்று, சுய ஆட்சியை அடையுங்கள்; அப்பால், வறுமையினாலும் பஞ்சத்தினாலும் தொற்று நோய்களினாலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மடிவதும், கோடானுகோடி ஜனங்கள் அரைவயிறும் கால்வயிறுமாக வருந்துவதும், நீங்கிவிடும். நமது **இந்தியா மாதாவும்** உலகத்தில் செல்வத்திலும் நாகரிகத்திலும் சிறந்த நாட்டினர்கள் தலைவரிசையில், மறுபடியும் பெருமையுடன் வீற்றிருப்பாள்"

திறமையினும், கல்விப் பயிற்சியினும், உத்தமமான பரோபகாரத்திலும், மற்றெல்லா நாகரீகத்திலும், தேச பக்தியிலும், பார்ஸிகளினும் சிறந்தவர் இந்தியாவில் இல்லை என்றே சொல்லலாம். இவ்வளவு மேன்மையுள்ள குலத்தையும், தாம் பிறந்து, முன்னிலும் அதிகம் விளங்க வைத்தனரெனின், தாதாபாயின் பெருமை அளப்பரிதாம் அன்றோ. "விருத்தி" என்னும் பத்திரிகையில், தமது சீவிய விருத்தாந்தத்தை அவரே எழுதி வெளியிட்டிருப்பதை இதன் கீழ் மொழிபெயர்த்தல் பொருந்தும்:

தாதாபாய் நௌரோஜியின் சுவசரிதை.

"நான் சிறு குழந்தையாய் இருக்கும்பொழுது என் மனதில் குடிகொண்ட எண்ணங்களில் ஒன்று, இன்னும் என் ஞாபகத்தில் இருப்பது, என்னவெனில்: என் தந்தை (நாலாவது வயதிலேயே) இறந்துவிட்டபடியால், மற்றுள்ள சிநேகிதர்களைப்போலவே, சந்திரனும், என் மீது பக்ஷமாயிருந்தான் என்பதே. வீட்டு வாயிலில் நான் போனாலும், புழைக்கடையில் போனாலும், அவனும் எப்பொழுதும் என்னுடன் வருவது போலிருந்தது. பிறர் அநுதாபங்கொண்டு என் மேல் பக்ஷமாயிருப்பது, அப்பொழுது எனக்குச் சந்தோஷமாயிருந்தது; இப்பொழுதும், அப்படியே இருக்கிறது.

"என் குழந்தைப் பருவத்தைச் சேர்ந்த மற்றொரு விஷயம், எனக்கு ஞாபகம் இல்லாதது, என் தாயார் சொன்னதைக்கொண்டு கூறுகிறேன். எந்தப் பையனாவது என்னைப்பார்த்து அசங்கியமானபடி பேசினால், "நீ பேசும் கெட்ட வார்த்தைகள் உன்வாயில் தான் இருக்கும்." என்று, நான் பதில்சொல்வேனாம். என் சிறுவயதில், இந்தியப் பந்தாட்டத்தில், எனக்குப் பிரியம் அதிகம்; அதில நான் கெட்டிக்காரன் என்று பெயர் பெற்றிருந்தேன். ஓடிச்சாடி மெய்மறந்து ஆடும் விளையாட்டில், நானும் என் தோழர்களும், வெயிலின் கொடுமையையும் பாராட்டுவதில்லை; நடுப்பகலில் சிற்றுண்டி உண்பதற்கென்று விடும் அரைமணி நேரத்திலும் கூட, நாள்தோறும் மைதானத்தில் நாங்கள் பந்தாடுவது வழக்கம்.

"பெருக்கல் வாய்பாட்டிலும் மனக் கணக்கிலும் சமர்த்தனாயும், பார்ப்பவர் கண்ணுக்கு அழகிய சிவந்த மேனிச சிறுவனாயும் நான் இருந்தமையால், நான் முதலில் படித்த பள்ளிக்கூடங்களில், வந்தவர்களுக்கெல்லாம் என்னை ஓர் அதிசயக் காட்சிப் பொருள் போல்

காட்டுவது வழக்கம். விசேஷ காலங்களில், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் எல்லோரும் வெளியே ரஸ்தாவின் பக்கத்தில் வரிசையாய் நிறுத்தப்படுவர்; ஊராரும் வந்தவர்களும் கூட்டமாய்ச் சூழ்ந்து நிற்பர்; அப்பொழுது, நானும் என்னைப் போன்ற சிறுவர் சிலரும், வெகு சுறுசுறுப்பாய் மனக்கணக்குகள் போட, நாங்கள் கூறும் விடைகளைக் கேட்டவரெல்லாம் அதிசயித்துக் கரகோஷம் செய்வர்.

"என் சிவந்த மேனிக்காகவும், என் சிறிய அவயவங்களின் வடிவழகுக்காகவும், கலியாணங்களிலும் ஊர் கோலங்களிலும், இங்கிலீஷ் சேனாதிபதி, கப்பற் படைத்தலைவர், அல்லது இந்திய ராஜாக்களைப் போல எனக்கு ஆடம்பரமான உடையை உடுத்தி, அலங்காரமாக என்னை உடன் அழைத்துப் போவதுண்டு. இவ்வாறு அரங்கேற்றிக் காட்டப்பட்ட என்மேல் பக்ஷமுள்ள பெற்றோரும் நண்பர்களும், "என் அருமைத் துரையே இவன்" என்று, என்னைக் கண்டு மகிழ்ந்துரைப்பர். துரைமாரின் சீமையான இங்கிலாந்தில் என் வாழ்நாளில் பெரும்பாகத்தைக் கழித்து, உண்மையாகவே அவர்கள் உடையையும் உடுத்துப் பிற்காலத்தில் வாழ்வேன் என்று, நான் அக்காலத்தில் சொப்பனத்திலும் நினைத்ததில்லை. அந்த ஊர்கோல நாள்களும்; இங்கிலீஷ் ராஜ சமூகத்துக்குரிய உடையையும், இதர ஆடைகளையும் அப்போதைக்கப்போது தரித்ததினால் என் குழந்தை மனத்தில் உண்டான சந்தோஷமும்; பிற்காலத்தில், மெய்யாகவே ராஜ சமூகத்துக்குரிய ஆடையை உடுத்து, ராஜரீக வித்தியாசாலை நிர்வாக சபையாரில் ஒருவனாக, அந்த வித்தியாசாலையை அரங்கேற்றும் பொருட்டு விஜயஞ் செய்த விக்டோரியா மஹாராணியாரை நான் வரவேற்கச் சென்ற பொழுது, என் ஞாபகத்துக்கு வந்தன. "இதோ! இப்பொழுது, மெய்யாகவே, நான் ராஜ சமூகத்தினரில் ஒருவனாயிருக்கிறேன்" என்னும் எண்ணம் என் மனதில் அப்பொழுது உதித்தது, எனக்கு நன்று ஞாபகமிருக்கிறது.

"நான் சிறுவனாயிருக்கும்பொழுது, என் இனத்தார் பலர் கூடிக் கேட்க, "ஷாநாமா" என்னும் பாரசீக காவியத்தை, குஜராத்தி பாஷையில வாசிப்பதில, எனக்கு அதிக சந்தோஷம். அவ்வாறு நான் "ஷாநாமா"வை அடிக்கடி வாசித்தது என் இயற்கைக் குணத்தைப் பெரும்பாலும உருச்செய்து பண்படுத்தி உதவியது என்று, கூறவும் வேண்டுமோ?

"எவ்வளவு முக்கியமான பலன்கள் அற்ப விஷயங்களிலிருந்தும் உண்டாகின்றன! சென்ற நூற்றாண்டின் இருபத்தைந்தாம் வருஷங்களில், "சுதேச கல்விச்சங்கம்" என்னும் சபை ஒன்று, பம்பாய் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தார், இரண்டு பிரிவாக, இங்கிலீஷும் தாய் பாஷையும் கற்றுக் கொடுக்கும் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினர். நான் கற்றுவந்த திண்ணைப் பள்ளி உபாத்தியாயருக்கு, அச்சங்கத்தாரின் முயற்சிகளைப் பற்றி அதிகம் தெரியாது; எனினும், துரைத்தனத்தார் ஆதரவுடன் ஏற்பட்டது அந்தப் பள்ளிக்கூடம் என்பதை அவர் அறியவே, தமது மகனை அதற்கு அனுப்பியதுமன்றி, என்னையும் அதற்கு அனுப்பும்படி என் தாயாரைத் தூண்டினார். என் உயிர் வாழ்க்கையில் நிகழ்ந்த யாவற்றுக்கும் இதுவே அடிப்படையாயிற்று. அப்பொழுது, கல்விகற்கும் மாணவர் சம்பளம் ஒன்றும் கொடுக்க வேண்டுவதில்லை. இக்காலத்தில் உள்ள பள்ளிச் சம்பளம் அப்பொழுது ஏற்பட்டிருந்தால், என் தாயாரால் அதைக் கொடுத்திருக்க முடியாது. இந்த சம்பவத்தால்தான், சம்பளமின்றி இலவசமாகவே கல்வி புகட்டப்படவேண்டும் என்று, நான், எப்பொழுதும் பரபரப்புடன் பரிந்து பேசுபவனாகி விட்டேன். ஏழையின் மகனாயினும் சரி, தனவான் மகனாயினும் சரி, ஒவ்வொரு குழந்தையும் தன் சுய புத்திக்கு ஏன்றமட்டும் கல்வியறிவை அடையும் சௌகரியம் நாட்டில் ஏற்படவேண்டும் என்பது என் கொள்கை.

"என் ஆத்மா விழித்துக்கொண்டு, நல்வழியை நாடத் தொடங்கியது, எனது பதினைந்தாவது பிராய முதல். ஒரு நாள், ஒரு ரஸ்தாவில் நடந்து செல்லும்பொழுது, ஓர் இடத்தை அடைந்தவுடன், இனி ஒரு பொழுதும் இழிவான வார்த்தைகள் பேசுவதில்லை என்று, நான் எனக்குள் சபதம் செய்துகொண்டது, நேற்றுப்போல் இன்னும் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று தொட்டு, எனது கல்விப் பயிற்சி வளர்ந்தேற வளர்ந்தேற, இதைச் செய்வது, அதைச் செய்வதில்லை, என்று நான் பலபிரதிக்கினைகள் செய்யலானேன்; அவ்வாறே ஒழுகி, அந்தச் சபதங்களை நான் தவறாது சாதித்திருக்கிறேன் என்பது மெய்யே. என் சிறு பிராயத்தில், ஒவ்வொருநாளும், இரவில் சாப்பிடுமுன், (சாதியாசாரப்படி) நான் சிறிது மதுபானஞ் செய்வது வழக்கம். ஒரு நாள் வீட்டில் மது இல்லாமையால், எதிரிலுள்ள கடைக்குச் சென்று மதுபானம் செய்துவரும்படி, என்னை அனுப்பி

னர். மதுக்கடையில் அன்று எனக்குண்டான வெட்கத்தையும் அவமான உணர்ச்சியையும், நான் எந்நாளும் மறவேன். போதும், போதும் என்றாய் விட்டது; அப்பால், நான் மதுக்கடையின் முகத்தில் என்றும் விழித்ததேயில்லை. நான் சேர்ந்த கல்விச்சாலையில், ஐரோப்பிய ஆசிரியர் இருவர் இருந்தனர். ஒருவர் இலக்கியங்களும், மற்றவர் கணித சாஸ்திரமும் போதித்து வந்தனர். அபிப்பிராய பேதங்களினால் அவர்களுக்குள் ஏதோ மனஸ்தாபம் உண்டாகவே, அவர்கள், பள்ளி மாணவர்கள் எல்லோரையும் இரண்டு வகுப்பாய்ப் பிரித்து, ஆளுக்கு ஒரு வகுப்பாக எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுக்கத் தலைப்பட்டனர். அவர்களில் ஒருவர் வெகு கண்டிப்பான போதகர்; மற்றவர், முற்றிலும் வேறுமாதிரி. நான் பின்னவர் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அவர், தம் மாணவர்களைத் தங்களிஷ்டம் போல் நடக்க விட்டுவிட்டார்; ஆயின், நான் வீண்பொழுது போக்க விரும்பவில்லை. எந்த விஷயத்திலாவது சுறு சுறுப்பாயிருக்க விரும்பினேன். பாடங்களைப்பற்றியோ எவ்விதமான நிர்ப்பந்தமும் ஏற்படவில்லை. ஆகவே, வேறு வேலையை நாடலானேன். எனக்கு ஞாபகசக்தி பலமாயுண்டு; ஒருமுறை கேட்ட கதையை, வார்த்தைக்கு வார்த்தை, அணுவும் தவறாமல் மனப்பாடமாய் ஒப்பிப்பேன்; எண்ணிறந்த கதைகளும் எனக்குத் தெரியும். ஆகவே, பள்ளிக்கூட நேரத்தில் பெரும்பகுதியை, கேட்டவர் மெச்சி ஆச்சரியப்படும்படி, என் சகபாடிகளுக்குக் கதை சொல்லிக் கழித்தேன். பள்ளிக்கூடத்தில் சிக்ஷை நடந்த சீர், நாங்கள், அடிக்கடி, ஒருவரிடமும் கேளாமல் வெளியே சென்று, நாள் முழுதையும் விளையாட்டில் செலவிடுவோம். இவ்வாறாக, சுமார் ஒருவருஷகாலம், ஒழுங்கான படிப்பின்றிக் கழிந்தது. ஆயினும், கதையும் விளையாட்டுமாய்க் கழிந்த அந்த வருஷம் கூட, எனக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை என்று கூற ஒண்ணாது: கதை சொல்லும் வன்மையும், விளையாட்டுக்களில் என் சாமர்த்தியமும், சிறுவர்களுக்குள் என்னை ஒரு தலைவனாகச் செய்தன; அப்படிப்பட்ட முதன்மை ஸ்தானத்தால் உண்டாகும் அடக்கத்தையும் ஆண்மையையும் நான் அடைந்தேன்.

"பள்ளிக்கூடப் பரீக்ஷைகள் ஒன்றில், "குறுக்குக் கணக்கு வாய்பாட்டை" மனப்பாடம் செய்திருந்த என் சகபாடி ஒருவன், நான் எதிர்பார்த்திருந்த வெகுமானம் ஒன்றைப்பெற்றது, எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆயின், பரிசுகளை அளிக்கும் காலத்தில், புஸ்தகத்தில்

"இல்லாத கணக்கு வினுக்களை வாய்மொழியாய்க் கேட்கவே, அவன் தத்தளித்துத் தவறி விட்டான்; அந்த சமயத்தைக் கண்டு கொண்டு பிள்ளைகள் வரிசையில் நின்ற நான் முன்னேடிச் சென்று, கேட்ட வினுக்களுக்கு விடை யளித்தேன். அப்பொழுது, அந்த சபையிலிருந்த இங்கிலீஷ் கனவான் ஒருவர், உடனே எனக்கு ஒரு பரிசளித்தார்; அந்த சபையில் வந்திருந்த பாஸ்டன் துரைசானி, தேச சஞ்சாரம் செய்து வருபவள், "மேல் இந்தியா" என்று தான் எழுதி வெளியிட்ட புஸ்தகத்தில், இந்த சம்பவத்தைக் கூறியிருக்கிறுள். என் சிறுவயதில் நிகழ்ந்த சம்பவங்களின் விருத்தாந்தத்தை, இஃதுடன் நிறுத்தி விடுகிறேன்.

"தாய்மொழியும் இங்கிலீஷும் கற்பிக்கும் பள்ளிக்கூடப்படிப்பு முடிந்தவுடன், நான் எல்பின்ஸ்டோன் கலாசாலையைச் சேர்ந்தேன். அங்கும் என் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்தது. பள்ளிக்கூடங்களில் போலவே, அதிலும் சம்பளம் இல்லை. அம்மட்டோ: உபகாரச் சம்பளம் பெறுபவரே கலாசாலையைச் சேரலாம் என்றிருந்தது; அதிர்ஷ்ட வசத்தால், அப்படிப்பட்ட நன்கொடை யொன்று எனக்குக் கிடைத்தது.

"இயற்கையில் அமைந்த எனது குண குணங்களைப்பண்படுத்தி எனது பிந்திய வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் முக்கிய காரணமாயிருந்த புஸ்தகங்களில், "ஷாநாமா" ஒன்று; இக்காலத்தில் நான் வாசித்த "சோராஸ்திரியரின் கடமைகள்" என்னும் குஜராத்திப் புஸ்தகம் ஒன்று. மனம்வாக்கு காயங்களில் எப்பொழுதும்பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்பதே அது கூறிய உபதேசம். ஆயின், நான் அதிகம் படிக்க நேர்ந்து, மனம் ஈடுபட்டு நான் அதிகம் அநுபவித்தவை, இங்கிலீஷ் இலக்கியங்களே. வாட்ஸ்என்பவர் இயற்றியுள்ள "மனப்பயிற்சி" என்னும் கிரந்தம், என்வசன நடையையும் சித்த விருத்தியின் போக்கையும் ஒழுங்கு படுத்தியது: ஒருசொல் போதுமான இடத்தில் இரண்டுரைத்து மிகைபடக் கூறுவதில்லை; எண்ணுவதும், பேசுவதும் எழுதுவதும் எப்பொழுதும் தெளிவாயிருக்கவேண்டும்,என்றுதீர்மானித்துக்கொண்டேன்;ஆகவே, பகட்டான அலங்காரங்களையெல்லாம் அடியோடு நீக்கிவிட்டேன். கல்விப் பயிற்சி அதிகரிக்கவே, மனுேவிருத்தியும் வாவா முதிர்ச்சியடைந்து, பலவழிகளிலும் பிரவர்த்திக்கத் தலைப்பட்டது: ஏழையாகப் பிறந்த நான், ஏழைகளின் செலவிலேயே படிப்பிக்கப்பட்டதை நான் உணர்

ந்தேன். கல்விப்பயிற்சியும், அதனால் விளைந்த எல்லா நன்மைகளும், பொது ஜனங்கள் (கொடுத்த வரிப்) பணத்திலிருந்தே வந்தமையால், என்னால் என்றமட்டும் பொது ஜனங்களுக்காக உழைத்து, நன்றிகாட்டுவது என் கடமையென்னும் எண்ணம், என்மனத்திற் குடிகொண்டது. என் வாழ்நாளைப் பொது ஜனங்களுக்காக உழைத்தேகழிக்கவேண்டும் என்று நினைத்தேன். இவ்வெண்ணம் என்மனத்தில் ஏற்பட்டு உருக்கொள்ளும் சமயத்தில், கிளார்க்ஸன் எழுதிய "அடிமைகள் வியாபாரம்" என்ற புஸ்தகத்தையும், ஹௌவார்டு என்ற பரோபகாரியின் சிறிய சரித்திரத்தையும், நான் வாசிக்க நேர்ந்தது. உடனே முடிவாய்த் தீர்மானஞ் செய்துவிட்டேன்: சமயம் வாய்த்தபடி, பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கென்றே என் உயிர் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட்டேன்.

"எல்பின்ஸ்டோன் கலாசாலை மாணவரில் எல்லாம் முதல்வனாக நான் விளங்கியபொழுது, வித்தியா சங்கத் தலைவரான ஸர் எர்ஸ்கின் பெறி என்பவர், என்னைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டவராய், சட்ட நூல்களை ஓதி நான் 'பாரிஸ்டர்' ஆகும் வண்ணம், என்னை இங்கிலாந்துக்கு அனுப்ப விரும்பினார்; என் சாதியினரான பெரியோர்கள் சேர்ந்து பாதிச் செலவுக்கு வேண்டிய பணம் கொடுத்தால், தாம் தமது கையிலிருந்து மற்றப் பாதிப் பணத்தை உதவுவதாக அவர் சொன்னார். நான் இங்கிலாந்து சென்றால், அங்குள்ள கிறிஸ்து மத போதகர் வலையில் சிக்கி கிறிஸ்துவனாகி விடுவேன் என்று என் சாதியினர் அஞ்சியதால், இது நிறைவேறவில்லை. பல ஆண்டுகள் கழித்து (இங்கிலாந்தில் உள்ள) இந்தியா ஆபிஸில், அவர் இந்தியா சபையின் அங்கத்தினரான பிறகு, ஒருநாள் நான் ஸர் எர்ஸ்கின் பெறியுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, நான் பாரிஸ்டராகியிருந்தால் எவ்வளவு பொது நன்மைக்காக உழைத்திருக்க முடியுமோ அதினும் அதிகமாகவே என் வாழ்நாள் தேச கைங்கரியத்தில் கழிந்து வருவதால், தாம் முதலில் கொண்ட உத்தேசம் சித்தி பெறாதது நலமாயிற்றென்று, அவர் கூறினார்.

"ஜீவனோபாயத்தின் பொருட்டு யாதானும் ஒரு முயற்சியை நான் மேற்கொள்ளும் காலம் வந்துவிட்டது. சர்க்கார் வேலையில் அமராது மயிரிழையிலே தப்பினேன். பம்பாயில் வித்தியாலாகாவின்

"காரியதரிசி என்மேல் அபிமானம் வைத்து, சர்க்கார் காரியதரிசிகள் ஆபீசில் எனக்கு ஓர் உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார். இதை நான் பேரதிர்ஷ்டமாகவே நினைத்தேன். ஆயினும், நல்லவேளை, சில காரணங்களால் அந்த வேலையை நான் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை; அவ்வண்ணம் அவ்வேலை தவறியது உண்மையில் எனது பெரும் பாக்கியமே. இல்லாவிடின், சர்க்காரில் ஒரு கீழ் உத்தி யோகஸ்தனாகவே என் வாழ்நாளை யெல்லாம் நான் கழிக்க நேர்ந் திருக்கும். 1855-ம் வருஷத்தில், நானும் மற்றிருவரும், "காமா அண்டு கம்பெனி" என்னும் பெயரால், லண்டன் மாநகரில், முதல் முதல் ஓர் இந்திய வர்த்தகக் கூட்டத்தை ஏற்படுத்தச் சென்றோம். அதற்குமுந் திய ஆறு ஏழு வருஷங்களையும், ஆசார அனுஷ்டான சம்பந்தமாயும், கல்வி போதிக்கும் முறைகளிலும், இராசாங்க விஷயமாயும், மத சம் பந்தமாயும் பலவகைச் சீர் திருத்தங்களை நாடிய முயற்சிகளில், ஓய்வு ஒழிவின்றி உழைத்துக் கழித்தேன். ஆ! ஆ! அந்தக் காலமே காலம்!

"பெண்கல்வி, பகிரங்கமான பொதுக்கூட்டங்களிலும் சபைகளி லும் ஸ்திரீ புருஷர் சாதாரணமாய் உறவாடிப் பழகுதல், குழந்தை களுக்கேற்ற பள்ளிக்கூடங்கள், மாணவர் புத்தகசாலைகள், சாஸ்திரப் பயிற்சிச் சங்கங்கள், தாய் பாஷை மூலமாய் அறிவைப் பரவச் செய் யும் சங்கங்கள், பார்ஸி சாதியர் சீர்திருத்தம், சிசுவிவாக கண்டனம், ஹிந்து விதவைகள் புனர் விவாகம், பார்ஸி மதத்திருத்த சங்கம் போன்ற ஆராய்ச்சிகளிலும் சங்கஸ்தாபனங்களிலும் முயற்சிகளிலும், கல்லூரியை விட்டுப் புதிதாய் வெளியேறிய வாலிபர் சிலர், சில விஷயங்களில் மூத்தோர் உதவியைப் பெற்றும், சில விஷயங்களில ஸர் எர்ஸ்கின் பெரி, ஆசிரியர் பாட்டென் முதலியோர் நன்மதிப் பையும் ஆதரவையும் கொண்டும் உழைக்கலானோம். எல்பின் ஸ்டோன் கலாசாலை கொடுத்த இங்கிலீஷ் கல்விப் பயிற்சியின் முதல் பலன்கள் அவ்வண்ணம் இருந்தன.

"ஆம், என் வாழ்நாளில அந்தப் பாகத்தை இப்பொழுது திரும்பி நோக்குகையில், என் மனம் மகிழ்ந்து, கர்வம் அடைகின்றது; பொது ஜனங்களுக்குரிய கடமையை நிறைவேற்றிய திருப்தியால் என் மனம பூரிக்கின்றது. ஆம, என் யௌவன பருவத்தைச் சேர்ந்த அந்த நாள்கள் என் மனக்கினியவே; நினைக்குந்தோறும என் மனத் துக்கு சந்தோஷத்தைக் கொடுப்பனவே. என் வாழ்நாளின் முற்பகு

“றியில் நிகழ்ந்த சம்பவங்களில் எல்லாம் பெரியது, என் அருமைக் கலைத் தாயான எல்பின்ஸ்டோன் கலா சாலையில், கணித பதார்த்த சாஸ்திர போதகராக நான் நியமனம் பெற்றதே. “எல்பின்ஸ்டோன் போதகர்” என்ற பட்டத்துடன், இந்தியா தேச முழுமையும் முதல் முதல் போதகர் ஸ்தானத்தைப் பெற்றவன் நானே. அதுவே எனக்கு எல்லாப்பட்டங்களிலும் அருமையானது; எல்லா கண்யங்களுக்கும் மேலான கண்யம். எனக்கு அதில் அளப்பரிய ஆனந்தம்; இன்று மட்டும், என் சகபாடிகள் மாணவர்களில் அநேகர், என்னை “தாதாபாய் போதகர்” என்றே அழைக்கின்றனர்.

“என் வாலிபத்தில் நான் விதைத்த வித்துக்கள், என் சுய நாட்டாரின் அன்பும் நன்மதிப்புமாக, ஏராளமான பலன்களை உதவியிருக்கின்றன. “இந்தியாவின் விருத்தமகான்” என்று அழைக்கப்படுவதினால் என் மனம் மகிழ்ச்சியுறுவது, தற்பெருமை யாகுமோ?

“இல்லை; எனது சுதேசத்தாரின் நன்றியறிவையும் தயாளகுணத்தையும் அன்பு மிகுதியையும் தெளிவாய் நிரூபிக்கும் அந்தப்பட்டம் தான், நான் அதற்குத் தக்கவனாயினுமே ஆகாவிடினுமே, இந்த வாழ்க்கையில் நான் பெறக்கூடியவற்றில் எல்லாம் சிறந்த வெகுமானம். என் வாழ்நாளைத் திரும்பவும் வாழ்ந்து கழிக்க நான் விரும்புவேனோ என்று ஒரு நண்பர் என்னைக் கேட்டார். அதற்கு நான்: “ஆம்; எடுத்த காரியம் கைகூடாமல் பலமுறை ஏமாறியும், இடுக்கண்களாலும், நான் வருந்தி யிருக்கிறேன் என்பது மெய்யே எனினும், அவை யாவற்றையும் திரும்பவும் அநுபவித்து வாழ விரும்புவேன்” என்று விடை அளித்தேன்.

“நான் இத்துடன் நிறுத்தவேண்டும். ஆயின், இந்த விருத்தாந்தத்தில் கடைசியாய்க் கூறுகிறேன் எனினும், யாவற்றுக்கும் முதலானவளைப்பற்றி, அதாவது என் தாயாரைப்பற்றி நான் சிறிது கூறவேண்டும். நான் அவளுக்கு ஒரே குழந்தை; எனது நாலாவது வயதிலேயே என் தந்தை இறந்து விட்டார்; எனினும் (எங்கள் சாதியாசாரப்படி மறு விவாகம் செய்து கொள்ளாமல்) அவளாகவே மனமுவந்து விதவையாகவே யிருந்து, உலகத்தில் நானே ஒரு கதியாக, என் முகம் பார்த்து வாழ்ந்து வந்தாள். அவள் தன், சகோதரன் உதவியைக் கொண்டு, தன் மகனுக்காக உழைத்துப் பாடு பட்டாள். எழுதப் படிக்கத் தெரியாதவளே எனினும், என்மீது பேரன்பு கொண்

"டவளே எனினும், அவள் புத்தியுள்ள தாயாக ஒழுகிவந்தாள்: என்னைச் சூழ்ந்துள்ள கெட்ட சகவாசங்களால் நான் துன்மார்க்கனுகி விடாத வண்ணம், என்னைத் தன் கைக்குள் வைத்துக் காப்பாற்றினாள். அக்கம் பக்கம் வீட்டாரெல்லாம் அவள் புத்திமதியை நாடி வருவர். பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாகப் பெண்கல்விக்காகவும் ஆசாரச் சீர்திருத்த சம்பந்தமாகவும் நான் உழைத்த முயற்சிகளில், தன் முழு மனதோடும் அவள் எனக்குத் துணை நின்று உதவி செய்தாள். நான் இப்பொழுது இருக்கும் வண்ணம் எனனை ஆக்கிவிட்டவள் அவளே."

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி யெ எழுதிய இந்த விருத்தாந்தத்தில் வாராத சில விஷயங்களை இனிக் கூறுவோம்.

1845-ம் வருஷத்தில் அவர் படிப்பு முடிந்தது; 1850-ல் அவர் எல்பினஸ்டோன் கலாசாலையில் உப போதகராக நியமிக்கப்பட்டார்; பின்பு போதகராக வேலை பார்த்தார்; 1854-ல் அவ்வேலை ஸ்தாயமாயிற்று; ஆயின், 1855-ல் அவர், தாமும் ஒரு பங்கு கொண்டிருந்த காமா அண்டு கம்பெனியார் வியாபார விஷயமாக, ஆசிரியத் தொழிலை நீங்கி, இங்கிலாந்து சென்றார். இதன் இடையில் பொது நன்மைக்காக அவர் உழைத்த உழைப்பில் ஏற்பட்ட சங்கங்கள், பள்ளிக்கூடங்கள், சபைகளிற் பல இன்னும் நடைபெற்று விளங்குகின்றன. இங்கிலாந்தில் அடி வைத்தது முதல், நம்மையாளும் அங்குள்ள ஆங்கிலேயருக்கு நமது நாட்டு விஷயங்களையும் குறைகளையும் எடுத்தோதியும், அதன்பொருட்டு "லண்டன் இந்திய சபை," "கிழக்கு இந்தியச சங்கம்" என்னும் சங்கங்களை ஸ்தாபித்து நடத்தியும், நமது தேசாபிவிருத்திக்காக உழைத்து வந்தார். 1862 முதல் அவர், காமா அண்டு கம்பெனியை விட்டுத், தாம் தனியாக வியாபாரம் செய்து வந்தார். 1866-ல் ஒரு ஹிந்து கனவானுக்குப் பொருள் உதவி அவரைக் காப்பாற்றியதால், தாதாபாய் மிக்க கஷ்டத்தை யடைந்து, அவர் வியாபாரம் முழுகிப் போகும்படி ஆயிற்று. அவர் வாக்குறுதியும் நாணயமும் அத்தருவாயில் கையுதவின: கடன்காரர் ஒருவரும் நிர்ப்பந்திக்காமல் உதவி செய்தனர்; யாவர்க்கும் அவரிடம் முழுநம்பிக்கையாதலால் ஒருவரும் பயப்படவுமில்லை, அவரைச சமுசயிக்கவுமில்லை. முடிவில், தம் கடன்களை இறுத்துத் தம்மை கௌரவமாய நிவர்த்தி செய்து கொண்டு, 1869-ல் அவர் பம்பாய்க்குத் திரும்பி வந்தார். இந்தியா

வின் பொருட்டு இங்கிலாந்தில் அவர் உழைத்ததை நினைந்து, பெரியோர்கூடி அவரை நல்வரவேற்று, ஒரு பை பணம் சேகரித்து அவருக்குதவி, அவர் உருவப் படமும் எழுதிவித்து, அவரைப் பலவாறு உபசரித்தனர். அப்படிக்கிடைத்த திரவியத்தை அவர் பொது நன்மைக்காகச் செலவிட்டாரேயன்றித், தமக்கென்று வைத்துக்கொள்ளவில்லை. பிறகு, அவர் இங்கிலாந்து திரும்பி, இந்தியாவின் ஏழைமையை ருசுப்படுத்திச் சில புஸ்தகங்கள் எழுதி வெளியிட்டு, அதைப்பற்றி விசாரணை செய்த சபையார்முன் சாக்ஷி கூறினர். 1874-ல் பரோடா இராச்சியத்தின் திவானாக நியமிக்கப்பட்டு, அவர் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது, உத்தியோகஸ்தர்கள் நாணயமின்றி லஞ்சங்கள் வாங்கிப் பிழைத்ததாலும் வேறுகாரணங்களாலும் அந்த பரோடா நாடு சீர்குலைந்திருந்தது. அவற்றையெல்லாம், தாதாபாய், இரண்டு வருஷங்களுக்குள் சீர்ப்படுத்திவிட்டு, அப்பால் தம் வேலையை ராஜிநாமாக் கொடுத்து பம்பாயில் வந்து தங்கி, தமது சொந்த நகரத்துக்காகச சிலகாலம் பாடுபட்டு வந்தார். 1885-ம் வருஷத்தில் ஏற்படுத்தி "இந்தியன் நாஷனல் காங்கிரஸ்" என்னும் மகாசபையை முதல் முதல் கூட்டிய நாட்டுத் தலைவருள் அவர் ஒருவர். 1886-ல் அவர் இங்கிலாந்து சென்று அங்குள்ள பார்லிமெண்டில் தாம் மெம்பராகும்படி முயன்றார். அப்பொழுது பலிதமாகவில்லை. அவ்வாண்டின் இறுதியில் இந்தியாவுக்குத் திரும்பி, கல்கத்தா நகரத்தில் இரண்டாமுறை கூடிய இந்தியன் நாஷனல் காங்கிரஸ் சபையில் அக்கிராசனம் வகித்தார். 1887-ல் இராசாங்க முறையைப்பற்றி விசாரிக்க வந்த சபையார்முன் இந்தியாவின் நிலைமையைப்பற்றிச சாக்ஷி கூறிய பின்னர், இங்கிலாந்து திரும்பி, ஐந்து வருஷம் இடைவிடாது பாடுபட்டு, 1892-ம் வருஷத்தில், மத்திய பின்ஸ்பரி மாகாணத்து ஆங்கிலேயரால் தெரிந்தெடுக்கப்பட்டு, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மெம்பரானார். இந்தியாவில் போதகர் ஸ்தானத்தை முதலில் பெற்று, லண்டனில் இந்திய வர்த்தகசாலை முதலில் ஸ்தாபித்தது போலவே, பார்லிமெண்டில் முதலில் மெம்பரான இந்தியர் அவரே. தமக்குறும் கௌரவத்துக்காக அன்றி, இந்தியாவின் நன்மைக்காகவே அப்பதவியை நாடின தாதாபாய், நமது நாட்டுக்காகப் பார்லிமெண்டில் மிகவும் பாடுபட்டுழைத்தார் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அந்த ஆண்டின் இறுதியில் லாகூரில் கூடிய காங்கிரஸ் சபைக்கு, இரண்டாவது முறை அக்கிராசனாதிபதியாக அவர் வீற்

திருந்தார். தமது ஒரே மகனை அப்பொழுதே இழந்து அவர் துயருற்றிருந்தா ரெனினும், தமது கடமையை நிறைவேற்ற லாகூர் சென்றார். பிறகு 1896-ல்கூடிய 'வெல்பிகமிஷன்' என்னும்சங்கத்தில் ஒரு அங்கத்தினராகி, அதன்முன் இந்தியாவின் இராசாங்கச் செலவு களைப்பற்றிச் சாக்ஷிகூறினார். அதற்குள் இங்கிலாந்தில் அவர் கட்சி யார் தோல்வியுற, அவர் பார்லிமெண்டில் மெம்பராக இருந்தமை போயிற்று. பிறகும் இந்தியாவைப் பற்றிய பல சங்கங்கள் முன் சாக்ஷி கூறியும், 1902-ல் இந்தியாவின் ஏழைமையைப்பற்றி ஒரு பெரிய புஸ்தகம் பிரசுரித்தும், 1905-ல் ஆம்ஸ்டர்டாம் என்னும் நகரத்தில் கூடிய குடியாட்சி அபிவிருத்தி சங்கத்துக்கு இந்தியா வின் பிரதிநிதியாகச் சென்று பேசியும், கல்கத்தாவில் 1906-ம் வருஷத்தில்கூடிய "இந்தியன் நாஷனல்காங்கிரஸ்" சபையில் மூன்று முறை அக்கிராசனம் வகித்தும், டலவாறாக உழைத்து வந்தார்.

அப்பால், தள்ளாமையினால், பம்பாய் நகரத்துக்கு அருகிலுள்ள வெர்ஸோவா என்னும் சிற்றூரில் சென்று வசித்து வந்தார். அப் பொழுதும் கூட, ஆதிகாலத்தில் வசிஷ்டர், விசுவாமித்திரர், பாரத் துவாஜர் ஆதிய மகரிஷிகளின் ஆச்சிரமங்களைத்தேடிப் பெரியோர் பலர் சென்றது போலவே, அவரை தரிசிக்கவிரும்பி கவர்னர் முதல் அநேகர் வெர்ஸோவா செல்வதும்; அங்ஙனம் செல்வோர்மூலமாயும் பத்திரிகைகள் வாயிலாயும், அவர் அப்போதைக்கப்போது தமது ஆசிமொழிகளையும் அபிப்பிராயங்களையும் யாவரும் மனந்தளரா திருக் குப்படி வெளியிடுவதும், அவர் பிறந்த நாள்தோறும் நாடெங்கும் விழாக்கொண்டாடுவது மாயிருந்தது. 1916-ல் பம்பாய் சர்வ கலா சாலையார் நியாயவிற்பன்னர்' Doctor of Laws)என்னும் புகழ்ப் பட்டத்தை அவருக்குஅளித்தனர். அதன் பின், தாதாபாய், தாம் சொந்தமாய்ச் சேர்த்துவைத்திருந்த அரிய பெரியபுஸ்தக சாலையைப் பொது உபயோகத்துக்காக, பம்பாய் மாகாணச் சங்கத்துக்குக் கொடுத்து விட்டார். 30—6—1917ல் அவர் பரமபதம் அடைந்தார்

"தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்" என்னும் திருக்குறளுக்கு, ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி யின் சிஷிய சரித்திரத்திலும் ஏற்ற சாக்ஷி கிடைத்தல் அரிது. அவர் புஸ்தகங்களிலிருந்தும் பிரசங்கங்களிலிருந்தும எடுத்துக் கூறப்புகின் மிகப் பெருகும். 1906-ம் வருஷத்தில் கல்கத்தாவில் மூன்றாவது

முறை காங்கிரஸின் அக்கிராசனத்தில் வீற்றிருந்து, அவர், தமது 81 வது வயதில் செய்த பிரசங்கத்தினின்றும் சில வாக்கியங்களை எடுத்துரைத்து, இச்சரிதத்தை முடிப்போம்:—

"இன்னும் எனக்குள்ள சொற்ப வாழ் நாள்களுக்குள் என்ன நல்லதிஷ்டம் நேரலாகுமோ அறியேன். எனது தாய் நாட்டின் மீதும், எனது சுதேசிகளான உங்கள் மீதும், எனக்குள்ள பேரன்பினாலும் விசுவாசத்தினாலும், நான் சில மொழிகள் கூற விரும்புகிறேன்: எப்பொழுதும் நீங்கள் ஒற்றுமையாயிருந்து, இடைவிடாது முயன்று, சுய ஆட்சியை அடையுங்கள்; அப்பால், வறுமையினாலும் பஞ்சத்தினாலும் தொற்று நோய்களினாலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மடிவதும், கோடானுகோடி ஜனங்கள் அரைவயிறும்கால்வயிறுமாக வருந்துவதும், நீங்கிவிடும். நமது இந்தியா மாதாவும், உலகத்தில் செல்வத்திலும் நாகரீகத்திலும் சிறந்த நாட்டினர்கள் தலைவரிசையில், மறுபடியும் பெருமையுடன் வீற்றிருப்பாள்".

உழைப்பு:—"சிறந்த புத்தி சாமர்த்தியம் உனக்கிருந்தால், உழைப்பு அதை விருத்திசெய்யும்; சாதாரணமான புத்தியே இருந்தால் குறையாயுள்ளதை உழைப்பு நிரப்பும்,நல்ல வழியில் உழைக்கும் உழைப்பினால் ஆகாதது ஒன்றுமில்லை; உழைப்பின்றி, என்றும் எதுவுமே கைகூடாது."—

Sir J. Reynolds.

பொதுஜன அபிப்பிராயம்:—"பொதுஜன அபிப்பிராயத்தில் எனக்கு நம்பிக்கைகிடையாது; உலகமெல்லாம் வேறொரு அபிப்பிராயம் கொண்டிருந்தாலும், அதனால் என் கொள்கையை நான் விட்டுவிடமாட்டேன்; அதை மறுபடியும் ஆராய்ந்து, அவசியமாயின், திருத்திக்கொள்ளவே அது காரணமாகும். உலகத்திலுள்ள குற்றங்குறைகளை மூடிவைத்து, பொது ஜனங்களுக்குப் பிரியமான விஷயங்களையே கூறி, அவர்கள் நன்மதிப்பைச் சம்பாதிக்க முயலுவாருடன் கூடி உழைப்பதினும், கழுத்தில கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் இறங்கிவிடலாமென்பது நிச்சயம்." Huxley's *Life and Letters*

ஸ்திரீ சுதந்தரம்.

[ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் எழுதியது.]

பெண்ணாகப் பிறந்தவர் எவரும் எப்பொழுதும் ஆண்பாலார் ஆளுகைக்குட்பட்டு நடக்கவேண்டுமென்பது உலககோட்பாடு. ஒரு ஸ்திரீ பால்யத்தில் தன் தகப்பனுக்கும், விவாகமான பின் தன் கணவனுக்கும், வயது காலத்தில் தன் மகனுக்கும் அடங்கிவாழக் கடமைப்பட்டவளென்பதும், அவளுக்கு ஒரு காலத்திலும் சுவாதந்தரியம் கிடையாதென்பதும் மநுஸ்மருதி. தெய்வத்தைத் தொழாமல் தன் கணவனையே தெய்வமாக எண்ணித் தினமும் தொழுதெழுபவள் மழைபெய் என்றால் பெய்யும் என்பது தமிழ் வேதவாக்கு. இந்தக்கோட்பாடு முற்றிலும் தவறு, மனிதரது வாழ்க்கைச் சீர் திருத்தத்துக்குப் பெருந்தடையாயிருப்பது என்பதை எடுத்துக்காட்டி, இரு பாலாரும் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்ச்சியின்றி சர்வ சுதந்தரங்களையும் ஒத்து அநுபவிக்கும்படி செய்வதுதான் தகுதி என்று நிலை நாட்டுவதே இவ்வியாசத்தின் நோக்கம்.

இவ்வாறு ஸ்தாபிப்பது கஷ்ட சாத்தியமே. பல்லாண்டுகளாக ஏற்பட்ட வழக்கத்துக்கு நேர் விரோதமான ஒரு கொள்கையை ஜனங்கள் எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புத்திபூர்வமாக அது நியாயமெனத் தோன்றினும் அந்நூதனக்கொள்கையை ஏற்று அதன்படி ஒழுக அவர்களுக்கு மனம் இசையாது. இது வழக்கத்தின் பலம் என்பதை அறியாமல், தங்கள் புத்திக்கு நியாயமாகத் தோற்றினும் மனதுக்கு இசையாத கொள்கை இயற்கை விரோதமாயிருக்கவேண்டுமென்று அவர் எண்ணுவர். இதுவுமன்றி, எவ்வித வாக்குவாதத்திலும், ஒன்றை உண்டு என்று பூர்வபக்ஷம் கூறுபவன் அதற்குத் தக்க காரணங்களை எடுத்துச்சொல்லித் தன் சித்தாந்தத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பதும், பிறகு அதை இல்லை என்று மறுப்பவன் அதற்கு எதிரிடையான காரணங்களை எடுத்துக்காட்ட வேண்டுமென்பதும் வழக்கு. ஒருவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டால், அவனைக் குற்றஞ் சாட்டுபவர் முதலில் அக்குற்றத்தை ருசுப்படுத்தக் கடமைப்பட்டவர்; அவ்வாறு அவர் ருசுப்படுத்தாவிடின் அவன் விடுதலை அடைகிறான்; அன்றி, தான் கொலை செய்யவில்லையென்று அவன் முதலில் ஸ்தாபிக்க வேண்டிய அவசியமில்லை. சில மனிதரை அடிமைகளாக்கி ஆளுவது நியாயம் என்று ஒருவன் வாதம் செய்தால், அதற்குத்தக்க அத்தாக்ஷிகளைக்கூறி அதைச்சாதித்தல் அவன் கடமையாகும்; அதை மறுப்பவர் முதலிலேயே அதைத்தவறு என்று ருசுப்படுத்த வேண்டியதில்லை. ஒன்றை உண்டு என்று ஒருவாறு ஸ்தாபித்த பின்பே, இல்லை எனபவர் வாய

Abridged and adapted from J. S. Mill's *Subjection of Women*,

திறக்கவேண்டும். இது யாவரும் ஒப்புத்தக்கதே. ஆயின், நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திலோ, இவ்வழக்கம் தலைகீழாய் மாறியிருக்கிறது. சரியானபடி, மாதர் ஆடவருக்கு அடங்கி நடப்பது தான் நியாயம் என்பது ருசுவான பின் அன்றோ, அக்கொள்கையின் தவறுகளை அதை மறுப்போர் எடுத்துக் கூறவேண்டும்? அவ்வாறின்றி நெடுநாளைய வழக்கத்தால் நடைபெறுவதையே வாதத்தில ருசுக்களுடன் ஸ்தாபிக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டு, இப்பொழுதுள்ள மாதரின் தாழ்ச்சி இயற்கைவிதியன்று, அநியாயமானது, தற்கால நாகரீகத்துக்குப் பொருந்தாதது என்பதை விளக்கிப், பெண்பாலாரும் ஆண்பாலாருடன் சம சுதந்தரங்களுக்கு உரியவர் என்பதை நிலை நிறுத்துவது இவ்வியாசத்தின் கடமையாகும்.

மாதர் தற்சுதந்தரத்துக்கு அருகர் அல்லர் என்னும் கொள்கை நெடுநாளைய உலக வழக்கத்துக்கும், தமது சொந்த அபிப்பிராயத்துக்கும், சௌகரியத்துக்கும் இசைந்திருப்பதால், அதுவே இயற்கை விதி, நியாயமான காரணங்களால் தான் அவ்வாறு ஏற்பட்டிருக்கவேண்டும் என்று, ஜனங்கள் எண்ணுகிறார்கள். ஆயின், உலக வழக்கமும் பொதுஜன அபிப்பிராயமும் என்ன காரணங்களால் இவ்விஷயத்தில் இவ்விதம் ஏற்பட்டன என்பதை நாம் ஆராயுமிடத்து, அக்காரணங்கள் நியாயமாகத்தோன்றா; முற்காலத்தில் மாந்தர் அநாகரீக நிலைமையிலிருந்தபொழுது, அவரது தீய குணங்களால் ஏற்பட்ட காரணங்களே அவை என்பது எளிதிற் புலப்படும்.

ஒரு வழக்கம் உலகமெங்கும் பரவியிருத்தலினின்றும், அவ்வழக்கம் ஜனங்களின் பொது நன்மைக்கு ஏற்றது, அல்லது முன்காலத்தில் ஏற்றதாயிருந்தது என்று நாம் சில வேளைகளில ஊகித்தல் பொருந்தும். அதாவது, ஒரு விஷயத்தைப்பற்றிப் பலவித ஏற்பாடுகள் செய்து பார்த்து,பிறகு, அவற்றில் ஓர் ஏற்பாட்டை ஜனங்கள் பின்பற்றி அதுவே வழக்கமாக உலகமெங்கும் பரவியதெனில், அக்காலத்தில் அதுவே ஜனங்களுக்கு அதிக நன்மை பயப்பதாயிருந்தது என்று நாம் எண்ணலாம். வேறுபலவிதமாக ஜனசமூகத்தை ஒழுங்கு படுத்திப் பார்த்தப்பின், ஆண்பாலார் பெண்பாலாரை அடக்கி ஆள்வது என்ற வழக்கம் ஏற்பட்டிருப்பின், அநுபவத்துக்கேற்ப அதுவே சிறந்த ஏற்பாடு என்று நாம் வாதம் செய்யக்கூடும். பெண்பாலார் ஆண்பாலாரை அடக்கி ஆண்டும், அல்லது இருபாலாரும் ஒத்த சுதந்தரர்களாயிருந்தும், இன்னும் வேறு விதமான பரீக்ஷைகள் பார்த்தும், அப்பால்,இப்பொழுதுள்ளபடி பெண்பாலார் ஆண்பாலாருக்கு முற்றிலும் அடங்கி, பொது விஷயங்களில் தலையிடாமல், ஒவ்வொருத்தியும் தன் வீட்டுப் புருஷருக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டுமென்று ஏற்பட்டு, உலகமெங்கும் அவ்வாறே நடந்து வந்தால், அவ்விதம் பரீக்ஷித்துப் பார்த்த காலத்துக்கு, அவ்வேற்பாடே தக்கது என்பதை ருசுப்பிக்க அதை ஒரு சான்றாக வைத்துக் கொள்ளலாம். அப்படியேயெனினும், முற்கால வழக்கங்கள் தற்காலத்துக்கு இசையாதனவற்றுள் இதுவும் ஒன்றாக இருக்கக்கூடும். —

ஆனால் உண்மையில் இப்படியொன்றும் நடக்கவில்லை. மாதரின் தாழ்ச்சி நிலைமைதான் அநுபவத்துக் கொப்பச் சிறந்த ஏற்பாடு என்று கூறுவோர், அந்நிலைமை ஜனங்களின் அநுபவ பலனாக ஏற்படுத்தப்பட்டதன்று; அந்நிலைமையன்றி, மாதரின் ஏற்றம், மாதரின் சமநிலை முதலியன, எவ்வித நலத்தை அல்லது தீதைப் பயக்கும் என்று ஜனங்கள் இதுவரை அநுபவித்துக் கண்டதே இல்லை; என்பதை மறந்து விடுகின்றனர். மாதர் கீழ்ப்படிந்து வாழ்தலே தக்கது என்ற கொள்கை ஜனங்களின் கண்மூடி நம்பிக்கையால் ஆதரிக்கப் படுவதன்றி, அநுபவத்தில் சிறிதும் ஆஸ்பதமிலது. மெலியார் வலியாருக்கடங்கல் என்னும் இவ்வேற்பாடு, ஜனங்கள் வேண்டுமென்று யோசனை செய்து ஸ்தாபித்ததன்று.

ஆதிகாலத்து ஜனசமூகங்களில், பெண்டிர்க்கு ஆண்பாலார் அவ்வளவு தேக வலிமை இல்லாததால், அவர் விருப்பத்துக்கு இசைந்து அவர்காவலுக்குள் அடங்கிப் பெண்டிர் வாழ வேண்டியதாயிற்று. சட்டங்களும் முறைகளும் புதிய வழக்கங்களை உண்டு பண்ணுவதில்லை. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்" என்பது போல, நடைபெறும் வழக்கத்தை ஒழுங்கு படுத்தி, அதை ஜனங்கள் ஒப்பச்செய்து, அவ்வழக்கப்படி ஒவ்வொருவனுக்குமுள்ள சுதந்தரங்களைக் காத்து, நியாயம் செலுத்துவதே அவற்றின் நோக்கம். ஆகவே, முன்பு பலாத்காரமாக அடக்கியாளப்பட்ட பெண்டிர், பின்பு, சட்டப்படி அடிமைகளாகி விட்டனர். ஒவ்வொரு யஜமானனும் தன் வலிமையால் தன் அடிமையை அடக்கி யாளவேண்டுமென்பது போய், யஜமானர் அனைவரும் ஒன்று கூடித் தங்கள் அடிமைகள் தத்தமக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று சட்டமிட்டனர்.

இவ்வாறாக, முன்காலத்தில், ஆண்களில் பெரும்பாலாரும் பெண்களில் அனைவரும், அடிமைகளாயிருந்தனர். அநேக நூற்றாண்டுகள் சென்று நாகரீகம் முற்றியபின் தான், சிலர், இவ்வேற்பாடு நீதிக்கொத்ததோ, ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ, என்று சந்தேகிக்கத் தலைப்பட்டனர். போரில் தோற்றவரையும், குற்றவாளிகளையும், தாழ்ந்த சாதியினரையும் அடிமைகளாக்கி ஆளும் வழக்கம், வெகுகாலம் வரை, ஆசியா, ஐரோப்பியா, அமெரிகா என்னும் மூன்று கண்டங்களிலும், ஆங்காங்கு நடைபெற்று வந்தது. காலக்கிரமத்தில் நாகரீகம் பெருகி, இப்பொழுது முன்னுக்கு வந்துள்ள பலதேசங்களில் ஆண்பாலாரின் அடிமைத்தனம் முற்றிலும் நிவர்த்திக்கப் பட்டுளது, பெண்பாலாரும் கேவலம் அடிமைகளெனக் கருதப்படாது, ஆண்பாலாரைச் சார்ந்து, அவருக்குட்பட்டு ஒழுக வேண்டியவர் எனக்கருதப் படுகின்றனர். ஆதலின், தற்காலத்தில் மாதரின் தாழ்ச்சி, நியாயமும் உசிதமுமான ஏற்பாடு இதுவேயென்று, ஜனங்கள் தெளிந்து கைக்கொண்டதன்று; முற்காலத்திலிருந்த அடிமைத்தனத்தின் சேஷமே இது. மாந்தரின் அறிவும், ஜீவகாருண்யமும், நியாயவுணர்ச்சியும் விருத்தியாகி, நாகரீகமும் முற்றுவதற்கேற்ப, இவ்வடிமை நிலைமையும் சிறிது மாறுபட்டுவருகிறது; அம்மட்டேயன்றி வேறில்லை.

ஆகவே, இவ்வேற்பாடு இன்னும் நடைபெறுவதால் இதுதான் நியாயம் என்று நாம் ஊகிக்கக்கூடாது. முற்காலத்திலுள்ள அநியாய வழக்கங்கள் பல, தற்கால நாகரீகத்துடன் முரணி, அழிந்து போயினவாக, இவ்வேற்பாடு இன்னும் உலகமெங்கும் நடைபெறுவதால், இதுவே இயற்கை நீதியாயிருக்கவேணடும் என்பர் சிலர். இதை நினைந்தே, இருபாலாருக்குமுள்ள ஏற்றத் தாழ்ச்சிக்கு, ஆடவர் தம் தேக வலிமையால் பெண்டிரை அடக்கி ஆண்டார் என்ற காரணத்தைத் தவிர, வேறுதக்க நியாயம் இருக்கவேண்டும் என்று ஜனங்கள் எண்ணுகின்றனர். இவ்வெண்ணம் நாம் நாகரீகத்தில் முன்னிலும் மேம்பட்டிருப்பதற்கு ஒரு சாக்ஷியாகும். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்னும் நியாயத்தை நாகரீகமடைந்த தேசங்களில் இப்பொழுது ஒப்புக்கொள்வதில்லை. ஜனசமூகத்தில் அம்முரட்டு நியாயப்படி ஒழுகுபவர் சட்டப்படி தண்டிக்கப் படுகின்றனர். வெளிப்படையாக இவ்வாறிருத்தலால, பலத்தால்மட்டும் ஆட்சிஏற்படும் நாள் கழிந்து விட்டது, இந்நாளில் வழங்கும் ஏற்பாடு ஒன்றும் அது காரணமானதன்று, என்று ஜனங்கள் எண்ணுகின்றனர், முதலில் என்னவிதமாக உற்பத்தியாயினும், நாகரீகம் முற்றிய இந்நாளில வழங்கும் ஆசாரம், நியாயமும் உசிதமுமானதாகத்தான் இருக்க வேண்டுமென்று அவர் நினைக்கின்றனர். இப்படி நினைப்பது முற்றிலும் தவறு. என்ன காரணங்களால் முதலில் சிலருக்கு மற்றவர்மேல் அதிகாரம் வாயப்பினும், அக்காரணங்கள் அழிந்து போய் வெகு நாளாகும் வரை, அவ்வதிகாரத்தைக் கைவிடல் தமக்கு அகௌரவ மென்று அதிகாரிகள் நினைத்தலால், அது நீடித்து நிற்கும். தங்கள் வல்லமையினால், தமக்குத் தாமே சட்டப்படி அதிகாரத்தைக் கொடுத்துக் கொண்டவர், அவ்வல்லமையைத்தாம் இழக்கும் வரை அவ்வதிகாரத்தை விட்டுவிட இசைவதில்லை. ஒருவனேயாகுக, அன்றி ஒரு சாதியார், ஒருதேசத்தாராகுக, தாம் தம் வல்லமையாற் கீழ்ப்படுத்தியவர், காலக்கிரமத்தில் தம்மை எதிர்த்து வெல்லும் வல்லமையை அடையும்வரை, தாம் அவர்மேற் செலுத்தும் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க ஒப்புவதில்லை. இவ்வுண்மை சரித்திரம் படித்தவருக்கு எளிதில் விளங்கும்.

(தொடரும்.)

ஸ்திரீகள்:—"ஸ்திரீகளை அலக்ஷியம் செய்வது தான் காட்டு மனிதர்களின் முதல் நியாயம்." H. DeVere Stacpole.

"எல்லாச் சாதியார்களுக்குள்ளும், ஜனசமூகத்தில் ஸ்திரீகள் வகிக்கும் ஸ்தானமே, அச்சாதியாரின் நாகரிகத்தை அளக்கும் கருவி."

Sir G. Robertson.

"ஸ்திரீகள் மனம் வருந்தாமல் புருஷர் கவலையாயிருக்கவேணடும்; ஏனெனில், கடவுள் ஸ்திரீகள் விடும் கண்ணீரைக் கணக்கிடுகிறார்."

The Talmud.

சுவாதிக் கதை.

[ம-ா-ா-ஸ்ரீ அ. மாதவையர் அவர்கள் B. A; எழுதியது.]

"வெயில் தணிந்து விட்டால் போலிருக்கிறதே: புறப்பட்டு மெள்ள மெள்ள ஊருக்குப் போகலாமா?" என்று, எதிர்க்குறட்டுத் திண்ணையில் படுத்திருந்த சங்கரையரைப் பார்த்து, ஐயாவையர் கேட்டார்.

"அடே அப்பா! என்னால் முடியாது; இன்னும் இரண்டு நாழிகை போகட்டும்; முன்னிலவுதானே." என்றார் சங்கரையர்.

ஐயா:—எப்பொழுதும் நீர் இப்படி தான்: நீர் இங்கிலீஷ் படித்து மண்ணை வாரிப்போட்டு உத்தியோகமும் பண்ணின பலன், உம்மால் திருப்தியாய் பிராமணார்த்தம் சாப்பிடவும் முடியாது, ஏதோ காக்கை கொறிக்கிறது போல் சாப்பிட்டால், அப்புறம் அசையவும் முடியாது. பின்னை, ஒரு கதையாவது சொல்லும் கேட்போம்.

சங்க:—கதையா? சுவாதிக்கதை கேட்டிருக்கிறீரா?

ஐயா:—அதென்ன சுவாதிக்கதை? உம்முடைய நக்ஷத்திரமா, அல்லது, உமது அகமுடையாள் நக்ஷத்திரமா சுவாதி?

சங்க.—என் நக்ஷத்திரமில்லை; என் ஆத்துக்காரி நக்ஷத்திரம் சுவாதிதான்; ஆனால் அவளுக்கும் கதைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. கதையைக் கேட்டுவிட்டு, என் அந்தப்பெயர் வந்ததென்று சொல்லும் பார்ப்போம்.

ஐயா:—ஆனால், கதையா, புதிரா அது? எங்கே சொல்லும், கேட்போம்.

சங்க:—நான் சொல்லும் கதையை, "புரட்டாசி சனிக்கிழமைக்கதை" என்றும் சொல்வதுண்டு. ஒரு பட்டணத்திலே ஒரு செட்டியிருந்தான்; அவன் தமிழ் படித்தவன்; கொஞ்சம் கவனசக்தியுமுண்டு; தக்க தனவான். அவனுக்கு நாற்பதாவது வயதில், வயிற்றில ஒரு கட்டி புறப்பட்டது. அது மரணஹேது ஆகிவிடுமென்று அவன் பயந்தான். அந்த சமயத்தில், அவன் பெண்டாட்டி ஒரு நாள் ஒரு சொப்பனம் கண்டாள்: அதாவது, திருப்பதிப் பெருமாள் அவள் முன்தோன்றி, "உன் புருஷன் புரட்டாசி சனிக்கிழமை தோறும், முற்றிலும் பரதேசியைப்போல் ஊரில திரிந்து பிச்சையெடுத்து, அகப்பட்ட அரிசியை அவிஸுவைத்துத்தானும புசித்து நாலு பரதேசிகளுக்கும் அன்ன மிடுவதாகப் பிரார்த்தித்துக் கொண்டால், இந்தக் கட்டி மறைந்துவிடும்," என்று சொன்னதுபோலிருந்தது. இதைக் கேட்டவுடன், செட்டி சந்தோஷமாய ஒப்புக்கொண்டு, அப்படியே பிரதிக்கினை செய்தான். வைத்தியர் மருந்தோ பூச்சோ, மாந்திரிகர் ஊதியதோ, நேர்கடன் விசேஷமோ, கடவுளுக்குத் தான் தெரியும்,

கட்டி சொஸ்தமாய விட்டது. அதன்பின், புரட்டாசி சனிக்கிழமை தோறும், செட்டி, அப்படியே செய்து வந்தான். ஒரு சனிக்கிழமையில் நடந்த விசேஷங்களை நான் சொல்லும் கதை.

ஐயா:—அப்பாடே! பீடிகைதானு இந்த நீளம்!

சங்க—கேளும், குறைக்கதையையும். ஒரு புரட்டாசி சனிக்கிழமையன்று காலையில் ஸ்நானம் செய்து, கந்தல் உடுத்து, துவாதச பட்டை நாமம் போட்டுக்கொண்டு, ஒரு செப்புத்தகழிக்கும் நாமம்போட்டு அதைக் கையில் எடுத்துக்கொண்டு, செட்டி, வீதியில் 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கூவிக்கொண்டு, தனக்குத்தெரிந்த பாடல்களையும் கனத்த தொண்டையில் தோன்றினபடி பாடிக்கொண்டு, பிச்சைக்குப் புறப்பட்டான். இது இப்படி இருக்கட்டும். அந்த ஊருக்குப் புதிதாக ஒரு சப்மாஜிஸ்டிரேட் வந்திருந்தார். அவர் வயது சொல்பம் தான்; பி. ஏ. பட்டம் பெற்றவர்; யோக்கியமான நடத்தையினாலும் வேலைத்திறமையினாலும் சீக்கிரம முன்னுக்கு வந்தவர். ஆனால், சப் மாஜிஸ்டிரேட் வேலை வந்து நாலு வருஷங்களாகியும், அதற்குமேல் போகவில்லை என்று அவருக்கு மனவருத்தம். அவருக்கு வாய்த்த மேல் அதிகாரி, பிடுங்கித்தின்னப் பட்டவன். ஆகவே, ஆடும் கோழியும் தட்டுமுட்டு சாமான்களுமாகக் கொடுத்துக் கொண்டிருப்பவர் மேல் தான அவனுக்குத் தயவும் பிரியமும். இந்த பி. ஏ. சப் மாஜிஸ்டிரேட்டோ, வாங்குவதும் இல்லை, கொடுப்பதுமில்லை. ஆகவே, அவர் தேருக்கு அடைகொடுத்து விட்டான் அவன்; திடீரென்று நின்று விட்டது; மேல் கிளம்பவில்லை. அவருக்கு வயது கொஞ்சமானாலும் சம்சாரம் அதிகம். ஒரு பெண்ணுக்கு விவாகம் நடக்கவேண்டியிருந்தது. செலவுக்கு முட்டாயிருந்தது. அந்த சமயத்தில் ஒரு பெரிய கொலைகேஸ் அவர் முன் விசாரணைக்கு வந்தது. கொலை செய்தவன் பணக்காரன். போலீஸ்காரரை சரிப்படுத்திவிட்டான்; மாஜிஸ்டிரேட்டும் இணங்கிவிட்டால் தப்பித்து விடலாம் என்பது அவன் நோக்கம். ஆகவே, தன்னை விட்டுவிட்டால் இரண்டாயிர ரூபா கொடுப்பதாக, அவர் வீட்டுத் தாப்புக்காரி மூலமாய், அவர் அகமுடையாளுக்கு அவன சொல்லி அனுப்பினான். பணம்என்றால் பிணமும் வாயைத் திறவாதா? இரண்டாயிரம என்றவுடன், அம்மாள் ஆசை கொண்டுவிட்டாள். தன் புருஷனிடத்தில் பலவிதமாய்த் தலையணை மந்திரம் ஓதி, ஆயிரம நியாயங்களையும் எடுத்துக்காட்டி, மெள்ள மூட்டையை அவிழ்த்தாள் அவள். "நீங்கள் ஒருவர் தாம இப்படி வைத்தியக்காரரைப்போல இருக்கிறீர்கள்: என்ன பலனைக் கண்டுவிட்டீர்கள்? ஐந்து வருஷம் ஆய்விட்டது; நூறு ரூபாவுக்கு மேலில்லை. வீட்டுச் செலவுக்கே திண்டாடுகிறது. குட்டி குதிரைபோலாகிவிட்டாள். இன்னும் ஒரு கட்டுக் கட்டவில்லை. போலீஸ் இனிஸ்பெக்டர்கூட, ஆயிரம் வாங்கிக்கொண்டு இணங்கி விட்டாராம்; ஒருவருக்குமே இது தெரியாமல்

காரியத்தை முடித்து விடலாம்; நான் ஜவாப்தாரி அதற்கு." என்று இடித்துப் பேசினன். இதை யெல்லாம் கேட்டவுடன் முன்பே மனம கசந்திருந்த சப் மாஜிஸ்டிரேட் ஒருவாறு இணங்கிவிட்டார். அன்று மூன்றாவது சனிக்கிழமை. ஆபீஸ் கிடையாது; ஆகவே, அவர், தம் வீட்டு முன்னறையில் தனிமையாயிருந்து, கொலைகேஸ் விசாரணை ரிக்கார்டுகளைப் படித்துப் பார்த்துத், தமது முடிவான தீர்ப்பை எழுதிக் கொண்டிருந்தார். சாக்ஷி வாக்குமூலங்களைப் படிக்கப் படிக்க, குற்றவாளி கொலை செய்தது நிஜம்தான் என்று அவர் மனதில் பட்டது; சந்தேகமேயில்லை. பேனு நேராக மேல் ஓடவில்லை. தாம் நேரில் அவன் கொலைசெய்ததைக் காணவில்லையே; சாக்ஷிகள் பொய்யாயிருக்கலாகாதா? எப்படியும் ஒருவன் பிழைத்துத்தானே போகிறான், என்று எண்ணினர். அப்பால் நியாயாதிபதியாக அவர் செய்யவேண்டிய கடமை நினைவுக்கு வந்தது; மனம் தியங்கி ஊசலாடிற்று. அந்தத் தருணத்தில், "குட்டி அதிர்ஷ்டசாலிதான்; இந்தத் தையில் கல்யாணம் செய்து விடலாம்." என்று, அவர் சம்சாரம், வீட்டுக்குள் அவர் தாயினிடம் சொன்னது காதில் விழுந்தது. உடனே அவர் மனது திரும்பி விட்டது. மற்ற மாஜிஸ்டிரேட்டுகள் சிலரைப்போல் ஐந்தும் பத்தும் வாங்காமல், பெரிய கேஸுகளில்மட்டும் வாங்கினலும் போதும்; வருஷத்துக்கு இரண்டு மூன்று கேஸ் போதும்; தரித்திரம் விடிந்துவிடும்; சீக்கிரம் செல்வவானுகிவிடலாம்; அப்புறம் ஒரு பயமுமில்லை; வேண்டுமானல் வேலையையும் ராஜிநாமா கொடுத்துவிட்டு, இஷ்டம்போல் சுகமாய் வாழலாம்; பணம் இருப்பவனுக்கு என்ன பயம்? என்ன விசாரம்? இப்படி மனதைத் தேற்றிக்கொண்டு, குற்றவாளியை விடுதலை செய்து தீர்ப்பெழுதுவதற்குப் பேனவை கையில் எடுத்தார்.

'சுகமெல்லாம் உற்றென் ? சுவர்ணங்கள் பெறறென் ?
சகமெல்லாம் தாழ உயர்ந்தென் ? —மகவான்போல
வானளும் பேறுமே வாய்க்கினுமென் ? தன்னெஞ்சம்
தானறி குற்றப்படின்.' கோவிந்தா ! கோவிந்தா !

என்று கனத்த தொண்டையில் பதங்களைப் பிரித்துப் பிரித்துப் பாடிய பாட்டு, திடீரென்று சன்னலின் வெளிப்புறத்தில் கேட்டது. சப் மாஜிஸ்டிரேட்டு கையிலெடுத்த பேனு, தானகவே நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவர் கை நடுநடுங்கிற்று, நெஞ்சம் பறையடித்தது. சன்னலின் வெளியே செட்டியைக் கண்டு, அவன் சாதாரணப் பிச்சைக்காரன் இல்லை என்பதை சந்தேகித்து, "ஐயா! நீர் யார்?" என்று அவர் கேட்டார். "சுவாமி! பரதேசி; சனிக்கிழமை விரதம், பிச்சைக்கு வந்தேன்" என்றான். செட்டி தமது பெட்டியிலிருந்து கால் ரூபா எடுத்து, சப்மாஜிஸ்டிரேட் சன்னல் வழியாய் நீட்டினர். "சுவாமி! ஒரு பிடி அரிசியே வேண்டும்; எனக்குக் காசு பணம் வேண்டாம்"

என்றான் செட்டி. சப்மாஜிஸ்டிரேட் அதிசயித்து, அவனுடன் சம்பாஷித்து, அவன் விருத்தாந்தத்தை அறிந்துகொண்டார். முடிவில் அவர், செட்டியைப் பார்த்து: "சீதாபிராட்டியார் பிராணத்தியாகம் செய்ய எத்தனிக்கும்பொழுது, அநுமார் வந்து இராம நாமத்தைச் சொல்லிக் காப்பாற்றியதுபோல, இன்று நீர் என்னைக் காப்பாற்றினீர். ஒருநாளும் இந்த நன்றியை மறவேன்" என்று கூறி, அவனுக்கு அமுது படி கொடுத்து அனுப்பினா.

ஐயாவையர்:—கேஸ் என்னவாயிற்று ?

சங்கரையர்:— சப்மாஜிஸ்டிரேட் மேல் விசாரணைக்கனுப்ப, குற்றவாளி தூக்கிலிடப்பட்டான்.

ஐயா:—கதை இவ்வளவு தானா ?

சங்:—என்ன காணும்! செட்டியின் தகழி கால்வாசிகூட நிறையவில்லையே; அவனும் நாலு பரதேசிகளும் அதைக்கொண்டு வயிறு நிறைவதெப்படி?

ஐயா:—ஓகோ! அவன் இன்னும் வேறிடத்துக்குப் போனானோ.

சங்:—அந்தத் தெருக்கோடியில் எல்லப்பமுதலியார் என்று ஒரு தனவானிருந்தார். அவர் முத்து ரத்நங்கள் வியாபாரி; அவரும் அவர் அண்ணன் வீரப்பமுதலியாருமாக, அவர்கள் தகப்பனுக்கு இரண்டே பிள்ளைகள். பெரியவர் செத்துப் போகும்பொழுது, ஒவ்வொரு பிள்ளைக்கும் பதினாயிர ரூபா சொத்துப் பிரித்து வைத்துவிட்டுப் போனார். இரண்டு பிள்ளைகளும் முத்துசலாப வியாபாரம் செய்தார்கள். மூத்தவர்பொருள்எல்லாம் இரண்டுவருஷத்தில் போய்விட்டது; இளையவரான எல்லப்பமுதலியாருக்குக் கனத்தலாபம் கிடைத்து, அவர் லக்ஷ ஸ்ரீமானாகிவிட்டார். மூத்தவருக்குப் பெண்ணும் பிள்ளையுமாகப் பத்து பன்னிரண்டு குழந்தைகள், பெருத்த குடும்பம், அயல் ஊர்சென்று, ஒரு கடையில், சொற்ப சம்பளத்தில், கணக்கு வேலையில் அமர்ந்து, கஷ்டமாய் மானஜீவனம் பண்ணி வந்தார் அவர். இளையவருக்கோ ஒரே பிள்ளை தான; அவனுக்கு லக்ஷ ரூபா சொத்துள்ள இடத்தில் பெண்கொண்டு, அவன் சுகமாயிருந்தான். இந்த உலகத்தில் தான் அவரவர் ஜோலியை அவரவர் பார்க்கிறது என்பது கிடையாதே' ஆகவே, ஊராரெல்லாம், தமது தமையனுக்கு உதவவில்லையென்றும், தமையன் குழந்தைகளுக்கு வேண்டியதைச் செய்யவில்லையென்றும், எல்லப்ப முதலியைப் பழி தூற்றினா. அவரோ, காமி; மகா கஞ்சன்; எச்சில கையால காக்கையை ஓட்டமாட்டார். ஆனால் தமையன் தம்பிகளுக்குள் ஒருவித மனஸ்தாபமும் கிடையாது. ஆகவே, எல்லப்பமுதலியார், தமையன் மேலுள்ள வாஞ்சையினாலும், ஊரார் பழி தூறுவதை அறிந்தும், ஒரு உயில எழுதி, தமக்குப் பிற்காலம், தமது தமையனுக்கு ஆயிர ரூபா கொடுக்கும்படி அதில் நியமித்திரு

தார்; அதற்குமேல் அவர் தாராளம் ஒடவில்லை; அதுவும், தாம் இருக்கும் பொழுது கொடுக்க மனம் இசையவில்லை; அவர் பெணசாதியோ, அதற்கே முணுமுணுத்தாள். இப்படியிருக்கையில், அன்று சனிக்கிழமை காலை, எல்லப்பமுதலியாருக்குத் திடீரென்று வாந்திபேதி கண்டு, நாடி தளர்ந்துவிட்டது. தமையனே ஊரிலில்லை; மகன் பெரிய டாக்டரைக் கூப்பிடச் சென்றிருந்தான்; அவர் மனைவியும் வேலைக்காரியும் மட்டும் அருகிலிருந்து அழுதுபுலம்பிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தமது தமையனாரையும் அவர் மக்களையும் காணவேண்டுமென்ற ஆசையும், அவர்களுக்குத்தாம் ஒன்றும் தக்கபடி உதவவில்லையே என்ற வருத்தமும் அவர் மனதில் உதித்தது. அந்த சந்தாப்பத்தில், சப்மாஜிஸ்டிரேட் கடைசியாகக்கூறிய வார்த்தைகளால் நினைவுற்று, ஏதோ சம்பராமாயணப் பாட்டுகளை திவசமந்திரம்போல் பாடிக்கொண்டு சென்ற செட்டியானவன், எல்லப்பமுதலி வீட்டு வாசலில் வரும்பொழுது:—

"வாசத் தாரவன் மார்பெனும் மலைவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கினன்; உடற்பிறப் பென்னும்
பாசத் தால்பிணிப் புண்ட அத்தம்பியும், பசுங்கண
நேசத்தாரைகள், சொரிதர நெடுநிலம் சேர்ந்தான்"

கோவிந்தா! கோவிந்தா! என்று பாடினான். அவனுக்குமுதலியாரை நன்கு தெரியும். பிச்சையை எதிர்பார்த்து அவன் வாயிலில்நிற்கையில், வேலைக்காரி வெளியே வந்து, "ஐயாவுக்கு உடம்பு சுகமில்லை; இதோ அதோ என்றிருக்கிறது; தங்களை உள்ளே அழைத்துவரச் சொல்கிறார்கள்" என்று கூப்பிட்டாள். செட்டி உள்ளே செல்ல, முதலியார், அவனை நோக்கி, "ஏதோ உடற் பிறப்பென்று பாடினீர்களே, அதென்ன? இன்னொரு முறை சொல்லி, அர்த்தமும் சொல்லுங்கள்" என்று கேட்டார். செட்டி பாட்டை மறுபடியும்சொல்லி, "வாலி, இராமபாணம்பட்டு, இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டவுடன், அவன்மேல் பகை கொண்டு அவனைக் கொல்லும்படி இராமனை ஏவின சுக்கிரீவனும் கூட 'உடற் பிறப்பு' என்னும் பாசத்தால் கட்டுண்டவனாய், கோ என்றலறி அழுதுகொண்டு கீழே விழுந்து விட்டான் என்று கம்பர் கூறியிருக்கிறார்" என்று சொன்னான். உடனே எல்லப்பமுதலியாருக்கும் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிவிட்டது. "நான் பாபி! நான் சர்மி! மோசம் போய்விட்டேன். இந்தப்பண ஆசை, கள்குடி மாதிரிதான்; மேலும் மேலும் வளருவதன்றி, தணிவதில்லை; ஆனால் என்ன? அதோ அந்த மேசைமேலிருக்கும் காகிதம் பேனாவை எடுத்துத்தாருங்களே எழுதுங்கள்; என் மகன் தடை சொல்லவே மாட்டான்" என்று கூறி, முன உயிலை ரத்து செய்து, தம் அண்ணனுக்கு ஐயாயிர ரூபாவும், அவர் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாவும் கொடுக்கும்படி எழுதிக் கையொப்பமிட்டு, செட்டியையும் சாக்ஷிக் கையெழுத்துப் போடச்சொன்னார்.

இதற்குள் அவர் மகனும் பெரிய டாக்டரும் வரவே, அவர் கேட்டுக் கொண்டபடி அவர்களும் வைசயொப்பம் செய்தார்கள். செட்டி அறைக்குள் வந்தவுடன் முதலியாரின் பெண்சாதி நாணத்தால்வெளியே சென்று விட்டது அனுகூலமாயிருந்தது.

ஐயா:—அப்புறம்? அவர் செத்தாரோ பிழைத்தாரோ?

சங்க:—அந்த சத்காரியத்தைச் செய்ததினுலுண்டான மன உத்ஸாகத்தினுலேயே அவர் பிழைத்து விட்டார். பிறகு செட்டி வெளியே வந்து மற்றொரு வீதிக்குச் சென்றுன. அவ்வூர் கள்ளுக்கடையில் வேலாயுத ஆசாரி என்னும் சிற்பாசாரி குடிக்க வந்திருந்தான். அவன் தன் தொழிலில் நிபுணன், சிற்பசாஸ்திர பண்டிதன் என்றே சொல்லலாம்; வேலைத்திறனும் அப்படியே; ஆனல், குடியினல் நாளுக்கு நாள் கெட்டு வந்தான். படித்தவன் ஆனதால்,தான் செய்வது பிசகென்பது அவனுக்குத் தெரியும்; ஆனலும், மனதை அடக்க முடியாமல், நாளுக்கு நாள் அதிகமாகவே குடிக்கலானன். அவன்மாதம்ஐம்பது அறுபதுசம்பாதித்து மேன்மையாய் வாழ்வதுபோய், அவன் பெண்சாதி வீடு தோறும் நெல் லுகுத்திப் பிழைக்கும்படி ஆய்விட்டது. எத்தனையோ முறை, 'இனிக் குடிப்பதில்லை' என்று சபதம் செய்தும் நிறைவேறவில்லை. அன்று காலை அவனுக்கும் அவன் பெண்சாதிக்கும் பெரிய சண்டை; அங்கிருந்து நேராக அவன் மதுக்கடைக்கு வந்திருந்தான். அங்கே வந்து சிறிது குடித்தான பின், கலயத்தைத் தன்முன் வைத்துவிட்டு, அவன் தன் செயலைப்பற்றி யோசிக்கலானன். அப்பொழுது:

> 'தித்தித் தெனக்குத் தெவிட்டாத தாய்ச்,சிறு சீவிதிலே
> சித்திக்கச் செய்அமு தென்னினும், சிந்தை சிதைக்குமெனில்
> ஒத்துட் கொள்ளேன் அதை; ஊத்தை வெறியை, உழக்கி மதி
> மத்திக்கச் செய்துயிர் மாய்க்கும் மதுவையோ மாந்துவதே!'

கோவிந்தா! கோவிந்தா! என்று பாடிக்கொண்டு செட்டி வீதி வழியே போனன. உடனே அவன்பக்கத்தில், ரஸ்தாவில், கள்கலயம் ஒன்று வந்து விழுந்து, உடைந்து, கள்ளும் கீழே பெருகிற்று.வேலாயுத ஆசாரி, வெறி பிடித்தவன்போல வெளியே வந்து, தன் வீட்டை நோக்கி விரைந்து சென்றான். அந்தக்கள் தன்மேல் தெறித்துத் தன்னை அசுத்தமாக்கி, விட்டதாலும், வெயிலேறி விட்டதாலும், செட்டியும் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

ஐயா:—ஆமாம், சுவாதிக்கதை என்று பேர் எப்படி வந்தது?

"எனக்கு நிமந்தரணம் சாப்பிடத் தெரியவில்லை என்றீரே: உமக்கு இதுகூடத் தெரியவில்லையே? குட்டிச்சுவரில்முட்ட வெள்ளெழுத்தா?" என்று சொல்லிப் பரிகசித்தார் சங்கரையர்.

இரசாயன சாஸ்திரம்.

[திருநெல்வேலி ஹிந்து கலாசாலையின் தலைவர்
ம-ா-ா-ஸ்ரீ க. சு. வீரராகவையரவர்கள் M. A; F. C. S; எழுதியது.]

1. பீடிகை.

பூவுலகில் நாம் பிறந்தது முதல் நமது பஞ்ச இந்திரியங்கள் மூலமாய் அறிவைப் பெறுகிறோம். கைக்குழந்தைகள் வெளிச்சத்தைப்பார்க்க விரும்புகின்றன; அதைவிடாது உற்று நோக்குகின்றன. அவை, அழும்பொழுது நமது கையைத்தட்டுவதினாலாவது, பாட்டினாலாவது, தொட்டில் ஆட்டத்தினாலாவது, தம் அழுகையை நிறுத்திச், சத்தத்தை காதுகொடுத்துக்கேட்கின்றன. இன்னும் அக்குழந்தைகளை நாம் கையில் எடுத்து விளையாடும்போது, அவை நாம் நினைத்த வண்ணம் சிரிக்கவோ அழவோ செய்கின்றன. இனிய பதார்த்தங்களை இலகுவாய் உட்கொள்ளுகின்றன; கசப்புப் பொருள்களை விலக்கி விடுகின்றன. இவ்விதமாக ஒவ்வொரு செய்கையிலும் மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஐம்பொறிகளும் நமக்கு ஆரம்பம் முதல் துணைக்கருவிகளாய் நின்று, நமது லோகானுபவ பிரஞ்ஞையை அதிகரிக்கச் செய்கின்றன. பல துளி பெருவெள்ளமாய்ச் சேருவதுபோல, நமது அறிவும் பல் ஆண்டுகளில் பெருகுகின்றது; பல் வேறுவிதமாய் வெவ்வேறு கருத்துக்களடங்கிய ஒருபெரும் காடாய் விடுகின்றது. பசுமை நிறத்தோடுகூடிய மரங்களடர்ந்த காட்டில் ரமிக்கச்செய்வது ஏதோ ஒன்றிருக்க, நாகரீகம் அடைந்த மனிதர்கள் அக்காட்டிற்புகுந்து, அதிலிருக்கும் மரங்களை ஒற்றுமை வேற்றுமை, தீயது நல்லது முதலிய வகையினால் பல பாகுபாடுகள் செய்து, பின் அவற்றை இனவழியாயும் குணவழியாயும் உபயோக வழியாயும் அழகிய வரிசையாய் நிறுத்தி, ஓர் இரமணீயமான தோப்பை ஏற்படுத்துகிறார்கள். அது போலவே நாமும் நமது அறிவைப் பல வகையால் வகுத்துத் தொகுத்து ஒழுங்கு படுத்துகிறோம். அறிவு என்பது யாது? நமது அநுபவத்துக்குள்ளாகும் வஸ்துக்களையும் விஷயங்களையும் ஆராய்ந்து விசாரிப்பதின் பயனும்

விளைவதே அறிவாகும். சிறிய இலைகளையும், நறுமணமிலாது அழகிய வடிவுடைய பூக்களையும், தோலொடு கூடிய நாம்புகள் பிணைந்த புளிக்குஞ் சதையைக் கொண்ட பழங்களையுமுடைய மரங்களை யெல்லாம் புளியமரம் என்று சொல்லுகிறோம். இவ்வாறு பல் வகை மரங்களினின்றும் ஒருவகை மரத்தைப் பிரித்துத் தேர்கிறோம். இதே மாதிரியாகவே, "இது யானை" "இது குதிரை" "இது கழுதை" "இதுவீடு" "இது மேஜை" "இது உப்பு" "இது பொன்," "இதுவெள்ளி,செம்பு," "இது கரி" "இது கந்தகம்,""இது துத்தம்"என்றுபகுத்தறிவைப்பெருக்குகிறோம்.இனி, "கூடாவொழுக்கமாகிய காதல் கவருடல், பொய் மொழிதல் முதலியன கைப்பற்றுகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள்" "கொலை செய்தவன் தூக்கிடப்படுவான்,"

"இளமையும் நில்லா ; யாக்கையும் நில்லா ;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா ;
புதல்வ ருலகம் புதல்வருந் தாரார் ;
மிக்க அறமே விழுத்துணை யாவது." —மணிமேகலை

முதலிய மனிதர்களுடைய சுபாவங்களையும் தர்மங்களையும் விதி விலக்குகளையும் ஐம்புலன்களின் மூலமாயே அறியும்படி நேர்கிறது. ஆகவே நமக்குக் கிட்டும் வஸ்துக்களையும் விஷயங்களையும் ஆராய்ந்து பகுத்து விவரிப்பதின் பயனே அறிவாகும்.

தர்ம விஷயங்களின் பாகு பாடுகளையும் குண விசேஷங்களையும் நீதி நூல்களிலும் தர்க்க சாஸ்திரங்களிலும் தத்துவ விளக்கங்களிலும் பாக்கக் காணலாம். ஈண்டு நாம் வஸ்துக்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

2. உயிருள்ளன—உயிரில்லன.

நமது கண்ணுக்குப் புலப்படும் எல்லா வஸ்துக்களையும் உயிருள்ளன, உயிரில்லன என்று இரண்டு வகையாகப் பிரித்தல் மரபு. கொசு, தவளை, நாய், யானை இவற்றையெல்லாம் உயிருள்ளவை என்று எண்ணுகிறோம். இவை ஓரிடம்விட்டு மற்றோரிடம் பெயர்ந்து செல்லுகின்றன. சில, இடம் விட்டுப் பெயராமலே உயிருள்ளனவாகத் தோன்றுகின்றன. உதாரணமாக, செடிகளும் மரங்களும் இருந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து செல்வதற்குச் சக்தியற்

றனவாயிருந்த போதிலும், அவைகளும் உயிருள்ளனவே. உயிருள்ள பொருள்களில் முதன்மைவாய்ந்த மானிடன், செடி மரங்களைப் போல் பிறந்து வளர்ந்து மறையும் தன்மையையும், பறவை மிருகங்களைப் போல நகருந் தன்மையையும் அடைந்திருப்பதோடு, தன் மனதில் தோன்றியவற்றை யெல்லாம் தன்னினத்தாருக்குத் தெரிவிக்கும் சக்தியையும் பெற்றிருக்கிறான். இப்படி நகர்ந்து செல்லும் சக்தியற்றவைகள் உயிரில்லாத பொருள்கள். இவற்றை ஓரிடத்தில் போட்டுவைத்தால் அவ்விடத்திலேயே—மற்றொருவரால் கையாடப் பட்டாலன்றி—அசையாப் பொருள்களாய்க் கிடக்கும். எறும்புகள் வந்து நுகராதபடி ஒரு கற்கண்டுக் கட்டியைப் பத்திரமாய் வைத்திருந்தால், அது வைத்த இடத்திலேயே நெடுநாள் நிலை குலையாது நிற்கும். ஜன்னல் கதவுகளை நாமாவது காற்றாவது அசைத்தாலன்றி அவை தாமாக அசைவதில்லை. கிணற்றிலுள்ள ஜலத்தை நாம் தூக்கி யெடுத்தாலன்றி அது வெளிக்கிளம்புவதில்லை. சுயமாக நகரும சக்தியை யுடையன உயிருள்ள பொருள்களென்றும், சுயமாக நகரும் சக்தியில்லாதன உயிரற்ற பொருள்களென்றும், அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

ஆகவே, நகரும் சக்தியை மாத்திரம் கண்டு பொருள்களை உயிருள்ளன உயிரில்லன என்று பிரித்தல் சரியன்று. உயிருள்ளவை சாதாரணமாய் மற்றப் பொருள்களை உட்கொள்ளுகின்றன; உட்கொண்ட பொருள்களைத் தம் அமைப்புக்கேற்றபடி மாற்றி, தம் உடற் சுதையைப் பெருக்கி வளர்க்கின்றன; வளர்ந்து, தம் இன விருத்தியாகிய முக்கிய தொழிலையும் செய்கின்றன. உயிரற்ற பொருள்கள், மற்றப் பொருள்கள் தம்மேற் படிவதனால் பருமனாகலாம்; ஆனால் இத்தொழில் அவற்றின் உள்ளமைப்பை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. உயிர்ப் பொருள்களோ வெனின், நிமிஷத்திற்கு நிமிஷம் செத்துப் பிழைத்து, இடைவிடாத மாறுபாட்டையடைந்து, உட்கொண்ட பொருளின் சாரத்தை கிரகித்து, தம் உடலில் ஏறவைத்து, வேண்டாதனவற்றை மல ஜல காற்றுக்களாய் விலக்கி விடுகின்றன. ஜலத்தில் கண்ணுக்குப் புலப்படாமல் சஞ்சரிக்கின்ற சிறு பிராணிகள் அசைவற்று ஓரிடத்தில் நிலைத்திராமல், அங்குமிங்கும் ஓடி யாடி ஜலத்தைக் கிழித்து உள்ளே மறைந்து, வெளியே கிளம்பி, தமக்குரிய ஆகாரத்தை உட்கொண்டு, அவற்றைத் தமக்கேற்ப மாற்றி

வளர்ச்சியடைந்து, பத்து நூறு ஆயிரமாய் மலிந்து, தம்மினத்தை நிலை நிறுத்துகின்றன.

மேற் சொன்ன குணங்களையுடைய உயிர்ப் பொருள்களைப் பற்றிச் சொல்வது உயிர் நூலாகும். அதையே ஆங்கிலத்தில பையாலஜி (Biology) என்பர். இவ்வுயிர் நூல் (1) தாவர நூல் (Botany) என்றும், (2) பிராணி நூல் (Zoology) என்றும் இருவகைப்படும். உயிர்களின் தேக உறுப்புகளைக் கணக்கிட்டு வர்ணித்தலும்; அதாவது உடற்கூறிலக்கணம் கூறுதலும்; இவ்வுறுப்புகளின் தொழில்களைப் பொதுவாகவும் ஒவ்வொரு ஜீவ வகுப்பிற்குச் சிறப்பாகவும் ஆராய்ந்து நிச்சயித்தறிதலும்; ஜாதியுள் ஜாதிகளின் கருமுதல் மரண முடிய ஏற்படும் விசேஷ சங்கதிகளையும், அந்த ஜாதிகள் ஒன்றோடொன்று சம்பந்தப் படுதலையும், அவை கால கதியால் அடைந்திருக்கும் வேற்றுமைகளையும், அவை தத்தம் கருப்பத்தில் உறையுங்கால் உண்டாகும் மாறுபாடுகளையும், மற்றும் பல காரிய காரணங்களையும் உற்றுணர்ந்து, இவ்வகை ஜீவ ஜாலங்களின் ஜாதி பேதங்கள் உற்பத்தியானதற்குள்ள ஊகங்களை நன்றாய் விளக்கிக் காட்டுவதுமே, இவ்வுயிர் நூல்களில் கஷ்டமான பாகங்கள் :—

இனி, கருமேந்திரியம் ஞானேந்திரியமற்றதாய், பொருட்களை உட்கொண்டு தன் மயப்படுத்தி விருத்தியடைந்து மறையும் தன்மையில்லாததாய், தன்னினத்தைப் பெருக்கும் உற்பாதன சக்தியற்றதாய் விளங்கும் வஸ்துக்கள் உயிரில்லாத வஸ்துக்கள் என்று சொல்லப்படுகின்றன. "ஒரு கல் ஆயிரம் துண்டுபட உடைந்து தன்னைப் போன்ற உருவும் குணமும் உடைய பலவாய்ப் பகிப்பதற்கும், ஒரு மரம் தன் சக்தியை வித்தினிடத்தில் அடக்கித் தன்னைப் போன்ற பல மரங்களை உற்பத்தி யாக்குவதற்கும்" எவ்வளவோ பேதம் இருக்கின்றது. இந்த மாதிரி உயிரில்லாப் பொருள்களைப் பற்றி ஆராயும் நூற்களை ஆங்கிலத்தில் 'பிஸிக்ஸ்' 'கெமிஸ்டிரி' என்று சொல்வார்கள், இவை இரண்டும் ஒன்றிற்கொன்று வெகுவாய் சம்பந்தப்பட்டவை. பதார்த்தங்களின் சாங்க இயக்கம், அணுவியக்கம், அணு நடுக்கமும் அதனால் விளையும் வெப்பம், ஒளி, மின்மயம் முதலிய பலன்கள் இவற்றை ஆராய்ந்து அவற்றின் குண விசேஷங்களையும் தொழில் வேறுபாடுகளையும் திட்டப்படுத்தி அறிந்து, அவ்வவற்றிற்குரிய விதிகளை

ஒழுங்குபட விரிக்கும் நூல் "பிஸிக்ஸ்" எனப்பெயர் பெறும். அதுவே "சக்தி நூலா"கும்.

இன்னும் பதார்த்தங்களின் உள்ளமைப்பு, மாறுபாடு, உருமாறின பண்டங்களின் குண விசேஷங்கள் முதலியவற்றை எடுத்துச் சொல்லும் நூல் "கெமிஸ்டிரி" எனப்படும். அதுவே இரசாயன நூலாகும்.

ஆகவே, பதார்த்தங்களின் சக்தி வேறுபாடுகளையும் அணுவியக்க நடுக்கங்களையும் அவற்றுள் விளையும் வெப்பம், ஒளி, காந்தம், மின்மயம் முதலியவற்றையும் விடுத்து; அவற்றின் அணுத்திரள் எத்தன்மையது, அவை ஏற்கும் ரூபவிகற்பங்கள் எப்பான்மையன, அவை தம் பதார்த்த மாறுபாடுகளுக்குத் தகுந்தபடி குண வேறுபாடுகளைப் பெறுவது எவ்விதம், அவை மனிதனுக்கு எங்ஙனம் உதவுகின்றன, அவற்றை நமதிஷ்டப்படி நம் முயற்சியால் ஆக்கும் வழி எப்படிப்பட்டது, என்று இத்தொடக்கத்திய கேள்விகளை ஒருவாறு பின் வருகிற பக்கங்களில் ஆராய்ந்து தெளிந்து கொள்வோம்.

(இன்னும் வரும்.)

ஒரு வேடிக்கைக் கதை!—நம்மையாளும் மாட்சிமை தங்கிய நமது சக்கரவர்த்தியைப் பற்றி ஒரு கதை கூறுவதுண்டு; மெய்யோ கட்டுக்கதையோ அறியோம். அவர், பள்ளியில் மற்ற சாதாரண பிள்ளைகளுடன் படித்துக்கொண்டிருக்கையில், சில்லறைச் செலவுக்கென்று பெற்ற பணம் செலவாகிப்போக, மேலும் பணமனுப்பும்படி தமது பாட்டியாரான விக்டோரியா மகா ராணியார்க்குக் கடிதம் எழுதினராம். மகா ராணியார், பதில் பணம் அனுப்பாமல், வீண் செலவு செய்யாமல் செட்டாயிருக்க வேண்டுவதைப்பற்றித் தமது அருமைப் பேரருக்கு ஒரு பெரிய கடிதம் அனுப்பினராம். அதற்குப் பேரர் பதிலனுப்பியதாவது:—எனது அருமைப் பாட்டியாரே! தாங்கள் தயவு செய்தனுப்பிய கடிதத்துக்காக அநேக வந்தனம். அதை, நான் இங்கே ஒருவருக்கு ஐந்து பவுனுக்கு விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டேன். இனி, பணம் அனுப்பாத போதெல்லாம், தங்கள் கைப்பட, இவ்விதமான பெரிய விகிதங்கள் அனுப்புவது எனக்கு சௌகரியமே!

காலையில் எழுந்திருத்தல்

[ம-ா-ா-ஸ்ரீ டாக்டர் அ. யெஜ்ஞ. நாராயண ஐயரவர்கள் L. M. & S. எழுதியது.]

அதிகாலையில் தூக்கத்தை விட்டெழுந்திருப்பது அவசிய மென்பது எல்லா தேசத்தாராலும் எல்லா மதஸ்தர்களாலும் விதிக்கப் பட்டிருக்கிறது. வைத்திய சாஸ்திரக்காரர்களும் இந்த வழக்கம் மிக உசிதமானதென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

இந்து சாஸ்திரப்படி ஒவ்வொருவரும் பிர்ம்ம முகூர்த்தத்தில் எழுந்திருந்து, மல ஜல நிவிர்த்திக்காக இருப்பிடத்தை விட்டு முக்கால மைல் தூரம் மேற்கு முகமாயப் போகவேண்டு மென்றும், பின்பு தந்த சுத்தி செய்து, ஸ்நானம் முடித்து சூரியோதயத்துக்குள் ஸந்தியாவந்தனம் செய்தாக வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிர்ம்ம முகூர்த்தமென்பது சூரியோதயத்திற்கு முந்திய ஒன்றரை மணி நேரம். ஆகவே, நாலரை மணிக்கு எழுந்திருக்க வேண்டியது கிரமம். ஔவையாரும் "வைகறைத் துயிலெழு" என்று ஆஞ்ஞாபித்திருக்கிறார். ஆங்கிலத்திலும் இந்த அபிப்பிராயத்தைத் தழுவிய பழமொழிகள் இருக்கின்றன. இந்து சாஸ்திரங்களில் வைதீகக் கடமைகளைக் காலாகாலத்தில் செய்யும் பொருட்டாக, காலையில் எழுதல் வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறது. ஆங்கிலத்திலோ லௌகீக காரியங்களை நன்றாய்ச் செய்யும் பொருட்டாகவே காலையில் எழவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அப்பழமொழிகளாவன:—

"பொழுதோடு படுத்துப் பொழுதோடும் எழுவோர்
தழுவுவர் தேகசுகம் தனம் அறிவே."
"ஆக்கம் அடைபவர் விடியுமுன எழுக;
ஆக்கம் அடைந்தவர் விடிந்த பின் எழலாம்."

இங்கிலாந்து முதலிய குளிரான தேசங்களில் 9-மணி சுமாருக்குத்தான் எழுந்திருப்பது அநேகர் வழக்கம். வெல்லிங்டன் பிரபு (The Duke of Wellington) இந்தியாவில் வசிக்கும்போது ஆறு மணிக்கு எழுந்திருந்த வழக்கத்தை, இங்கிலாந்துக்குப் போன பின்பும் அனுசரித்ததால், மற்றவர்களைவிட தினம் மூன்று மணி நேரம் அதிகம் ஜீவித்ததாகச் சொல்வாராம். ஸர் வால்டர்ஸ்காட் (Sir Walter Scott) என்னும் புலவர் பெருமான் மிகவும் சுறுசுறுப்பான வழக்கங்களைக் கைக்கொண்டிருந்தார். அவர் அதிகாலையில் எழுந்து வேலை செய்வதே அப்பியாசம். தினசரி காலையில் அவர் செய்யும் வேலையை உத்தேசித்து, காலை எட்டு மணிக்குள்ளேயே அந்தந்த தினத்தைக் கசக்கிப் பிழிந்து விடுவதாகச் சொல்வாராம். இந்த நாளில் வாலிபர்கள் முன்னிரவில் அதிக நேரம் விழித்திருப்பதும், காலையில் 7, 8-மணி வரைத் தூங்குவதும், அல்லது படுக்கையில் கிடந்து புரளுவதும் சாதாரணமாயிருக்கிறது. இது மிகவும் கெட்ட வழக்கம். அப்படிச் செய்கிறவர்கள் இந்தக் கெட்ட வழக்கத்தை விட்டு, ஸகல சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிற நல் வழக்கத்தைக் கைக்கொள்ளுவதே உத்தமம்.

பதார்த்தகுணதிசயக் குறிப்புகள்.

[சைதாபேட்டை ஆசிரியர் கலாசாலைப் போதகர் ம-ா-ா-ஸ்ரீ M. C. S. அனந்த பத்மநாப ராவ் அவர்கள் M. A; L. T; எழுதியது.]

நமது சங்கல்பம்.

நமது வீடுகளில் தினந்தோறும் உபயோகிக்கும் அநேக சாமான்கள் கடைகளில் தயாராக ஜோடித்து வைத்திருப்பனவும், அன்னிய தேசங்களில் பெரிய கைத்தொழிற் சாலைகளில் செய்து விற்பனைக்கு அனுப்பியனவுமாக இருக்கின்றன. அவற்றின் முக்கிய உபயோகங்கள் சாதாரணமாக எல்லாருக்கும் தெரியும். ஆனால் அவற்றைச் செய்த விதமும், நெடுநாளாகக் கெட்டுப்போகாமல் அவற்றை நாம் வைத்துக்கொள்ள வேண்டிய முறையும் அநேகருக்குத் தெரியாதிருக்கலாம். அடிக்கடி பார்த்துக் கையாடிக்கொண்டிருக்கும் பழக்கத்தினாலேயே அவற்றைக் கவனித்துப் பாராமலும் தீர விசாரித்துத் தெரிந்து கொள்ளாமலும் விட்டு விடுகிறோம். ஜன்னல் கண்ணாடிக்கும் மூக்குக் கண்ணாடிக்கும் வித்தியாசம் என்ன? ஒரே மூக்குக் கண்ணாடி எல்லோருக்கும் சரிப்படுவதுமில்லை, ஒருவனுக்கே அநேக வருஷங்களுக்கு உபயோகப் படுவதுமில்லை, ஏன்? தூர திருஷ்டிக் கண்ணாடியின் விசேஷம் என்ன? பூதக் கண்ணாடி எவ்வகைப்பட்டது? காந்த ஊசியிலுள்ள சக்தியின் குணதிசயங்கள் என்ன? டெலிபோனில் எந்த பாஷையில் பேசினாலும் அது வேறு ஒரு இடத்துக்குத் தந்தியின் வழியாகச் சென்று கேட்பது எப்படி? மின்னல், இடி, தந்தி தபால், டிராம் வண்டி, மின்சார விளக்குகள், புகை வண்டி, மோட்டார், இவற்றின் அபார சக்திகளும், இவை போன்ற வேறு சாதாரணமான விஷயங்களும் எல்லாரும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமானதால், சிறுவர்களுக்கும், இங்கிலீஷில் பயிற்சி யில்லாதவர்களுக்கும் தெரியும் பொருட்டு, எளிய நடையில் தமிழில் இவற்றைப்பற்றி எழுத எண்ணியிருக்கிறோம்.

மேலும், சிறுவர்கள் மனதுக்கும் பரீக்ஷை பார்க்கும் விதங்களுக்கும் எட்டாத மதவிஷயம் போன்ற அம்சங்களில், அவர்கள் பெரியோர் சொல்லுவதையே உண்மை எனக் கைக்கொண்டு நடப்பது அவசியமே. கண்ணுக்கும் கைக்கும் கிட்டிய வற்றைப்பற்றியும் சுலபமாய் பரீக்ஷிக்கக் கூடியவற்றைப் பற்றியும்

நாம் பிறர் சொல்வதையே முழுதும் உண்மையெனநம்பிச் சில சமயங்களில் மோசம் போவது மூடத்தனமேயல்லவா? "நீகம் வாகில் தேன் ஒழுகுகிறது என்றால் கேட்போருக்கு மதி எங்கே" என்னும் பழமொழி, கேட்டதை எல்லாம் உடனே நம்பு வது தகாது என்பதை வற்புறுத்துகிறது. பரீக்ஷித்துப்பார்க்கும் சுபாவத்தினாலே அன்னிய தேசத்தார் முன்னுக்கு வந்திருக்கிறார்களென்றும், முற்காலத்தில் நமது தேசத்தில் இருந்த இக்குணம் இக்காலத்தில் நம் சிறுவர்களிடத்தும் மற்றெல்லாரிடத்தும் அதிகம் இல்லை என்றே சொல்லலாமென்றும், அதனால் தேசாபிவிருத்திக்குத் தடையாயிருக்கிறதென்றும், நாலா தேசங்களிலும் திரிந்து கவனித்தவர்கள் முறையிடுகிறார்கள். (மதம் தத்துவம் இவற்றில் மேன்மையடைந்த நமது பெரியோர் சாதாரண கைத்தொழிலை வெவ்வேறு கூட்டத்தாருக்கு விட்டு விட்டபடியால், அதைக் கவனியாமலும் அதற்கு வேண்டிய சீர் திருத்த முறைகளை மேற் கொள்ளாமலும் விட நேரிட்டு, இக்காலத்து நாகரீகத்திற்கு வேண்டிய சாமான்களைச் செய்ய இத்தேசம் சக்தி குறைந்து விட்டது.) சிறுவர்கள் பரிசோதனை செய்யக் கூடியவற்றைச் சமயம் வாய்த்தபோது அவ்வாறு செய்து தாமாகக் கண்டறிவதே சிலாக்கியமான பயிற்சி என்பதை எண்ணி, அப்படிச் செய்வதற்கு வேண்டிய முறைகளையும் அப்போதைக்கப்போது எடுத்தெழுத வேண்டு மென்பது நம்முடைய எண்ணம்.

1. கண்ணாடி.

நாகரீகம் அதிகரித்த நாடுகளில், ஜனங்களுக்கு அவசியமான சாமான்களில் கண்ணாடி ஒன்று. சென்னப்பட்டணத்தில் 1913-14ன் இறக்குமதியில், 80 ல் 1 பங்கும், 21 கோடி ரூபாய் கிரயமுமுள்ளவை கண்ணாடி சாமான்களென்றும், இந்தியாவில் சுமார் வருஷம் 200 கோடி ரூபாய் அளவு இச்சாமான்கள் வெளி தேசங்களிலிருந்து வருகின்றன வென்றும் கணக் கிட்டிருக்கிறார்கள்.

ஜன்னல் கதவுகளுக்கு உபயோகிக்கும் நானாவித வர்ணங்களுடைய தகடுகளுக்கும்; முகம் பார்த்துச் சிங்காரித்துக் கொள்ளும் பில்லைகளுக்கும், எப்பொருளால் இச்சாமான்களைச் செய்திருக்கிறார்களோ அந்த வஸ்துவுக்கும் பொதுவாகக் கண்ணாடி என்று சொல்லுகிறோம். சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி, சொல்வது எதைப்பற்றி என்று தெரிந்து கொள்ளுகிறோம். வீட்டுக் கூரையை மூடியதைப்பற்றி

பேசும் போது தகட்டுக் கண்ணாடி, என்றும் ஸ்நானம் செய்த பிறகு கேட்கும்போது முலாம் பூசிய நிழல்பார்க்கும் கண்ணாடி என்றும வாசிக்கும் சமயத்தில் மூக்குக்கண்ணாடி பில்லைகளென்றும், காலில் தைத்தால் படும் அவஸ்தையை குறிக்கும்போது, கண்ணாடித்துண்டுகளென்றும் வழக்கமாகத் தெரிந்து கொள்ளுகிறோம். ஆங்கிலேய பாஷையில் இருப்பதுபோல் நமது தமிழிலும் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பேர்கள் பழக்கத்தில இருந்தால் அதிக சௌகரியமாயிருக்கும்.

கண்ணாடி என்னும் பொருள் மணலும் சுண்ணாம்பும் சிலவகை உப்பும் கலந்து சூளையில் நன்றாய்க் காய்ச்சி உருக்கப்பட்டது. கண்ணாடியை 5000 வருஷங்களுக்கு முன்னமே ஜனங்கள் உபயோகித்து வந்ததாக சரித்திரங்களில் சொல்லி யிருக்கிறது. வியாபாரத்திற்காக சோடா உப்புக் கட்டிகளை எடுத்துச் சென்ற சிலர், மணல் பிரதேசங்களில் பிரயாணம் செய்கையில் சமையலுக்கு அடுப்பு வைக்க கல் என்பதே அகப்படாமல் உப்புக்கட்டிகளை மணலமேல் வைத்து சமயல் செய்தபிறகு, கீழே மணலும் உப்பும் தணலினால் உருகிக் கண்ணாடித் துண்டுகளாகக் கிடந்ததைக் கண்டது முதல் கண்ணாடிசெய்ய ஜனங்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்று பிளினி என்னும் (ஈஜிப்ட் ஜனங்களைப்பற்றி எழுதிய) சரித்திர கிரந்தகர்த்தா சொல்லியிருக்கிறார். முதல் முதலில் ஈஜிப்ட் தேசத்தில் கண்ணாடி மணிகள், சின்ன கோப்பைகள், விக்கிரஹங்கள், மரச்சாமான்களில் அழகுக்காக பதிக்கும் சன்ன கண்ணாடித் துண்டுகள் நாலா வர்ணங்களுடன் செய்து வந்தனவாகத் தெரிகின்றது. பிறகு உரோமர்கள் இக்கைத்தொழிலை விர்த்தி செய்து, அழகான விளக்கு ஸ்தம்பம், சிங்கார உருவங்கள் முதலானவைகளைச் செய்து வந்ததாகவும், பிறகு சீனதேசத்திற்கும் இது பரவினதாகவும், சொன்ன தேசங்களிலெல்லாம் இக கைத்தொழிலால் கொஞ்சம் சாமான்களே செய்துவர, சென்ற 400 வருஷங்களாகத்தான் ஐரோப்பா தேசங்களில் இக்கைத்தொழில் பரவி, சாதாரண உபயோகத்திற்கு வேண்டிய கண்ணாடிச் சாமான்கள் யந்திரசாலைகளில் ஏராளமாக செய்யப்படுகின்றதாகவும் பத்திரிகைகள் மூலமாகத் தெரியவருகிறது.

இந்தியாவில் பஞ்சாப், ராஜபுதனம், பர்மா முதலான பாகங்களில் மணிகளுக்காகவும், பொய் முத்துகளுக்காகவும், கட்டிட சித்திர வேலைகளுக்கு உபயோகப்படும் சன்னமான வர்ண பில்லைகளுக்காகவும்

சில நூற்றாண்டுகளுக்கு முன் இக்கைத்தொழில் சிறப்புற்று இருந்தது. பஞ்சாப் ஐக்கிய மாகாணங்கள், பம்பாய், வங்காளம் முதலான பிரதேசங்களில்இப்பொழுதும் இக்கைத்தொழில் நடந்துவருகிறது. பாட்னாவில் செய்யும் சாமான்கள் கொஞ்சம் நல்ல வகையானவைஎன்றும், மற்றவையெல்லாம் மட்டமானசரக்குகள்| என்றும் சொல்லுகிறார்கள். வளையல்களுக்கு உபயோகப்படும் நீலவர்ணமுள்ள எளிதில் ஒடியக்கூடிய அதிக மட்டமான கண்ணாடியை காளஹத்திக்கடுத்த சில ஊர்களில் இப்போதும் செய்துவருகிறார்கள். செய்யும் வகைகளில் சீர்திருத்த மின்மையாலும், அவற்றை பரீக்ஷித்து முன்னுக்குக் கொண்டுவரும் ஊக்கமுடையவர்கள் இக்கைத்தொழிலாளிகளில் இன்மையாலும், கண்களைக் கவரக்கூடிய அழகிய நிறமும் வடிவமும் உடைய தினுசுகள் வெளிதேசங்களி லிருந்து வருதலாலும் இக்கைத்தொழில் க்ஷீணித்துக்கொண்டு வருகிறது. தற்காலத்தில் நமது தினசரி உபயோகத்திற்கும் சாதாரண ஜனங்களுக்கும் ஏராளமாய்வேண்டிய ஜன்னல் பில்லைகள், விளக்குச்சிமினிகள், முகம்பார்க்கும் கண்ணாடிகள், மூக்குக் கண்ணாடிகள், சீசாக்கள் முதலான சாமான்கள் இந்தியாவில் செய்ய இன்னும் சரியானபடி ஆரம்பிக்கவில்லை. சாதாரணக் கண்ணாடிகளைச் செய்யவேண்டிய மணல் முதலான சாமான்கள் நமது தேசத்தில் அகப்படும். அதற்கு விடா முயற்சியும் கண்ணாடி செய்யும் முறைகளிலும் சூக்ஷ்மத்திலும்தேர்ச்சியுடைய தேசாபிமானிகளுமே அத்தியாவசியம்.

சாதாரண மணலில் அதிக சொல்பமாக இரும்புச் சன்னம் கலந்திருந்தாலும் கண்ணாடியின் நிறம் பச்சையாகிவிடும். நிறமற்ற ஸ்படிகம்போன்ற கண்ணாடிகளுக்கு சிலாக்கியமான மணல் தேவை. சாதாரணமான கண்ணாடியுடன் சில தாமிர பஸ்மம் கலந்து உருக்கினால் சிவப்புக் கண்ணாடியும், கோபால்ட் என்னும் உலோக பஸ்மம் கலக்க நீலக் கண்ணாடியும், வேறு சில சன்னங்களையும் கலந்து உருக்க நவமணிகளைப்போன்ற நானாவித வர்ணங்களை யுடைய சுயமான கற்களுக்கு நிகரான ஜொலிப்பையும் நிறத்தையும் உடைய நவமணித் துண்டுகளும் ஆகின்றன. சோடாவுப்புக் கலந்து உருக்கக் கதவுக் கண்ணாடிகளாகவும், பொட்டாஷ் உப்புடன் சேர்ந்து எளிதில் உருகாத சீசா முதலான வகைகளாகவும், காரீய பஸ்மம் கலந்தது மூக்குக் கண்ணாடிகளுக்கும், விலை யுயர்ந்த யந்திரங்களிலுள்ள கண்ணாடிகளுக்கும் உபயோகமாகும் உறுதியான தினுசுகளாகவும்

ஆகின்றன. இவைகளில் கருப்பு நிறமும், பச்சை நிறமும் உடைய கண்ணாடிகள் தாம் விலை சாசமானவை

கண்ணாடி எளிதில் உடையக் கூடியது, கை நழுவினால் ஒன்றுக்கும் உதவாத அனேக துண்டுகளாக உடைந்து போகும். உடைந்த துணுக்குகள் கெட்டியாயும் கூர்மையாயும் இருப்பதால் கை கால்களில் பட்டவுடன் கிழித்து உள்ளே செல்லும். ஒடிந்து போகும் தன்மை யுடையன ஆதலால், அத்துணுக்குகளை, முட்களைப் பிடுங்குவது போல் முள் வாங்கியால் இழுத்துப் போக்குவதும் கஷ்டம். கண்ணாடியைப் பொடி செய்து காகிதங்களின் மேல் ஒட்டி, மரப்பலகைகளைத் தேய்த்துச் சமனாக்குவதற்கு உபயோகப்படும் 'உப்புக்கடிதம்' என்பதைச் செய்கிறார்கள். கண்ணாடியைச் சிறிய துண்டுகளாக அறுக்கத் தேவை யிருந்தால், உளி கத்திரி முதலிய ஆயுதங்களை உபயோகிக்காமல், வைர ஊசியால் மேற்பரப்பைக் கிழித்து, கிழித்த விடங்களில் அகலும்படி இழுக்க, துண்டுகள் கிடைக்கும்.

கண்ணாடியின் முக்கிய குணம் தன்வழியாக வெளிச்சத்தை செல்லவிடுவதே. மழைத்துளிகளும், தூசி முதலானவும் உள்ளே புகாமல் இருக்க, வேண்டிய வெளிசசத்தைச் செலுத்துகிறதனால் அல்லவா, ஜனங்கள் கூரைகளிலும் ஜன்னல்களிலும் கண்ணாடி பில்லைகளை வைக்கிறார்கள்? உள்ளேவைத்த பண்டங்கள் வெளியே நன்றாய்த் தெரிவதாலும், வழவழப்பான மேல்பரப்பின்மேல் ஒன்றும் எளிதில் ஒட்டிக் கொள்ளாமல் கழுவிவிட முடிவதாலும், குடிக்கும் பாத்திரங்களாகவும், மருந்துக் குப்பிகளாகவும், விளக்குச் சிமினிகளாகவும் கண்ணாடியை உபயோகிக்கிறோம்.

சூட்டைத்தன்னில் சீக்கிரம் பரவவிடும் சக்தி கண்ணாடிக்குக் கிடையாது. ஒரு கண்ணாடிக் குழாயின் அல்லது வளையல் துண்டின் ஒருநுனியை விளக்கில் பிடித்து மற்றொரு நுனியை கையில் பிடித்தால், முதல் கோடி உருகும் காலத்திலும் நாம் பிடித்த கோடியை விடாமல் இருக்கலாம். இரும்புக்காண்டிகளை அவ்வாறு வைத்திருக்க முடியுமா? 'தெர்மோ" குப்பி என்னும், உளளேவைத்த காப்பியின் உஷ்ணத்தை 2, 3-மணி நேரத்துக்குக் குறையாமல் காத்துவைத்திருக்கும் பாத்திரங்கள், கண்ணாடியால செய்யப்பட்டு, மேலும் சில உஷ்ணத்தைத் தடை செய்யும் ஆதாரங்களை உடையன. கண்ணாடி மற்ற வஸ்துக்களைப்போல் உஷ்ணத்தால் பெருத்து அதன் குறைவால் சிறுத்துப்போகும் குணம் உடையது. சுவற்றில் கெட்டியாக அடித்த

இரும்பு ஆணி, சில மாதங்களுக்குப்பின் சுவற்றில் ஓட்டை பெரிதாகி ஆணி ஆட்டம் கொடுத்துப் போவது, இக்காரணத்தால்தான். கண்ணாடிக்குச் சூட்டைப் பரவவிடும் சக்தியில்லாததால், சாதாரண பருமஞன கண்ணாடிப் பாத்திரங்களில் சூடான காபி முதலானவைகளை வார்த்தாலும், கண்ணாடிப் புகைக்கூண்டில் (சிம்னி) ஏற்றிய விளக்கை முதலிலேயே பெரியதாக வைத்தாலும். சூடான புகைக்கூண்டின் மேல் குளிர்ந்த காற்று, மழைத்துளி முதலானவை பட்டாலும், சூடான இடங்கள் மாத்திரம் பெருத்து, குளிர்ந்த பாகங்கள் சிறுத்துப்போவதால, கண்ணாடி வெடித்துப் போகிறது. தடித்த சாமான்களில் இச சங்கடங்கள் அடிக்கடி நேரிடும். மெலிந்த பாத்திரங்களில் இவ்வளவு கஷ்டம் இல்லை. இதற்கென்றுதான், ஐஸ் (பனிக்கட்டி,) டம்ளர்களென்றும், தீயால் ஒடியாத (பைர் ப்ரூப்) சிம்னிகளென்றும், மெல்லிய கண்ணாடிகளாலாகிய சாமான்களைச் செய்து, தக்கபடி பதம் செய்து விற்கிறார்கள்.

கண்ணாடிப் பாத்திரங்களில் திராவகம், புளிப்புப் பண்டங்கள், பால் முதலான எவற்றை வைத்தாலும் கெட்டுப் போவதும் இல்லை; திராவகத்தால் கரைந்து தின்னப்படுவதும் இல்லை; புளிப்பால் கைத்துப்போவதும் இல்லை; ஜலத்தில் கரைவதும் இல்லை; எண்ணெய் கசிவதும் இல்லை; விலையும் சரசம்; இக்காரணங்களால், மருந்துகளைவைக்க, வைத்தியர்கள் கண்ணாடிக் குப்பிகளையே உபயோகிக்க விரும்புகிறார்கள்.

மேற்கூறிய நல்ல குணங்கள் அநேகம் பொருந்தி யிருந்தும் தவறினால் மண்பாண்டங்களைப் போல் ஒன்றுக்கும் உதவாமல் உடைந்துபோவதாலும், அடுப்புமேல் வைத்துக் காய்ச்சவும், சமயல் செய்யவும் உலோக பாத்திரங்களைப்போல் உபயோக மாகாததாலும், கண்ணாடிப் பாத்திரங்கள் சாதாரண ஜனங்கள் பழக்கத்தில் அதிகமாக இல்லை. என்றாலும் மருந்துக்குப்பிகள், விளக்குகள், ஜன்னல்கள், முதலானவற்றுக்கு உபயோகிப்பதற்காக ஏராளமான கண்ணாடி சாமான்கள் இத்தேசத்தில் இக்காலத்தில் வேண்டியிருத்தலால், இச் சாமான்களைச் செய்யும் முறைகளை நம் தேசத்தார் தெரிந்துகொண்டு, கண்ணாடிக் கைத்தொழிலை இத்தேசத்தில் நிலைநாட்ட வேண்டிய எத்தனங்களைச் செய்ய வேண்டியது அவசியம்.

[இன்னும் வரும்.]

வைசூரி அல்லது பெரிய அம்மை.

[ஸ்ரீமதி Dr. S. முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கள் M. B. C. M, எழுதியது.]

இந்த வியாதியினால், நம் தேசத்தில, ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தும், கூன், குருடு, நொண்டி, முடங்களாகியும் வருகின்றன. இவ்வியாதியினால்பீடிக்கப்பட்டவர்கள், எண்ணமுடியாத இம்சைக்குஆளாகிறார்கள். மனிதர்தேகத்தைப் பீடிக்கும் வியாதிகளில், கோரத்தில் இதற்குச் சமமான வியாதியொன்றுமில்லை. இவ்வியாதியின் குணாதிசயங்களை, நம்மவர்களுக்கு, நான் எடுத்துச் சொலவதவசியமிலலை. ஏனென்றால், அம்மை யென்னும் இவ்வியாதியின் பலகுறிகளும், நம்மவர்களுக்குத் தெரிந்த விஷயமே.

நம்மவர்கள், வைசூரியை ஒரு வியாதியென்று நினைத்து, அதைத் தடுக்கும் வழிகளைத்தேடாமல், அது, காளி, மாரியாத்தாள் முதலிய தெய்வங்களினால் வருவது என்ற தப்பெண்ணம் கொண்டு, அத் தெய்வங்களைத் திருப்திசெய்ய எத்தனம் செய்கிறார்கள். சாதாரணமாக, நம்மைப் படைத்த ஜெகதீசன், தம் சிருஷ்டிப் பொருள்களாகிய மனிதர்கள், மிருகங்கள் முதலிய எவ்வித உயிர்களையும் காப்பாற்றி, எப்பொழுதும் நன்மை செய்கிறதிலேயே கண்ணாயிருக்கிறாரென்று, எல்லா மதங்களும் முறையிடுகின்றன. இஃதிப்படியிருக்க, துஷ்ட தேவதைகளால் மனிதர்களுக்கு இடையூறு ஏற்படுமானால், அந்த சர்வ வல்லமையுள்ள கடவுளின் சக்தி யென்னவாகும்? அப்படி நினைக்கிறது நம் முட்டாள் தனம். அம்மை யென்பது, மற்ற விஷசுரம், க்ஷயம் முதலிய வியாதிகளைப்போல் ஒன்றுதான் என்பதை நான் பின்வரும் காரணங்களால் ஸ்தாபிக்கிறேன்.

ஐரோப்பா கண்டத்தில் சுமார் 120 வருஷங்களுக்கு முன், அம்மையென்னும் வியாதி, இப்பொழுது நம் தேசத்திலிருக்கிறது போலவே பரவி அநேகரை இம்சித்து வந்தது. ஜென்னர் என்ற துரை, வைசூரி குத்திக்கொண்டால் அது வருகிறதில்லை யென்று கண்டுபிடித்து, ஜனங்களுக்கு வைசூரி குத்துவதின் பிரயோஜனத்தைக் காண்பித்தார். இவ்வளவு கோரமான வியாதிக்குச் சிகிச்-

சையைக் கண்டுபிடித்த அப்பிரபுவை நாம் அவதார புருஷனாக எண்ணி, இந்த உலகம் உள்ள நாள்வரையில் கொண்டாடி வரக்கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஏனென்றால், இது வரையில் இவ்வியாதிக்கு அம்மை குத்துவதைத் தவிர வேறுவிதமான மருந்து ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. பகவத்கீதையில் சொல்லியிருக்கிறபடி மனுஷர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திசெய்ய ஜெகதீசனே ஜென்னர் ரூபமாக அவதரித்தாரென்று சொல்லலாம்.

அம்மை குத்துவதென்றால் என்ன? அம்மை வார்த்தவர்களுடைய அம்மைப்பாலை யெடுத்து மாடுகளுக்குக்குத்தி, பிற்பாடு அம்மாடுகளின் அம்மைப்பாலை யெடுத்துச் சுத்தம் செய்து, மறுபடியும் மனிதருக்குக் குத்துவதுதான் அம்மை குத்துவது. பெற்றோர்கள் யாவரும் தமது வீடுகளில் ஒவ்வொரு குழந்தைக்கும் அம்மை குத்தச் செய்வது மிக்க அவசியம். அப்படி அம்மை குத்தாமலிருந்து, அக்குழந்தைகளுக்கு அம்மைவார்த்து இறந்தார்களானால், அல்லது ஊனப்பட்டார்களானால், அதற்குப் பெற்றோர்களேபாத்யமாவார்கள். ஏனென்றால், இப்பேர்ப்பட்ட கொரமான வியாதியொன்று இருந்தாலும், அது வாராதபடி தடுக்கும் சிகிச்சை யொன்றிருக்கிறது; அதைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளாமல் கஷ்டப்படுவது அறிவின்மையே. குழந்தைகள் பிறந்து மூன்றுமாதத்துக்குப் பிறகு அவர்களுக்கு அம்மை குத்தலாம்.

சிலர், அம்மை குத்துவதனால் பலபேர் இறந்து விட்டார்களென்று பயப்படுகிறார்கள். அது மற்றக் காரணங்களினால் உயிருக்குண்டாகும் சேதமேயொழிய அம்மை குத்துவதனாலன்று.

நம் சரீரத்தில் ஆயிரக்கணக்கான கிருமிகள் குடிகொண்டிருக்கின்றன. கிருமிகளாவன, கண்ணுக்குப் புலப்படாத சிறு பூச்சிகளேயாம். பூதக் கண்ணாடியால்தான் அவற்றைப் பார்க்கலாம். அவை நம் தேகத்தின் மயிர்த் துவாரங்களிலும், தோலின்மேலும், படிந்திருக்கின்றன. நமக்கோர் காயம்பட்டால் அது சீழ் பிடிப்பதற்குக் காரணமாயுள்ளவை இப் பூச்சிகளே. ஆகையினால், நாம் அம்மை குத்துவதற்கு முன்னால், குத்தும்பாகத்தை,நன்றாய் சோப்பு போட்டு வெந்நீரினால் சுத்தம்செய்யவேண்டும். பிறகு இக்கிருமிகளைக் கொல்லும்படியான மருந்துகளைப் போட்டுக் கழுவவேண்டும்; அம்மை குத்தும் ஊசியைக்கூட அனலில் காய்ச்சிச் சுத்தப்படுத்த

வேண்டும். மேற்சொன்ன பிரகாரம் அம்மை குத்திக் கொள்ளு வோமானால், அதனால் ஒரு தீங்கும் நமக்கு நேரிடாது. அம்மை பழுத்த பிறகு, அதன்மேல் ஈக்கள் உட்காராமல், பஞ்சு அல்லது மெதுவான துணியைவைத்துக்கட்டி, பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வளவு ஜாக்கிரதையுடன் அம்மை குத்திக் கொண்டால், ஒரு விதமான தோக்தரவும் நேரிடாது.

இன்னொரு விஷயம் தெரிவிக்க வேண்டியது அவசியம். அதாவது: சிறு குழந்தைகளா யிருக்கும்பொழுது அம்மை குத்திக் கொண்டவர்க்கும் கூட, பெரியவர்களாகும் பொழுது சிலவேளை அம்மை வார்க்கிறதே; அப்படியானால் அம்மை குத்துவதின் பிரயோஜனமென்ன, என்று கேட்கலாம். அதற்குக் காரணம் என்ன என்றால், ஒருவருக்கு ஒருதரம் அம்மைகுத்துவது போதாது. ஏழு வருஷத்திற்கு ஒருதரமாக, ஒருவர் தம் வாழ்நாளில் மூன்றுதடவை அம்மை குத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு நிச்சயமாய் அம்மை வியாதிவாரது. இது அனுபவத்தின் பேரில் கண்டுபிடிக்கப்பட்ட விஷயம். சிறுவயதில் அம்மை குத்திக் கொண்ட அநேகர் வயதுமுதிர்ந்த பிற்பாடு அம்மை வியாதியினால் பிடிக்கப்பட்டு இறந்துவிடுகிறார்கள். ஏனென்றால், ஒருதரம் அம்மை குத்தினால் அதன் பலன் ஏழு வருஷத்திற்குத்தான் இருக்கிறது. அதற்குப் பிற்பாடு அவர்கள் அம்மை குத்திக் கொள்ளாதவர்களுக்குச் சமானம்தான்.

அம்மை வார்த்ததன் பிற்பாடு அனுசரிக்க வேண்டிய முறைகளாவன:—

அம்மை வியாதியினால் பிடிக்கப்பட்டவர்களை ஒரு தனி அறையில் வைக்கவேண்டியது. நோயாளிக்கு வேண்டிய பாத்திரங்கள், உடைகள் தவிர மற்ற அனாவசியமான சாமான்கள் அங்கே இருக்கக் கூடாது. நோயாளியின் சௌகரியத்தைக் கவனிக்க, அருகில் செல்பவர், அம்மை குத்திக் கொண்டவர்களாகவாவது, அல்லது, அம்மை ஒருதரமாவது வார்த்தவர்களாகவாவது இருக்கவேண்டும். நோயாளியின் படுக்கை, துணி முதலியவற்றை, வீட்டிலுள்ள மற்றவர்களுடைய உடைகளோடு சேர்க்கக்கூடாது. இந்த வியாதியானது, நோயாளியைத் தொடுவதினாலும், நோயாளியின் துணியிலிருந்தும், அவன் சாப்பிடும் பாத்திரங்களிலிருந்தும் ஒட்டிக்கொள்ளுந் தன்மை

யுள்ளது. காற்றின் மூலமாகவும் பரவக்கூடியது. அதனால்தான் அம்மை வார்த்திருக்கிற வீட்டுக்குப் பிறர் போகக்கூடாது என்பது.

இரண்டாவது, அம்மை வியாதியை மற்ற வியாதிகளைப்போல் பாவித்தே வைத்யம் செய்யவேண்டும். இது, விஷசுரம், க்ஷயரோகம் போன்ற வியாதியே தவிர வேறொன்றுமில்லை. அந்த வியாதிகளுக்கு வைத்யம் செய்து, அநேகம் பேர் பிழைத்துக்கொள்ளவில்லையா? அதுபோலவே, இவ்வியாதியையும்,நோயாளியின் இம்சையைக் குறைக்கக்கூடிய மருந்து கொடுத்து, கொஞ்சத்திற் கொஞ்சமாவது சரிப்படுத்தலாம். வைத்யர்கள் உத்தரவின்பேரில், பலத்தையும், தேக புஷ்டியையும் கொடுக்கக்கூடிய ஆகாரத்தையும், மருந்தையும் கொடுக்கவேண்டும். இச்சரியான வழியை விட்டுவிட்டு நம்மவர்களில் அநேகர், அம்மைக்கு வைத்யம் செய்தால் தெய்வம் கோபித்துக் கொள்ளுமென்ற தப்பெண்ணம் கொண்டு, நோயாளியைச் சொல்லமுடியாத இம்சைக்கு ஆளாக்குகிறார்கள். இவ்வியாதியினால் இறந்தவர்களுடைய உடை, படுக்கை முதலியனவற்றை எரித்து விடுவது உத்தமம். இல்லாவிட்டால், அவற்றைக் கொதிக்க வைத்து, நன்றாய் வெயிலில் உலர்த்தி, பின்பு எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். ஒரு வீட்டில் ஒருவருக்கு அம்மை வார்த்தால் அவ்வீட்டிலுள்ள மற்றவர்கள் எல்லோரும் உடனே அம்மை குத்திக்கொள்ள வேண்டும். அப்படிச்செய்து கொள்வதனால் மற்றவர்களுக்கு அம்மை வார்க்காமல் தடுக்கலாம்.

இதை வாசிக்கும் எல்லோரும், இந்தவியாதி, பிசாசினாலாவது, பூதத்தினாலாவது வருவதென்ற பொய் நம்பிக்கையை விட்டு விட்டு, மேற்சொன்ன முறைகளைத்தழுவி, சுகம் பெறுவார்களென்று நம்புகிறேன்.

"அறிவுப் பெருக்கால் கண்டறியப்பட்ட சுகவழிகளில் நடவாது, கண் மூடித்தனமாக, நடந்து, மரணம் அடைபவன், தற்கொலை செய்து கொள்ளும் பாவத்துக்கே உள்ளாகுகிறான் என்பதில் சந்தேகமில்லை."

" செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமையானும் கெடும்." திருக்குறள்.

தமிழ்ச் செல்வம்.

தெய்வ வணக்கம்.

"அகர முதல் எழுத் தெல்லாம்: ஆதி
பகவன் முதற்றே உலகு." திருக்குறள்.

'எழுத்துக்கள் எல்லாம் 'அ'கரமாகிய முதலை யுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலை யுடைத்து' என்பது இதன் பொருள். தமிழ் எழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் அகரம் முதலாதலால், "எழுத்தெல்லாம்" என்றார் என்றும்; அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பால் வந்ததென்றும்; உலகென்றது உலகுயிர்களைமேல் நின்றது என்றும் பரிமேலழகர் கூறியுள்ளார்.

'அ' என்னும் சப்தம், இயற்கை நிலையில் மூடியிருக்கும் வாயைத் திறப்பதால் உண்டாவது; ஆகவே, வடமொழி தென்மொழிகளுக்கு மாத்திர மின்றி, எழுத்துக்கள் அறிகுறியாம் மற்றெல்லா பாஷைகளுக்குமே 'அ' என்னும் சப்தம்தான் முதல் என்பது முற்றும் பொருந்தும். பகவன் என்பாற்கு ஆதியென்பாள் வயிற்றிற் பிறந்த திருவள்ளுவர், தாம் ஓதப்புகும் நூலின் முதற் செய்யுளில், தமது தாய் தந்தையா வணக்கத்தையும் இவ்வாறு சுட்டியிருப்பது சால அழகிது. அன்றி,கடவுள், பிரபஞ்ச சிருஷ்டி வியக்தமாகுமுன் கர்தஸ்வரூபியாய் விளங்கும் தத்துவத்தை இவ்வுவமானம் குறியா நிற்பதும் கவனிக்கத்தக்கது.

கல்விச் சிறப்பு.

2. "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே:
பிறப்போர் அன்ன உடன் வயிற் றுளளும்,
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்,
மூத்தோன் வருக என்னா தவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே."—புறநானூறு.

இந்தப் பாட்டு, சிலப்பதிகாரக் கதாநாயகனாகிய கோவலனைக் கொல்வித்த பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ் செழியன் பாடியது. இதன் பொருள்:—கல்வியையுடைய ஆசிரியனுக்கு ஆபத்தான காலத்தில் உதவி செய்

தும், அவன் வேண்டிய திரவியத்தைக் கொடுத்தும், அவனை வழிபடுதலைத் தாழ்வென்றெண்ணி வெறுக்காமலும், எவ்வாறாயினும் (அவனிடத்துள்ள) கல்வியை ஒருவன் கற்பது நல்லது, ஏனெனில், ஒரேவயிற்றிற் பிறந்தார்க்குள்ளும், பெற்றதாயும்கூட, கல்லாதவனைவிடக் கற்றுச்சிறந்தவனைத்தான் அதிகம் பாராட்டுவள்; ஒரேகுடியிற் பிறந்த பலர்க்குள்ளும், வயதில் மூத்தோனை உபசரியாது, அறிவில் மூத்தோனையே அரசனும் உபசரித்து வழிபடுவன்; வெவ்வேறான நான்கு சாதியார்க்குள்ளும், கீழ்க்குலத்தான ஒருவன் கற்றிருப்பின், மேற்குலத்தான் ஒருவனும் கூட, சாதி கீழென்று அவனை இகழாமல், கல்வியின் பொருட்டு அவனிடத்தே சென்று அவனை வழிபடுவன் ஆதலால், எ—று.

மலை வெள்ளமும் விலை மாதரும்.

3. "தலையும் ஆகமும் தாளும் தழீஇ, அதன்
நிலை நிலாதிறை நின்றது போலவே
மலையின் உள்ளவெல்லாம் கொண்டு மண்டலால்,
விலையின் மாதரை ஒத்ததவ் வெள்ளமே." **கம்பராமாயணம்.**

இது கோசல நாட்டின் ஆற்று வளத்தை வருணிக்கையில் கம்பர் கூறும் கவி. எல்லா மனிதர்க்கும் தெரிந்ததாயும், எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு மிகப் பொருத்தியதாயும், நல்ல பயன் தருவதாயுமுள்ள உவமானங்களை அடிக்கடி கையாளும் கம்பர் வழக்கத்தை, இது நன்கு விளக்கும். இக்கவியின் கருத்து:-, மலையின்மேல் மழை பொழிந்ததாலான வெள்ளம், பாறைகள் பள்ளங்கள் உற்ற விடத்துச் சிறிது தடைப்பட்டுத் தியங்குவது போல் தோன்றி, முடிவில் தன் பெருக்கத்தாலும் மிகுதியாலும் சிகர முதல் அடிவாரம் வரை வழிந்தோடி, மலையின் கண் உள்ள பொருள்களை யெல்லாம் வாரிக்கொண்டு விரைந்து சென்றது; அதனால், அவ்வெள்ளத்தின் ஒழுக்கம், காமுகரது செல்வத்தை யெல்லாம் கவருமளவும் தழுவிக் கொண்டிருந்து உடனே அவரை விட்டு நீங்கும் வேசையரது ஒழுக்கம் போலிருந்தது' என்பது. இவ்வுவமானத்தின் அழகும் பொருத்தமும் ஊன்றி நோக்க நன்கு புலப்படும். ஒரு தனவானை தரித்திரனாக்கச்செய்த சந்தியில் விடும் விலைமகளைப் பற்றி, "உச்சிமுதல் உள்ளங்கால்வரை யாவற்றையும் உரித்துக்கொண்டுவிட்டுவிட்டாள்" என்று இக்காலத்தில் கூறுவது, கம்பர் காலத்திலும் வழங்கிற்றுப் போலும்.

வாழ்க்கைப் பயன்.

4. "ஒன்றாகக் காண்பதே காட்சி; புலன் ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரம்; என்றாலும்
சாவாமல் கற்பதே கல்வி, தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்"—**ஔவையார்.**

இவ்வழகிய வெண்பாவின் அருமபெருங்கருத்துக்கள் எளிதில் விளங்கும்.

அ. மா.

பிரபஞ்சத்தில் மனிதன் தனித்திருக்கிறானா?

[ம-ா-ா-ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B. A., B. L., எழுதியது]

நீலமாய்த் தோன்றும் எல்லையற்ற ஆகாயத்தில் கோடானுகோடி உலகங்கள் சுழன்றோடுகின்றன. அவற்றுள் நாம வாழும் பூமியும் ஒன்று.

சுமார் 8000 மைல் குறுக்களவுள்ளது இப்பூமி. அது ஓய்வொழிவில்லாமல் அசைந்து கொண்டேயிருக்கிறது. 24 மணி நேரத்தில் ஒரு தரம் தன்னைத் தானே சுற்றிக்கொள்ளுகிறது; அன்றியும் வினாடிக்கு 18 மைலாக ஓடி 365¼ நாளில் ஒரு தரமாகச் சூரியனைச் சுற்றி வருகிறது. பூமியின் யாத்திரையில் சந்திரன் அதற்கு மிகவும் உற்ற துணை; அது சுமார் இருபத்தேழு நாளில் பூமியைச் சுற்றுகிறது. சந்திரன் சுற்றுவதால் மாதமும், பூமி தன்னுள் சுற்றுவதால் பகலும இரவும் சேர்ந்த நாளும், சூரியனைச் சுற்றுவதால் வருஷமும் கணக்கிடப் படுகின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

சூரியனைச் சுற்றி ஓடுவது இப்பூமி மாத்திரமல்ல. அனேக கிரகங்களும்,[1] [2]தூமகேதுக்களும், [3]உற்கைகளும் அவனது அதிகாரத்துக்குட்பட்டனவே. சரித்திரத்துக்கு முந்திய நாள் [4]முதல் பூமி சுற்றும் வட்டத்துக்கு [5]உள்ளடங்கிய [6]புதனும், [7]சுக்கிரனும். அதற்கு வெளிப்பட்ட [8]செவ்வாயும், [9]வியாழனும், [10]சனியும் நமக்குத் தெரியும். இவை தவிர [11]யூரனஸ [12]நெப்ட்யூன் என்னும் இரண்டு கிரகங்களும் அவனைச் சுற்றியே ஓடுகின்றன.

ஆகவே இவையெல்லாம் சேர்ந்த, ("ஸௌரம்ஜகத்" [13]என்று வடமொழியில் சொல்லப்படும்) சூரியனுடைய ஆகர்ஷண சக்திக்கு உட்பட்ட சூரிய மண்டலமானது சுமார் ஐந்நூறு கோடி மைல் குறுக்களவுள்ளது. இச்சூரியனைச் சுற்றியோடும் கிரகங்களில், முறையே வியாழன், சனி, யூரனஸ், நெப்ட்யூன, பூமி, சுக்கிரன், செவ்வாய், புதன் என்னும் வரிசையில் ஐந்தாவதேயாகும் நமது பூமி.

"ஸௌரம் ஜகத்" என்று சொல்லப்படும் சூரியமண்டலத்துக்கு வெளியிலும் அனேக உலகங்கள் இருக்கின்றன. நமக்கு இரவில் தோன்றும் நக்ஷத்ர,

1. PLANETS. 2. COMETS. 3. METEORS. 4. PREHISTORIC TIMES. 5. ORBIT. 6. MERCURY. 7. VENUS. 8. MARS. 9. JUPITER. 10. SATURN. 11. URANUS. 12. NEPTUNE. 13. SOLAR SYSTEM

திரங்கள் எல்லாம் சூரிய மண்டலத்துக்கு வெளியிலேயே இருந்து பிரகாசிப்பவை. நாம் பார்க்கும் நக்ஷத்திரங்கள் யாவற்றிலும் பிரகாசமானது [14]“ஸிரியஸ்” என்று சொல்லப்படும் ‘லுப்தக’ நக்ஷத்திரம். வியாழன் என்னும் கிரகம் அதைவிட மிகவும் பிரகாசமாய் நமக்குத் தோன்றுகிறது. ஆயினும் நக்ஷத்திரங்கள் கிரகங்கள் அல்ல. அவை ஒவ்வொன்றும் நமது சூரியமண்டலத்துக்கு நடுநாயகமான சூரியனைப் போல் ஒரு சூரியனே. அவை மனதுக்கு எட்டாத தூரத்தில் இருப்பதால் தான் அவ்வளவு சிறியனவாய்த் தோன்றுகின்றன; அசைவற்றனவாய் அவை தோன்றுவதற்கும் அதுவே காரணம். வாஸ்தவத்தில் அவை அதிவேகமாய் வெவ்வேறு கதிகளோடு வெவ்வேறு திசைகளை நோக்கிச் செல்லுகின்றன என்பதை, அதி நுட்பமான யந்திரங்களின் உதவியைக்கொண்டு, அனேக வருஷகாலமாய் மிகவும் சாக்கிரதையாகக் கவனித்துக் கணக்கிட்டு, நவீன வானசாஸ்திரிகள் இப்போது நிருணயித்திருக்கிறார்கள்.

நக்ஷத்திரங்கள் நம்மிடமிருந்து இருக்கும் தூரத்தை சாதாரணமாய் மைல் அளவையில் சொன்னால் மனது கிரகிக்காது. உதாரணமாக, சூரிய மண்டலத்தின் குறுக்களவு ஐந்நூறு கோடிமைல் என்று தெரியுமல்லவா? நாம் (திருஷ்டாந்தத்துக்காக) நூறுகோடி மைலை ஒரு அடி தூரம் என்று வைத்துக் கொண்டால், சூரியமண்டலத்தின் குறுக்களவு ஐந்து அடியேயாகும். நமக்கு மிகவும் சமீபத்தில் இருக்கும் நக்ஷத்திரத்துக்கு [15]மித்திரன் என்று பெயர். அது இருக்கும் தூரத்தை இப்பிரகாரம் கணக்கிட்டுப்பார்த்தாலோ, மூன்றரை மைலாகும்! இதை வேறு விதமாகவும் கணக்கிடுவதுண்டு. ஒளி, வினாடிக்கு I,86,000 மைல் வீதம் செல்லுகிறதென்று நமக்குத் தெரியும். அந்த ஒளி சந்திரனிடமிருந்து நமக்கு வர ஒன்றரை வினாடி காலமாகிறது. அப்படிச் செல்லும் ஒளி சூரியமண்டலத்தைக் கடக்க எட்டரை மணி நேரம் பிடிக்கிறது. முன் சொன்ன மித்திரன் என்னும் நக்ஷத்திரனிடமிருந்து அது நம்மிடம் வந்து சேருவதற்கோ சுமார் நாலு வருஷமாகிறது! இன்னும் அதிதூரத்திலுள்ள வேறு நக்ஷத்திரங்களின் ஒளி நம்மிடம் வந்து சேர ஆயிரக் கணக்கான வருஷங்களாகின்றன!

‘ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்களைக் கணக்கிட முடியாது’ என்பது பழமொழி. அவை யாவுமே நமது கண்ணுக்குப் புலப்படவில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இன்னும் அநேக நக்ஷத்திரங்களை நம்மால் காண முடியும், சில அதற்கும் எட்டாமல் இருக்கக்கூடும்.

இந்த எண்ணிறந்த நக்ஷத்திரங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியன் என்று முன்னே சொல்லியிருக்கிறோம். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரிய மண்டலத்துக்கு அதிபதியாகவே இருத்தல் வேண்டும். எவ்வளவு பெரிய தூர திருஷ்டிக கண்ணாடியாலும் அந்த மண்டலங்களைச் சேர்ந்த கிரகங்கள் முதலியனவற்றை எட்டுவது சாத்தியமல்ல.

14. SIRIUS. 15 ALPHA CENTAURI.

மேற்சொன்ன யாவற்றையும் ஒருங்கு சேர்த்தே பிரபஞ்சம் என்று சொல்லுகிறோம்.

இப் பிரபஞ்சம் என்பது நீச்சோதியிலிருந்து உண்டானதென்பது "[16] தூம படலவாதியார்" கொள்கை. அதாவது, முதலில் எல்லாம் ஒரே சோதிமயமாக அதிவேகமாய்ச் சுழன்று கொண்டிருந்த தென்றும்; அச்சுழற்சியால பத்பல சோதிச்சுடர்கள் வெளியே தெறித்தன என்றும்; அச் சுடர்கள் ஒவ்வொன்றும் சுழற்சியின வேகததால் வெகுதூரம் எறியப்பட்டு, ஒரு தூரத்துக்கப்பால நடுவின்ற சோதியின் ஆகர்ஷண சக்தியால் தடுக்கப்பட்டு, பிறகு தானும் சுழனறு கொணடு நடுச் சோதியைச் சுற்றிக்கொண்டே வருகின்றதென்றும்; இப்படியே ஒவ்வொரு நீச்சுடரிலிருநதும மற்ற சிறு சுடர்கள் தெறிததுச் சுழன்று சுற்றுகின்றன என்றும், அவர் கூறுகின்றனர். இப்படிச் சுற்றும் சுடர்களில் பல சிறியவை, பல பெரியவை. இவற்றுள ஒரு சுடரே நமது சூரியன். அச் சூரியனிலிருந்து தெறிததவை பூமி முதலியன. பூமியிலிருந்து தெறித்தது சந்திரன் என்னும் உபகிரகம்[17]. இச்சுடர்கள் வெகு காலமாய்ச்சுழன்று வருகையில் தங்களுடையவெப்பத்தை இழக்கின்றன. அப்படி இழக்கும் சுடர்களில் சிறியவை சீக்கிரம் குளிர்நது போகின்றன. சூரியன் வெகுகாலமாகச் சுழன்றபோதிலும் இன்னும் அதிக வெப்பத்துடனிருக்கிறது; பூமி, மேலே குளிர்ந்து, உட்புறம் ஆறுமல், இக்காலத்தும் நெருப்பை யுடைததாயிருக்கிறது; சந்திரனே உளளும் புறமும் ஒரே மாதிரியாகக் குளிர்ந்து போய் விட்டது.

இனி; பூமியில் வாழும் நம்மைப்போன்ற மனிதரேனும், அல்லது நம்மைப்போன்ற ஜீவ ஜநதுக்களேனும், பூமியைத்தவிர்தத கோடானுகோடி கோளங்களில் எதிலேனும் உண்டா என்று விசாரிப்போம்.

நமது பூமியையே கவனித்துப் பார்த்தால், எல்லா இடஙகளிலும் மனிதன் சஞ்சாரம் பண்ணி வாசமும்செய்து வருவது தெரியும்: உறைநதிருக்கும் பனியின் மததியிலும், நெருப்பெனவே பொசுக்கும் உஷ்ணமான தேசங்களிலும், அவன் வேண்டிய சௌகரியங்களைச் செயது கொண்டு வாசம்செய்கிறான். அப்படிப்பட்ட தேசஙகளில் மனிதன் மாத்திரமலல, இதர ஜநதுக்களும் கணக்கின்றிப் பிழைதது வாழ்நது வருகின்றன. ஆயினும் இதற்கெல்லாம் ஓர் எல்லையுண்டு. குளிரையும், சூட்டையும் ஓர் அளவு மட்டுமே உயிர் தாங்குமே யன்றி, அந்த மட்டுக்கு மிஞ்சினுல் உயிர பிழையா. இது தவிர,பூமியில் வசிக்கும் திரளான ஜீவஜநதுக்கள எலலாம் ஒரே மாதிரியாயில்லாமல், சீதோஷ்ண நிலை, பூமி வித்யாசம் முதலியவைக் கிணங்க, மாறுபாடுகள் அடைநதிருக்கின்றன. உதாரணமாக, மனித ஜாதியிலேயே வெவ்வேறு தேசஙகளிலுள்ள ஜனங்கள் வெவ்வேறு தோற்றங்களை உடைத்தா

16 NEBULAR THEORISTS. 17 SUB-PLANETARY BODY OR SATELLITE.

யிருக்கின்றனர்: சிலர் வெளுப்பு, சிலர் கறுப்பு, சிலர் சிவப்பு, சிலர் மஞ்சள், இம்மாதிரி வெவ்வேறு வர்ணத்தாராயு மிருக்கின்றனர். இப்படியே இதர ஜீவஜந்துக்களை கவனித்து நோக்குங்கால், அவை இப்பூமியின் மாறுபாடுகளுக் கிணங்க வேறுபாடுகள் அடைந்திருக்கின்றன. புல் பூண்டுகளிலும் அப்படியே.



சூரியனும் அதன் கிரகங்களும்
அளவு தெரியுமாறு வரையப்பட்டிருக்கின்றன

சீதோஷ்ண நிலைமை, தேச வளமை, முதலியனவுக்கு இணங்கியே உயிரினங்கள் பிறந்து, வளர்ந்து, செழித்து, அல்லது குன்றி, நசித்து வருகின்றன. அனேக ஜந்துக்கள் தங்களுக்குவேண்டிய சௌகரியங்கள் இல்லாமற்போகவே, அவற்றைத் தேடிப் பிழைக்கும் வழி தெரியாமல் நசித்துப் போய்விட்டன. இதையெல்லாம் கவனித்தால், இடத்துக்குத் தக்கபடியே உயிர் உண்டாயிருக்கிறதென்பது விளங்கும். ஆகையால் மனிதன் வேறொரு உலகத்திலிருக்க வேண்டுமானால், அவ்வுலகம், சீதோஷ்ண நிலைமை முதலிய அம்சங்களில்

யாவற்றிலும் நம்முடைய பூமியை ஒத்திருக்கவேண்டும். இது மாத்திரமல்ல; முன் காலங்களிலும் அப்படியே ஒத்திருந்திருக்க வேண்டும். சிறு மாறுதல்கள் கூட உயிரில் வித்தியாசங்களை விளைக்கிறபடியாலும், நமது பூமியை எல்லா விஷயங்களிலும் ஒத்த உலகம் நமக்கு இதுவரையில் புலப்படாததாலும், வேறெந்த உலகத்திலும் மனிதன் இல்லை யென்று கூறத் துணியலாம்.

ஆயினும் "**மனிதன்**" என்னும் பதத்துக்கு '**மன**' என்னும் வடமொழிக் கிணங்க, **ஆராயும் ஓர் ஜந்து** என்று சுருக்கமாய் அறிந்தோர் பொருள் அளித்திருக் கிறார்கள். அப்பொருட்கொத்த '**மனிதன்**' வேறெந்த உலகத்திலும் இருக்கக் கூடுமோ என்பது ஆராயத் தக்கது.

நம்மைச் சுற்றிலும் இருக்கும் உலகங்களைக் கவனித்ததில், நக்ஷத் திரங்கள் எல்லாம் சூரியர்களாயும், அத்யுஷ்ணமானவாயும் இருப்பதால், அவற்றில் உயிரே இருக்க முடியாது. அதேமாதிரியே தூமகேதுக்களையும், உற்கைகளையும் தள்ளிவிடலாம். இனிமேல் கவனிக்கவேண்டிய உலகங்கள், சூரியனைச் சேர்ந்த கிரகங்களும், அதே மாதிரி மற்ற சூரியர்களாகிய நக்ஷத் திரங்களைச் சேர்ந்த கிரகங்களுமே. பின் சொன்ன கிரகங்கள் இருக்கக்கூடும் என்னும் ஊகத்தைத் தவிர, அவை இருக்கின்றன என்று சொல்வதற்கு ஆதாரம் கிடையாது; எவ்வித தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கும் அவை எட்டா. ஆகையால் நாம் கவனித்தற்குரியன நமது சூரியனது கிரகங்களே: அவற் றைப் பரிமாணக் கிரமமாக கவனிப்போம்:—

முதலாவது வியாழன். இது பூமியைவிட சுமார் 1200 மடங்கு பெரி யது; சுமார் முன்னூறு மடங்கு கனமுள்ளது; இங்கே ஒரு நாளொன்பது சுமார் பத்துமணி நேரம்; பருவ வித்தியாசங்கள் அதிகமாகக் கிடையாது; ஒரு வருஷம் 4332½ நாள்; இங்கே கிடைக்கும் சூரிய வெளிச்சமும் வெப்பமும் நமக்குக் கிடைப்பதில் $\frac{1}{25}$ இருபத்தைந்தில் ஒரு பாகமே; தரைமட்டத்தில் ஆகர்ஷண சக்தி நமது பூமியிலிருப்பதினும் இரண்டரை மடங்கு அதிகம். ஜீவ ஜந்துக்கள் இருக்கக்கூடும்; ஆயின், அவை பூமியிலுள்ள ஜந்துக்களைப் போலவே இருக்கமாட்டா. ஆகர்ஷண சக்தி ஜாஸ்தியா யிருப்பதால், ஜந்துக் களின் அளவு சிறியதாகவே இருக்கவேண்டும். இப்பிரமாண்டமான கோளத் தில் ஜந்துக்களும் பிரமாண்டமாகவே இருத்தல வேணடும் என்பது தப் பென்றே சொல்லலாம். ஆயினும், 'மனிதன்' இருக்கிறான் என்று சொல்வ தற்காவது, அல்லது இல்லை என்று மறுப்பதற்காவது, ஆதாரம் கிடையாது.

இரண்டாவது சனி. பூமியை விட சுமார் 700 மடங்கு பெரிது; சுமார் தொண்ணூறு மடங்கு கனமுள்ளது; இங்கும் ஒரு நாள் சுமார் பத்தரை மணி நேரம், சுமார் 29½ வருஷத்தில் ஒருதரம் சூரியனைச் சுற்றி வருகிறது இதற்குக் கிடைக்கும் சூரியவெளிச்சம் நமக்குக் கிடைப்பதில் $\frac{1}{91}$ தொண்ணூற்றொன் றில் ஒரு பாகமே. ஆகர்ஷணசக்தி அனேகமாய் நமது பூமிக்கு ஒத்ததென்றே சொல்லலாம். இதிலும், ஜீவஜந்துக்கள் இருக்க முடியாதென்று சொல்வதற்

கேதுவில்லே. ஆயினும், இங்கே அனேக இடங்களில் சூரியன் ஐந்து வருஷ காலமும், சில இடங்களில் ஏழு வருஷ காலமும், கிரகணத்துக்குட்பட்டுக் கண்ணுக்கே புலப்படாமல் இருப்பது கவனிக்கத் தக்கது. பூமியிலிருக்கும் ஜந்துகளைப் போன்ற ஜந்துகள் இதில் இருக்கவே முடியாது.

மூன்றாவது யூரனஸ்- பூமியைவிட சுமார் 74 மடங்கு பெரியது. இது 84 வருஷங்களில் சூரியனைச் சுற்றி வருகிறது. இது வெகு தூரத்திலிருப்பதால் இதிலிருப்போருக்குச் சூரியன் பகலில தோன்றும் ஒரு நக்ஷத்திரம போலவே புலப்படும். இதற்குக் கிடைக்கும் வெப்பமும் ஒளியும் மிகக் குறைவு. இங்கும் நமது பூமியிலிருக்கும் ஜந்துக்களை ஒத்தவை இருக்கமுடியாது.

நான்காவது நேப்ட்யூன். பூமியைவிட சுமார் 150 மடங்கு பெரியது. இங்கு தெரியும் சூரிய பிம்பம் நமக்குத் தெரியும் பிம்பத்தினளவில் தொள்ளாயிரத்திலொரு பங்கே ($\frac{1}{900}$). ஆகவே ஒளியும், வெப்பமும் எவ்வளவு கொஞ்சமாய இருக்கக் கூடுமென்று ஊகித்துக்கொள்ளலாம். பூமியிலிருக்கும் உயிரை ஒத்த உயிா இங்குமில்லே. குளிர்ச்சியின் மிகுதியால் இவ்விரண்டு கிரகங்களிலும் உயிர் இருப்பதே அரிது.

ஐந்தாவது வெள்ளி அல்லது சுக்கிரன். அளவாலும், இருக்குமிடத்தாலும் அடர்த்தியாலும், பருவங்களின் முறைமையாலும், சுழற்சியாலும், சுழன்றோடும் மார்க்கத்தின் உருவத்தாலும், சூரியனிடமிருந்து பெறும் உஷ்ணம், ஒளி இவைகளாலும், ஏனைய கிரகங்களைக் காட்டிலும், பூமியை அதிகம் ஒத்தது இதுவே. இதற்கு ஓர் உபகிரகம் மட்டும் இருந்தால், இப்பிரபஞ்சம் முழுவதிலும் வேறு உலகங்கள் இரண்டு இவ்வாறு ஒத்திருக்கக் கூடுமோ என்னும் அதிசயத்துக்கிடமாகும். இதன் ஒரு நாள் நமது தினத்தைவிட அரை மணிநேரமே குறைவு; இதன் வருஷம் சுமார் 225 நாள். இங்கு தெரியும் சூரிய பிம்பத்தின் குறுக்களவு நமக்குத் தெரியும் பிம்பத்தின் அளவைவிட மூன்றில் ஒரு மடங்கு பெரிது. சூரிய வெப்பமோ நமக்குக் கிடைப்பதற்கு இரட்டிப்பு. ஆயினும் உயிர் இங்கே இருக்கக் கூடும். கோடை காலத்தில் வெப்பம் மிகவும்அதிகமாயிருக்கும்; உடனே மிகவும் குளிர்ச்சியானபனிகாலம் வரும்;இம் மாறுதல்களை நமது பூமியில் வாழும் மனிதர்கள் பொறுத்து வாழமுடியாது; ஆயினும், இம் மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லே. வான சாஸ்திரிகள் இதைப்பற்றி அபிப்பிராய பேதப்பட்டிருக்கிறார்கள். இங்கே பருவங்கள் பூமியிலுள்ளவை போலவே இருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டால்,மற்ற விஷயங்களில் பூமியை ஒத்திருக்கும் இக்கிரகத்தில் வசிக்கும் ஜீவஜந்துக்களும், பூமியிலிருக்கும் ஜீவஜந்துக்களை ஒத்திருக்குமென்று சொல்வதற்கு ஐயமில்லே.

ஆறாவது செவ்வாய். இதைப்பற்றிய வாதம் அதிகமாயிருப்பதால் இதைப்பற்றி அடுத்த வியாசத்தில கூறுவோம்.

ஏழாவது புதன்—இதன் குறுக்களவு சுமார் 3000 மைல்: இதற்குக் கிடைக்கும் சூரிய வெளிச்சம் நமக்குக் கிடைப்பதைவிட, பத்து மடங்கு அதிகம். சூரிய பிம்பமும் சுமார் ஐந்து மடங்கு பெரிதாய்த் தெரியும்; ஆகர்ஷண சக்தி மிகவும் குறைவு. இங்கு ஒருநாள் நமது நாளளவுள்ளது; ஆயினும் ஒரு வருஷத்துக்கு 88 நாள் மட்டுமே. இங்கு வெப்பத்தின் மிகுதியால் உயிர் இருப்பது அரிது.

நாம் இனிமேல் கவனிக்க வேண்டியவை உபகிரகங்கள்.

சந்திரன். இங்கே வாயுமண்டலமில்லை. கடல்கள், சமுத்திரங்கள் முதலியன ஒன்றும் கிடையா; பருவங்கள் கிடையா. இங்கே ஒரு பகலென்பது நமது நாள் பதினைந்துக்குச் சமம். இரவும் அப்படியே. இங்கே நீர், காற்று எல்லாம் பனியாய் உறைந்து, பதினைந்து நாள் ஒரேமாதிரி அடிக்கும் வெயிலிலும் உருகுவதில்லை என்பது ஒரு கொள்கை; மற்றொன்று, இவையெல்லாம் சந்திரனாலே கிரகிக்கப்பட்டு, சந்திரனுடைய பதார்த்தமாகவே மாறிவிட்டதென்பது. இதையே சரியெனக் கொள்ளலாம். எப்படியிருப்பினும் உயிருக்கு இன்றியமையாத வாயுவும் நீரும் இல்லாமையால், இங்கே உயிர் இல்லை என்பது திண்ணம்.

மற்ற உபகிரகங்கள். வியாழனைச் சுற்றி எட்டும், சனியைச் சுற்றிப் பத்தும், யூரனஸ்ஸைச் சுற்றி நான்கும், நெப்ட்யூனிடம் ஒன்றுமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுலகங்களைப்பற்றி அதிகமாய்த் தெரியாதபோதிலும், அவற்றில் உயிர் இருப்பது அரிதென்று சொல்லலாம்.

(இன்னும் வரும்)

'**பகவத் கீதை-விசுவரூபதரிசனம்:**— * * * ஓ! ஜகங்களுக்கெல்லாம் ஈசனே! அநேகங்களான கைகள் வயிறுகள் முகங்கள் கண்களை யுடையவும் அநேக ரூபங்களை யுடையவுமான உம்மை எவ்விடத்திலும் பார்க்கிறேன். உம்முடைய ஆதியையாவது மத்தியத்தையாவது முடிவையாவது நான் காணவில்லை. கிரீட கதாயுத சக்கராயுதங்களை யுடையவும், தேஜஸ் கூட்டமாயும், எங்கும் பரவிய காந்தியை யுடையவும், அதிக கஷ்டத்தினால் பார்க்கத்தக்கவும், ஜ்வலித்துக் கொண்டிருக்கிற சூரியன், அக்கினி இவர்களைப் போலொத்த ஒளியையுடையவும், அளவிடக் கூடாதவுமான உம்மை எவ்விடத்திலேயும் பார்க்கிறேன். நீர் முமுக்ஷுக்களால் அறியத்தகுந்த பரப்பிர்ம்மம்; இந்த பிரபஞ்சத்துக் கெல்லாம் உத்தமமான ஆதாரம்; நாசமற்றவர்; சாசுவதமான தருமத்தை ரக்ஷிப்பவர், எப்போதுமுள்ள பரமபுருஷர். ஓ பரமாத்மாவே! ஆகாச பூமிகளுக்கு மத்தியப் பிரதேசமான அந்தரிக்ஷமானது, உம்மாலேயே வியாபிக்கப்பட்டிருக்கிறது. சகல திக்குகளும் உம்மாலேயே வியாபிக்கப்பட்டிருக்கின்றன. * * * *

மாடுகளை விருத்தியாக்கி வளர்த்தல்.

[ம-௱-௱-ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
G. B. V. C. எழுதியது.]

இந்தியாவில் உள்ள ஜனங்களில் சற்றேறக் குறைய நூற்றில் எண்பது பேர் நேராக விவசாயத்தினாலே ஜீவனஞ் செய்கிறார்கள்; மிஞ்சிய இருபது பேரில் மிகப் பெரும்பாலார் விவசாய விருத்தி செழிப்பாக நடக்கும்போது செழிப்பாகவும் கஷ்டமாக நடக்கும்போது கஷ்டமாகவும் காலங்கழிக்கிறார்கள். அப்படிப்பட்ட அதி முக்கியமான விவசாயத் தொழில் நடைபெறுவதற்கு இன்றியமையாத சாதனம் மாடு என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். **"இந்திய தேசத்துக்கு விவசாயம் ஜீவாதாரம்"** ("Agriculture is the backbone of India") என்றும், **"இந்தியாவில் விவசாயத்துக்கு மாடு ஜீவாதாரம்"** ("cattle in India are the backbone of agriculture") என்றும், ஆகையால் **மாடு இந்தியர்வுக்குப் பிரதம ஜீவாதார**மென்றும் பல பெரியோர் மிக உண்மையாய்ச் சொல்லி யிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு அதி முக்கியமான பிரயோஜனமுள்ள மாடுகளின் பல உபயோகங்களைப் பற்றி இங்கே சுருக்கமாகச் சொல்வது அனாவசியமாகாது. யந்திர சாஸ்திரம் ((Mechanics)) எவ்வளவு விரைவாக விருத்தியடைந்தாலும், இன்னும் நெடுங் காலம்வரை இந்த தேசத்திலே மாடுகளே விவசாய வேலைகளுக்கு முக்கியமாக உபயோகப்படுத்தப்படும். (1) உழுவதற்கும் (2) கைவிதைப்பினால் விதைத்த நிலங்களில் நெருக்கமாயுள்ள பயிரைக் கலைப்பித்தலுக்காகவும் (3) தெலுங்கில் கொர்ரு என்ற விதைக்கலப்பை (Seed drill) யினால் விதைத்த நிலங்களில், பயிர் வரிசைகளுக்கு மத்தியில் உறைந்த மண்ணைக் கிளறிக் களைகளைப் பறித்துப், பயிர் மூட்டுக்கு மண்ணை அணைப்பதற்காகவும் பயிரடித்தல (Interculturo) என்ற ஊடுழவு செய்தலுக்கும், (4) பயிருக்குத் தண்ணீர் இறைத்தலுக்கும், (5) புலத்தில் அறுத்த அரி (Stalks with ears)களைக் களத்தில் பிணையல் வைத்துமிதித்துத் தானியம்வேறு தாள்வேறாகப் பிரித்தலுக்கும் (6) தானியத்தையும் மற்றவிவசாயப்பலன்களையும் வண்டி எருதுகளாகவும் பொதி எருதுகளாகவும் சந்தைகள் அல்லது பேட்டை (Emporium) களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தலுக்கும், (7) எள் முதலிய எண்ணெய் விதைகளைச் செக்கில் ஆட்டலுக்கும், (8) கரும்பை ஆலையில் நெரித்தலுக்கும், (9) வீடு முதலிய கட்டடங்கள் கட்டுவோர்க்குச் சுண்ணாம்பை ரோதையில் அரைத்தலுக்கும், (9) சவாரி வண்டி ஓட்டுதலுக்கும் காளைமாடுகள் உபயோகிக்கப் படுகின்றன. பசுக்களில் பெரும்பான்மையானவை வருஷத்துக் கொருமுறை கன்று போடுகின்றன. அவைகளின் பாலும், பாலிலிருந்து செய்யும் மோர் வெண்ணெய் நெய் ஆகியவைகளும் மனிதருக்கு இனிய உணவுப்பொருள்களா யிருக்கின்றன.

காளைமாடுகள் பசுமாடுகள் கன்றுகள் ஆகியவைகளின் சாணமும் மூத்திரமும் அவைகள் கழித்த தீவனமும் கலந்துசேர்ந்த எரு(Farm-yard manure)

புலங்களுக்குப் பிரதானமான உரமாக உபயோகப்படுகிறது. மாடுகள் ஹிந்துக்களுடைய சகல சுபாசுபகிரியைகளும் செய்யும் காலங்களில் பிராமணர்களுக்கும் தேவதைகளுக்கும் பிரீதியாகத் தத்தம் செய்யப்படும் தானப்பொருள்களாக உபயோகப்படுகின்றன. இறந்துபோனவர்களுடைய ஆன்மாக்களின் திருப்திக்காகவும் கௌரவத்திற்காகவும் அவர்களுடைய வாரிசுகளாலும் பந்துக்களாலும் காளைகள் நேர்த்திக்கடனுக்குக் கோவில்களுக்குத் தத்தஞ் செய்துவிடப் படுகின்றன. அப்படிப்பட்ட காளைகள் தெய்வீகமானவைகளாக ஜனங்களால் பக்தியோடு கருதப்பட்டு, யதேச்சையாகத் திரிந்து, பயிராயிருக்கிற நிலங்களிலுங்கூடத் தடையில்லாமல் மேயும்படி விட்டுவிடப் படுகின்றன. இந்தக் காளைகள் கால்நடைகளை விருத்தி செய்யும் பொலியெருதுகளாக உபயோகமாயிருக்கின்றன.

பசுக்களின் சாணம் மூத்திரம் பால் தயிர் நெய் என்னும் அஞ்சும் சேர்ந்த பஞ்சகவ்வியம் சுத்திகரிக்கும் கிரியையாகிய புண்ணியாவாசனத்தில் உபயோகிக்கப்படுகிறது.

மாடுகள் இறந்த பின்பும் உபயோகமாகாமல் ஒழிகிறதில்லை. செத்த மாட்டின் தேகம் முழுவதும் உரமாக உபயோகமாகிறது. ஒரு செத்த மாட்டுத் தேகத்தின் உரம், சாணம் மூத்திரம் தீவனக்கழிவு சேர்ந்து ஆகும் முப்பது வண்டி எருவுக்குச் சரியாயிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. செத்த மாட்டுத் தேகத்தின் மயிர் தோல் எலும்பு முதலிய பல பாகங்களும் உரமாயிருப்பதேயல்லாமல், டாக்டர் ஷார்ட் என்பவருடைய இந்தியக் கால்நடைகளைப் பற்றிய புஸ்தகத்தில் விவரித்திருக்கிற பல காரியங்களுக்கு உபயோகமாகின்றன. அந்த விவரமாவது:—

கொல்லப்பட்ட மாடுகளின் மாமிசம் உலகத்தில் உள்ள ஜனங்களில் பெரும்பாலாருக்கு இறைச்சியாகப் பிரயோஜனப் படுகிறது. மாட்டுத்தோல் மயிர்போகப் பதனிடப்பட்டுப் பலவகையாக உபயோகமாகின்றது. மயிர் பலவிதமான கைத்தொழில்களுக்கு உதவுகிறது. கைத்தொழிலாளிகள் கொம்பினால் பெட்டிகளும் சீப்புகளும் கத்திப்பிடிகளும் பானபாத்திரங்களும் செய்கிறார்கள். எலும்புகள் தந்தத்துக்குப் பதிலாக உபயோகிக்கப்படுகின்றன. குருத்தெலும்புகள் (Cartilages), தோற்கழிவுகள் (உபயோகமானவை போகக் கழிக்கப்பட்ட தோற் பாகங்கள்), வச்சிரப்பசை செய்வதற்கும் பயன்படுகின்றன. குதிரை ஜீனி செய்யும் செம்மார் முதலியவர்கள் தைப்பதற்கு நரம்பை நூலுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். குளம்பிலிருந்து 'நீட்' எண்ணெ யென்ற ஒருவகை யெண்ணெய் இறக்கப்படுகிறது. அந்த எண்ணெய் தோலை வேலை செய்வதற்குச் சித்தமாகவும் மெதுவாகவுஞ் செய்கின்றது. கொழுப்பு மெழுகுவர்த்தியாகச் செய்யப்படுகிறது. ஆகவே, மாட்டின் தேகத்தில் எந்தப்பாகமும் பிரயோஜன மற்றதென்று கழிக்கப் படுகிறதில்லை.

ஏழைக் குடியானவர்கள் தங்கள் குழந்தைகளை யிழந்தபோது துக்கப்படு வதைக் காட்டிலும் அதிகமாக தங்கள் கால் நடைகளை யிழந்தபோது துக்கப் படுவதை நான் அநேக சமயங்களில் பார்த்திருக்கிறேன். இவ்வாறு விசனப் படுவதற்குக் காரணம் என்னவென்றால்— ஒரு சோடி எருதுகள் உள்ள ஒரு ஏழைக்குடியானவனுக்குச் சொந்த நிலமில்லையாயினும், நிலமுடைய வர்களிடம் குத்தகைக்காவது வாரத்துக்காவது பயிரிட நிலம் ஏற்றுக்கொண்டு, உழுது தண்ணீர் இறைத்துப் பயிரிட்டுக் குத்தகையோ மேல்வாரமோ நிலக் காரனுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டதைக் கொடுத்துவிட்டு, மிகுந்ததைக்கொ ண்டு தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றுகிறான். அப்படிப்பட்டவன் தன் எருதுகளை இழந்தால், கேவலம் கூலி வேலைசெய்து காலந்தள்ளும்படி நேரிடு கிறது. குடியானவன் என்னும் உயர்ந்த நிலைமையை இழந்து கூலியாள் என்னும் தாழ்ந்த நிலைமையை அடைகிறான். பிறர் நிலத்தை யானாலும் தான் சுவாதீன ணாய்ப் பயிரிட்டதுபோய் ஒரு முதலாளிக்குக் கீழ் அடங்கிக் கூலிக்கு வேலைசெய் யும் நிர்ப்பந்தம் உண்டாகிறது. அப்படிப்பட்ட கூலிவேலையும், பயிரிடும் வேலை போல, எப்பொழுதும் செய்ய அகப்படுகிறதில்லை. இவ்வாறு ஏழைக்குடியான வர்களுக்கு மாடு இழப்பதனால் நேரிடும் கஷ்டம் காரணமாக உண்டாகும் துக் கம், தங்கள் குழந்தைகளை யிழக்கும் துக்கத்தைக் காட்டிலும் பொறுக்கக் கூடாததாயிருக்கிறது. இதனால் மாடுகள் குடியானவர்களுக்கு எவ்வளவு அதி முக்ய உபயோகமானவைகளென்பதைத் தெளிவாகத் தெரியலாம்.

பயிரிடுந் தொழிலில், உழுதல் முதலிய கஷ்டமான வேலைகளைச் செய் யும் மாடுகள், மாகுலில ராழ்வான வைக்கோலைத் தங்கள் பங்குக்குப் பெறு கின்றன. அம்மாடுகளுக்கு உடையவனே சிறந்த பாகமாகிய தானியத்தைத் தன் உபயோகத்துக்கென்றே வைத்துக்கொள்கிறான். * பயிர்த்தொழிலில் முந் திய பாகமாகிய உழுதலைச்செய்த மாடுகள் பயிரில் முந்தி உண்டான தாளையே பெற, பிந்திய பாகமாகிய களைபிடுங்கல் தண்ணீர் பாய்ச்சல் முதலிய வேலை யைச்செய்த கிருஷிகர் பிந்தி உண்டாகிய தானியத்தைப் பெறுகிறார்க ளென்று ஒரு தமிழ்க்கவிஞர் விநோதமாகக் கூறியிருக்கிறார். † அவரே பசு வைப்பற்றிப் பின் வருமாறு வருணித்திருக்கிறார்:—பெற்றுக்கொள்வது அற்ப மாகவும் பிரதியாகத் தருவது அபாரமாகவும் இருக்கிறதனால், பசுக்கள் தேவ தேவனாகிய பரமசிவனுக்கே சமானமாயிருக்கின்றன. எப்படி என்றால், சிவன் அற்பமான புல்லும் நீரும் இட்டுப் பூசிப்போருக்கு அவ்வுலகத்தில மோக்ஷ சாம் ராஜ்யத்தையே கொடுப்பதுபோல, பசுக்களும் அந்தப் புல்லும்நீருமே தங்களுக் குக்கொடுப்போர்க்கு இவ்வுலகத்தில உபயோகமான பொருள்களெல்லாவற்றி லும் சிறந்த உபயோகமுள்ள பாலைக் கொடுக்கின்றது.

(இன்னும் வரும்.)

---

* தணிகைப்புராணம், நாட்டுப்படலம்.

† பேரூர்ப் புராணம், நாட்டுப்படலம்.

"எனது பழைய தோழர்."

(1) என்னுடன் கல்வி இளமையில் கற்றவர்,
என்னுடன் இன்பமாய் ஆடிய தோழர்,
அனைவரும் போயினர், அந்தோ !
எனது பழைய தோழர் எவருமே.

(2) உரிமை நண்பரோ டுண்டாட் டயர்ந்தும்,
சிரிதலும், பேசியும் சென்றன பலநாள்;
அனைவரும் போயினர், அந்தோ !
எனது பழைய தோழர் எவருமே.

(3) அழகில் எதிரிலா ஒருத்திமேல் அன்பாய்ப்
பழகினன்; இன்றவள் என்முகம் பார்க்கிலள்;
அனைவரும் போயினர், அந்தோ!
எனது பழைய தோழர் எவருமே.

(4) இருக்கிறான் ஒரு துணை; எவரும் இணையிலை;
பொருக்கென, நன்றி கெட்டவர் போல, நான்
அந்த நண்பனை அகன்றேன்,
சிந்தையில் பழைய என் சிநேகரை நினைந்தே.

(5) இளமையில் இருந்த இடமெலாம், பேய்போல்
அலைய வந்தேன்,—நான்செலற் குரியதோர்
பாழென இருந்ததிப் பாரும்,—
தோழர் பழையரைத் துருவித் தேடியே.

(6) என்னுயிர்த் தோழ! என் தம்பியின் இனிய நீ
என்னுடன் எந்தையில் ஏனோ பிறந்திலை?
இன்று நம் தோழரை எண்ணி
ஒன்று சேர்ந்து நாம் பேசல் ஒண்ணுமே:

(7) இறந்தனர் சிலர், எனைத் துறந்தனர் சிலர், சிலர்
மறந்தெனை நீங்கினர் மற்றவர் பிரித்தென.
அனைவரும் போயினர், அந்தோ!
எனது பழைய தோழர் எவருமே.

அ. மா.

---

* Charles Lamb's *The Old Familiar Faces.*

ஐரோப்பாவின் ஆதிசரித்திரம்.

[சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் சரித்திர போதகரான ம-ா-ா-ஸ்ரீ தி. சே. சுப்பிரமணிய ஐயரவர்கள் **M. A, L. T.,** எழுதியது]

நாகரீகம் மிகுந்த இக்காலத்தில் ஐரோப்பியர்களின் ஆரவாரங்கள் இவ்வுலகம் முழுதும் காணப் படுகின்றன. அவர்களது நாகரீகமும், மேன்மையும் எங்கும் வெளியாகின்றன. வர்த்தகம், கைத்தொழில், அறிவு, விவேகம், தைரியம் முதலியவற்றில் அவர்கள் இணையற்றவர்களா யிருக்கிறார்கள். அவர்களிடத்து, பொருட் செல்வத்திற்குத் தக்கவாறு அருட் செல்வமும் ஏற்பட்டிருக்கின்றது. எவ்விதத்திலும் இவ்வுலகிலுள்ள மற்ற மனிதர்களை விட ஐரோப்பியர்கள் திறமைப்பட்டு வருகிறார்கள்.

இப்பொழுது போலவே அவர்கள் எப்போதும் எவ்விதத்திலும் மேன்மை பெற்றிருந்தார்களென்று நினைப்பது தவறு. ஆதிகாலத்தில் ஈஜிப்த், பாரஸீகம், இந்தியா, சீனதேசம் முதலிய நாடுகளில் ஜனங்கள் மேன்மையையும், நாகரீகத்தையும் பெற்று, பெரிய ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டு, சிறந்த நகரங்களிலும், பரவிய கிராமங்களிலும் சுகித்து வாழுங்காலங்களில், ஐரோப்பியர்கள், கடற்கரையில் மீன் பிடித்துக்கொண்டும், அடர்ந்த காடுகளில்காய்கனி விலங்குகளைத் தின்றுகொண்டும், நாகரீகமற்ற நிலைமையில் அங்கு மிங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்ததாக நமக்குத் தெரிய வருகின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேதான் ஐரோப்பாவின் தென்னாடுகளில் நாகரீக வாழ்க்கையின் சில சின்னங்கள் காணப்படுகின்றன. இந்நாகரீகமும் ஆசியாகண்டத்தினின்று மேற்றிசை நாடுகளுக்குப் பரவியதாகத் தோன்றுகிறது. முதல் முதல் மத்திய தரைக்கடலைச்சுற்றியுள்ள நாடுகளிலேயே நாகரீக வாழ்க்கை ஆரம்பித்து, நாளடைவில் வடக்கே நோக்கிப் பரவிற்று. ஆதிகாலத்தில் மத்தியதரைக்கடலில் கப்பல் வியாபாரத்தைச் செய்து வந்த ஆசியாகண்டத்து ஜாதியார் ஒருவரே, முதல் முதல் "கிரீஸ்", "இதாலியா", "ஆபிரிகா" முதலிய இடங்களில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தி நாகரீகத்தையும் பரவச் செய்தவர்கள். இக்காரணம் பற்றியே கடற்கரையோரமாயுள்ள தேசங்களிலேயே ஐரோப்பாவில் நாகரீக வாழ்க்கை முதலில் ஏற்பட்டது. ஆனால் ஆசியா கண்டத்திலோ, கங்கை, யமுனை, ஸிந்து, ஐராவதி, ஹோயாங்ஹோ முதலிய பெரிய நதி தீரங்களில் முதல் முதல் நாகரீகம் பெருகிவந்தது. ஐரோப்பாவின் மகிமைக்கு அதைச் சுற்றியுள்ள சமுத்திரங்கள் காரணமேயல்லாது, அதனது நதிகள் காரணமல்ல.

க்ரீஸின் நாகரீகம்.

மேற் சொல்லிய நாகரீகத்தின் பயனை முதல் முதல் அடைந்த தேசம் க்ரீஸ் என்ற சிறிய நாடு. இந்நாடுதான் இப்போது ஐரோப்பாவில் நடக்கிற மகா யுத்தத்தில் எந்தக் கட்சியில் சேருவதென்று தெரியாமல் தடுமாடுகிற ராஜ்யம். சற்றேறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன் இந்நாட்டில் நாகரீகத்தின் சின்னங்கள் ஏற்பட்டன. ஜனங்கள் சிறிய ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு, பல தொழில்களைப் பயின்று அறிவைப் பரவச்செய்து, மதம், தத்வஞானம், சிற்பம் முதலிய விஷயங்களில் சுமார் ஐந்நூறு வருஷங்களுக்குள் இணையற்றவர்களாக ஆயினர். க்ரீஸ் தேசம் வெகு சிறிதாயினும் இயற்கையில் நன்றாக அமைந்துள்ளது. அதை மூன்று பாகங்களாக நாம் அறியலாம். ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த வடபாகம், கடல் சூழ்ந்த தென்பாகம், கடலில் அமைந்துள்ள தவீபபாகம் என மூன்றாகும். வடபாகத்திலும், தென்பாகத்திலும் மலைத்தொடர்கள் தாறுமாறாக அமைக்கப்பட்டிருப்பதால், இத்தேசம் சிறிய பள்ளத்தாக்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இக்காரணம் பற்றியே இத்தேசத்தில் வசித்த கிரேக்கர்கள் ஒன்று கூடிப் பெரிய ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல், நகர வாழ்க்கையின் கிளர்ச்சியிலேயே அமர்ந்துள்ளவர்களாக காலத்தைக் கழித்து வந்தனர். நகரவாசிகள் எல்லோரும், நகர பரிபாலன முறைகளிலும், நாட்டின் மேன்மையை நிலைநாட்டுவதிலும் வெகு ஆத்திரமுடையவர்களாக இருந்தார்கள். இவ்விதம் ஆதென்ஸ், ஸ்பார்டா, தீப்ஸ் காரிந்த் என்ற பல நகர நாடுகளாகத் தேசம் பிரிவினைப்பட்டு, பலவிதமான துரைத்தன முறைகளை நகரவாசிகளும் நாடி வந்தார்கள். இக்காரணம் பற்றியே இச்சிறு ஜாதியார்களிடத்து தேசாபிமானம் என்ற குணம் நிலைத்திருந்தது. தேச பரிபாலனமென்பது குலத்தொழிலாகவும் உயிர்த்தொழிலாகவும் ஏற்பட்டு, தேசத்தின் மேன்மைக்கு காரணமாகி விட்டது.

மேற் சொல்லிய நகரநாடுகளில் இக்காலத்திய ராஜ்யங்களைப் போல் ஜனங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு துரைத்தனம் வகிக்கவில்லை. அவை சிறிய நாடுகளாக இருந்தமையால், ஜனங்களே நேரில் ராஜ்ய விஷயங்களைக் கவனித்து வந்தார்கள். இவ்விதமான பயிற்சியால் அவர்களுக்கு அறிவும் விவேகமும் பெருகி, அவரவர்கள் நகரத்தில் அபிமானம் நிலைத்து வந்தது. இக்காரணம் பற்றியே கிரேக்கர்களில் அநேக சிறந்த குணங்கள் நிலைத்தும், ஒற்றுமை யென்ற நற்குணம் ஏற்படவில்லை. தேசத்தின் இயற்கை யமைப்பா லுண்டாகும் பிரிவினைகளைத் தவிர, ஜாதி வித்தியாசத்தா லுண்டாகும் பேதங்களும் ஒற்றுமை யின்மைக்குக் காரணமாயின. அயோனியர்கள், டோரியர்கள், ஏயோலியர்களென்று மூன்று வகுப்பினர்களாக கிரேக்கர்கள் பிரிவினைப்பட்டார்கள். இவர்களுள், அயோனியர்கள் கல்விச்செல்வம், பொருட்செல்வம், மதம், சிற

பம், தத்வஞானம், நாகரீகம், நுண்கலை முறைகள் முதலிய விஷயங்களில் ஒப்பற்றவர்களாக ஆயினர். டோரியர்களோ இக்காலத்திய ஜெர்மானியர்களைப்போல, போர் புரிவதையே குலவிருதாகக் கொண்டவர்களாய் ராணுவப் பயிற்சியிலேயே காலத்தைக்கழித்து வந்தார்கள். அவர்களது முக்கிய நகரமாகிய ஸ்பார்டாவில், போர்வீரனுக்கு மரியாதையே யொழிய மற்றெவனுக்கு மில்லை. ராணுவப் பயிற்சியையே நோக்கத்தில் வைத்துக்கொண்டு சட்ட திட்டங்களை யெல்லாம் அமைத்தார்கள். எவனுக்கும் தன்னிஷ்டம் போல் நடக்கக்கூடிய அதிகாரமில்லை. பிறப்பு முதல் இறப்புவரையில் நகரத்தின் சட்ட திட்டத்தின் படியே எவனும் வாழ்நாளைக் கழிக்கவேண்டும். குழந்தைகள் பிறந்தவுடன், ஸர்க்கார் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டு, அவற்றுள் பலமுள்ளவைகளே போஷிக்கப்பட்டு வந்தன. மற்றவைகளை மலைப் பிரதேசங்களில் எறிந்து விடுவார்கள். ஏழு வயதானவுடன் தாயினிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து ராணுவ ஸ்தலங்களில் வளர்த்து வந்தார்கள். அவர்களுக்கு எவ்விதமான சுகத்தையும் காட்டுகிறதில்லை. பசி, துன்பம் முதலிய கஷ்டங்களைப் பொறுக்கும்படியான பழக்கங்களை ஏற்படுத்தினார்கள். கருங்கூழையே அவர்களுக்கு உணவாக அளித்து வந்தார்கள் அவர்கள் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களையே கையாளக் கூடாது. இவ்விதம் சண்டைக் கடாக்களாக வளர்க்கப்பட்ட ஸ்பார்டார்கள் பல சமயங்களில் கிரீஸ் தேசத்திற்கு வந்த ஆபத்துக்களை விலக்கினார்கள். ஆயினும் அவர்கள் நாகரீகத்தையும், அறிவையும், விவேகத்தையும் அயோனியர்களைப்போல் பெருக்கவில்லை. மூன்றாவது வகுப்பினர்களாகிய இயோலியர்களோ நாகரீகத்திலும், வீரத்தன்மையிலும் சிறந்தவர்களல்ல. அமைதியும், பொறுமையுமே அவர்களது சிறந்த குணங்களென்று கொள்ளவேண்டும்.

இவ்விதம் ஜாதி பேதங்களாலும், குண பேதங்களாலும், நாகரீக வித்தியாசங்களாலும் கிரேக்கர்கள் ஒற்றுமையின்றிப் பிரிவினைப்பட்ட போதிலும், மதசம்பந்தமான விஷயங்களிலும், திருவிழாக் காலங்களிலும், பந்தய ஆட்டங்களிலும், அந்நிய தேசத்தாருடன் போர் நேர்ந்த சமயங்களிலும் ஒன்று சேர்ந்து தேசத்தின் மகிமையை நிலை நாட்டினார்கள். அவர்களது முக்கியமான கோவிலாகிய டெல்பி யென்னுமிடத்தில் கோவில் பூசாரிகள் குறி சொல்வதில் சிறந்தவர்களென்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தபடியால், திரள் திரளாக ஜனங்கள் அவ்விடம்போவது வழக்கமாகிவிட்டது. இம்மாதிரியாகவே திருவிழாக்களுக்கும், பந்தயங்களுக்கும் கிரேக்கர்கள் சில விடங்களில் ஒன்று சேரவேண்டியிருந்தது. மேலும் முதல் முதற்கொண்டே அந்நிய தேசத்தவர்களுடன் போர்புரிந்து தங்களுடைய நாடுகளையும் கௌரவத்தையும் கிரேக்கர்கள் காக்கவேண்டியதாயிற்று. கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருஷங்களுக்குமுன், ஆசியாவைச்சேர்ந்த "ட்ராய்" என்ற நகரத்தின் இளவரசனாகிய "பாரிஸ்" என்பவன், ஸ்பார்ட்டா நகரத்து அதிபதியாகிய "மெனிலேயஸி"ன் அரமனையில் விருந்தாடியாக வந்த காலத்தில் அழகிற் சிறந்த

அவன் மனைவியாகிய "ஹெலன்" பேரில் காதல் கொண்டு, அவளை ஒருவருக்கும் தெரியாமல் தன்தேசத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான். அதனால் கோபாவேசம் கொண்டு, கிரேக்கர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து திரள்திரளாக ராணுவங்களைச் சேர்த்துக்கொண்டு, மத்திய தரைக்கடலைக் கடந்து, பத்து வருஷகாலம் ட்ராய் நகரை முற்றுகைபோட்டு, அதை ஹநுமார் இலங்கையைச் செய்ததுபோல் கொளுத்தி, திடலாக அடித்து விட்டதாக கிரீஸ் தேசத்திய மகாகவியாகிய ஹோமரின் புராணக் கவனங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்குச் சுமார் ஐந்நூறு வருஷங்களுக்குப்பின், பாரஸீகத்து மகா சக்கரவர்த்தி யொருவன், திரள்திரளாகச் சைனியங்களைச் சேர்த்துக்கொண்டு, தரைமீதும் கடல் மீதும் கிரேக்கர் மேல் படையெடுக்கையில், இவர்கள் ஒன்றுபட்டு எதிரிகளை முறியடித்துத் துரத்தி விட்டார்கள்.

இவ்விதம் ஆபத்துகாலத்தில் மட்டும் கிரேக்கர்களுக்கு ஒற்றுமை யேற்பட்டது, அமைதியாயுள்ள காலங்களில் நகர நாடுகளெல்லாம் வீணசண்டை போட்டுக்கொண்டு மேன்மையையும் பலத்தையும் காலடைவில் இழந்தன. ஆகையால் கிறிஸ்துவுக்குச் சுமார் 300 வருஷங்களுக்குமுன் கிரீஸுக்கு வடக்கேயுள்ள **மாஸிடன்** தேசத்து அரசனாகிய **அலெக்ஸாண்டர்** என்ற மகா வீரன், கிரீஸைக் கவரவேண்டுமென்று படையெடுக்க, கிரேக்கர்கள் ஒற்றுமை யின்மையால் முறியடிக்கப்பட்டு, தேசமெல்லாம் அப்போர வீரனது ஆதீனமாய் விட்டது. பிறகு இந்த வீரன், பாரஸீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளையும் கவர்ந்துகொண்டு, நம்முடைய தேசத்தில் ஸிந்துநதி தீரத்தையும் ஜயித்தான். ஆனால், இவ்வீரன இளமையிலேயே மாண்டுபோக, அவனது ராஜ்யங்களும் அலங்கோல மடைந்தன. இக்காரணம் பற்றியே க்ரீஸ் தேசத்து மகிமையெல்லாம் காலடைவில் குன்றி, சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குள் அதன் நகர நாடுகளெல்லாம் ரோமர்களின் வசமாயின.

ரோமர்களின் ஆதிபத்யம்.

கிரேக்கர்களை ஜயித்த ரோமர்கள இத்தாலியாதேசத்துமேற்கு சமுத்திரக் கரையிலுள்ள ரோமா புரியைச் சேர்ந்த வீரர்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு 700 வருஷங்களுக்குமுன் இத்தாலியாவில் வெளிப்பட்டதாகத்தெரியவருகின்றது. அக்காலத்தில் இத்தாலியாவில் ஆல்ப்ஸ் மலைமுதல் ஸிஸிலி த்வீபம்வரையில அநேக ஜாதியார்கள் சிறிய ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு நாகரீக நிலைமையில் வசித்து வந்தார்கள். இந்தேசத்தில் மத்திய பாகத்திலுள்ள ஜாதியார்களுள், திருட்டு, மோசம், கொலை முதலிய பாதகங்களைச் செய்த கொடியவர்கள் சட்டதிட்டங்களா லேற்படும் தண்டனைக்கு அஞ்சி, இருப்பிடங்களை விட்டு ஏழுமலைகள் கூடிய ஓர் ஸ்தலத்தில் ஒளிந்துக் கொண்டார்கள். இப்பாதகர்களின் சந்ததியார்களே ரோமர்கள். ஏழுமலைகள் கூடிய விடத்திற்கே ரோமாபுரி யென்ற பெயர வைத்தார்கள். கிறிஸ்துவுக்கு சுமா

750 வருஷங்களுக்கு முன் ரோமாபுரி முதலரசராகிய ரோமுலஸ் என்பவரால் கட்டப்பட்டதென்று ரோமர்களுடைய நம்பிக்கை.

இவ்விதம் சில காலத்திற்கு, சுற்றுமுள்ள ஜாதியார்களில் கழிப்புக் கழித்தவர்களுக்கே அடைக்கல ஸ்தலமாக ரோமாபுரி இருந்து வந்தது. ஆனால் நாளடைவில் ஒன்று சேர்ந்த திருடர்களுக்கும் கொலை பாதகர்களுக்கும் ஒழுங்காக ஒற்றுமையோடு வாழவேண்டுமென்ற எண்ண முண்டாகி, அவர்கள் சட்டதிட்டங்களையும் துரைத்தனத்தையும் ஏற்படுத்திக் கொண்டார்கள்; எனினும் இவர்களுள் பெண்பாலர்களே யில்லாமையால் ரோமர்களின் ஜாதி நிலைத்திருக்க வழியில்லை. ஆனால் திருட்டிலும், வஞ்சகத்திலும் இணையற்ற ரோமர்களுக்கா உபாயம் தோன்றாது? நகரத்தைக் கட்டிய பிறகு, ஒரு திருவிழா நடத்தப் போகிறோமென்று பக்கத்திலுள்ள ஜாதியார்களை ரோமர்கள் அழைக்க, அவர்கள் பெண்டிர்களோடு திரள் திரளாக ரோமாபுரிக்கு வந்துசேர்ந்தார்கள். திருவிழாவை ஆண்களும் பெண்களும் பார்த்துக்கொண் டிருக்கையில், தம் காரியத்திலேயே குறியாயுள்ள ரோமர்கள் விருந்தாடிகளின் பெண்டிர்களை யெல்லாம் திடீரென்று கைப்பற்றி அவர்களைப் பலாத்காரமாகப் பெண்டாடி விட்டார்கள். இவ்விதம் பெண்டிர்களைப் பறிகொடுத்த ஸேபைன்ஸ் என்ற விருந்தாடிகள் கோபாவேசங்கொண்டு, ரோமர்களோடு போரிட ஆரம்பிக்கையில் சிறைப்பட்ட பெண்டிர்களெல்லாம் இருகட்சிக் காரர்களுக்கும் மத்தியிற் சென்று "நாங்கள் கெட்டது தான கெட்டோம். இனிமேல் எங்களை உத்தேசித்துச் சண்டை வேண்டாம். ரோமர்களோடே நாங்கள் இருந்து வருகிறோம். ஸமாதானமாகப் போங்கள்" என்று இரு கட்சிக் காரர்களையும் வருந்திக் கேட்டுக்கொள்ள, இரு ஜாதியார்களும் உடன் படிக்கை செய்து கொண்டு ஒன்று சேர்ந்தார்கள். தங்களுடைய அரசர்களையும், ஒரு தடவை ரோமர்களினின்றும் மறுதடவை ஸேபைன்ஸினின்றும் நியமனம் செய்து கொண்டு, நாளடைவில் நாகரீகத்திலும் திறமைப்பட்டு வந்தார்கள். பெரிய கட்டிடங்கள் கட்டுவதிலும் ரஸ்தாக்களை அமைப்பதிலும், சுத்தமான ஜலாசயங்களை ஏற்படுத்துவதிலும், அகலமான சாலைகளைச்செய்து சதுப்பு நிலங்களை வேளாண்மைக்கு உபயோகமாக மாற்றுவதிலும் ரோமர்கள் ஒப்பற்றவராயினர். அரசர்களையும் மனம்போனவாறு துரைத்தனம் வகிக்க ரோமர்கள் விட்டுவிடவில்லை. வயதிலும் அறிவிலும் முதிர்ந்த சில குடும்பத்தலைவர்களை அரசனுக்கு ஒரு மந்திராலோசனை ஸபையாகவும், நகரவாஸிகளுக்குப் பொதுவாக மற்றொரு ஸாமான்ய ஸபையையும் ஏற்படுத்திக்கொண்டு துரைத்தன விஷயங்களை யெல்லாம் வெகு ஊக்கத்துடன் பார்த்து வந்தார்கள்.

இவ்விதம் 200 வருஷங்களாயின. பிறகு அப்பொழுது அரசு செலுத்தி வந்த **டார்க்வின்** என்பவரின் துன்மதியுள்ள புத்திரனொருவன், கற்பில் சிறந்த **லூக்ரீஷியா** என்ற பெண்ரத்தினத்தைக் காரணமின்றிக் கற்பழித்து அவமானம்செய்தமையால், ரோமர்கள் **டார்க்வின்** வம்சத்தையே அகற்றிவிட்டு

ஏகாதிபத்யம் என்பதையே ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானம் செய்து, வருடம்தோறும் கான்ஸல்ஸ் என்ற இரண்டு நகரத்தலைவர்களை நியமித்துக் கொண்டு, எந்த அதிகாரியையும் ஜனங்களே தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இவ்விதம் குடியரசு நாடாகவே ரோமாபுரி ஆயிற்று.

குடியரசை ஏற்படுத்திக் கொண்டும், ரோமர்கள் நாளடைவில் புதிதாய் நகரத்தில் வந்து சேர்ந்த ஜனங்களுக்குத் தாங்கள் அனுபவித்து வந்த பாத்தியதைகளையெல்லாம் அளிக்கவில்லை. இவர்களைத் தாழ்ந்த ஜாதியாகவே நடத்தி, தங்களுடைய கோட்டை கொத்தளங்களுக்கு வெளியேயிருக்கும்படி செய்து, எவ்வித அதிகாரத்தையும் அவர்களுக்கு அளிக்காமல், கடின வட்டிக்கு அவர்களுக்குக் கடன்களைக் கொடுத்து அடிமைப்படுத்தி, அவர்களோடு உயர்ந்த ஜாதியார்கள் விவாகம் செய்யக்கூடாதென்றும் கொடிய நிபந்தனைகளை ஏற்படுத்தினார்கள். இக்காரணம் பற்றியே இருதிறத்தார்களுக்கும் விவாதம் உண்டாகி, நாளடைவில் ஒவ்வொரு பாத்தியதையையும், விடாமுண்டன் கொடாமுண்டன் கதையாக, கொடுமைக்குட்பட்ட ஜனங்களெல்லாம் பெற்று, கடைசியில் இரண்டு வகுப்பினர்களும் ஒன்று சேர்ந்து நாகரீகமும் பெருமையும் வாய்ந்த நிலைமையில் மேன்மேலும் புதிய நாடுகளையும், குடிகளையும் தங்கள் வசமாக்கி ஆளக்கூடிய திறமையையும் பெற்றார்கள். இவ்விதம் கிறிஸ்துவுக்கு 300-வருஷங்களுக்கு முன்னமேயே ரோமர்களிடத்து ஒற்றுமையும் மேன்மையும் ஏற்பட்டு விட்டன.

இவ்வொற்றுமையின் பயனை ரோமர்கள் சீக்கிரம் அடைந்தார்கள். இவர்களது கீர்த்தி எங்கும் பரவிற்று. ரோமாபுரியின் சமீபத்திலுள்ள சிறிய ராஜ்யங்களெல்லாம் அவர்கள் வசமாயின. ஒற்றுமையின்மையால் நாளடைவில் இத்தாலியாவிலுள்ள எல்லா நாடுகளும் ரோமர்களுக்கு அடங்கிவிட்டன. ஜயலக்ஷ்மியின் கடாக்ஷம் ரோமர்களுக்குப் பூர்ணமாகக் கிடைத்தது. வெற்றியோடு வர்த்தகமும் நாகரீகக் கிளர்ச்சியும் கலந்தன. அப்போது மத்திய தரைக்கடலில் வர்த்தகம் செய்வதில் நல்ல பெயர் பெற்றவர்கள், ஆபிரிகாவின் வடகரையிலுள்ள **கார்த்தேஜ்** நகரவாஸிகளாகிய ஓர்வித **புனிஷ்யன்** ஜாதியாரே. ரோமர்களின் ஆரவாரங்களுக்கு முன்னேயே, கார்த்தேஜ் வாஸிகள், ஸிஸிலி, ஸ்பெயின் முதலிய விடங்களில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டு, கடல்மீது வியாபாரக் கப்பல்களை ஏராளமாகச் செலுத்தி வந்தார்கள். ரோமர்களும் வியாபாரத்தில் போட்டிபோட ஆரம்பிக்கவே, இரண்டு ஜாதியார்களுக்கும் விரோதம் மேற்பட்டு, சற்றேறக்குறைய 50 வருஷங்களுக்குள் மூன்று பெரிய யுத்தங்கள் நேரிட்டு, ரோமர்களுக்கு வெற்றியுண்டாகி, கார்த்தேஜ் நகரமும் இருந்த விடம் தெரியாமற் போய்விட்டது. இப்போர்களால மத்தியதரைக் கடலிலுள்ள தவீபங்களும், ஸ்பெயினும், ஆபிரிகாவின் வடபாகமும ரோமர்கள் வசமாயின. இஃதோடும் ரோமர்கள் நில்லாராய்,

கீழ்திசையில் மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளாகிய க்ரீஸ், ஆசியா, இஜிப்தியா, ஸிரியா முதலிய ராஜ்யங்களையும் தங்கள் வசமாக்கிக்கொண்டனர்.



இவ்விதம் கிறிஸ்துவுக்கு 150 வருஷங்களுக்கு முன்னமேயே மத்திய தரைக்கடல் ரோமராஜ்யத்தின் ஏரியாக ஆகிவிட்டது. வெற்றி பெருகப்பெருக ரோமர்களின் அறிவும் விவேகமும் ஓங்கி, அவர்களது ராஜதந்திர முறைகளும் சட்ட திட்டங்களும் அவர்களது குடிகளையும் பிறநாடுகளையும் ஒழுங்குபடுத்த முக்கியமான கருவிகளாயின. அயல்ஜாதியார்களிடத்து நாகரீகமுறை

களை ஏற்றுக்கொள்ள ரோமர்கள் தயங்கவில்லை. அவர்கள் கிரீஸை வசப்படுத்திய போதிலும், கிரேக்கர்களின் நாகரீகம், அறிவு, ஞானம், சிற்பம் முதலிய சிறந்த அம்சங்களுக்குத்தாங்கள் அடிமைகளாயினர்: உலகத்திலுள்ள செல்வமெல்லாம் ரோமர்களாதீனமாகிவிட்டது. கப்பங்களுக்குக்குறைவில்லை. எத்தேசத்தின் விலைபொருள்களும் ரோமாபுரியை நோக்கியன. அதனது விஸ்தாரமான பந்தய ஆட்டச்சாலைகளிலும், கொடிக்கூடங்களிலும்.ஆபிரிகா கண்டத்துச் சிங்கம், புலி, கரடி முதலிய காட்டு மிருகங்களுடன் மல்ல யுத்தர்கள் போரிட, ஆயிரக்கணக்கான ரோமர்கள், சுற்றிலுமுள்ள கொத்தளங்களில் உட்கார்ந்து எஞ்சியகாலத்தைச் சுகமாகக் கழித்து வந்தார்கள்.

நாளடைவில் பொருட் செல்வமும் கீர்த்திச்செல்வமும ரோமர்களிடத்துப் பெருகப்பெருக, அவர்களது சிறந்த குணங்கள் மலினமாயின. ஒற்றுமை, கட்டுப்பாடு, நாணயம், அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதல், கடமையைச்செய்தல் முதலிய நற்குணங்கள் குன்றிவிட்டன. பொன்னாசை, பொருளாசை, பெண்ணாசை, நாணயமின்மை, கபடம், கொடுமை முதலிய குணங்கள் மேலிட்டன. குடியரசு முறைகளும் வழுவலாயின. ரோமர்கள் தாமே சண்டைகளைப் போட்டு ரோமாபுரியின் கீர்த்தியைப்பெருக்காமல, சட்டத்தைப் பெற்றுப் பயனை யோசிக்காமல் போர் புரியும் ராணுவத்தினிடத்தில் ராஜ்யத்தின், அமைதியையும்க்ஷேமத்தையும ஒப்புவித்துவிட்டார்கள். இக்காரணம்பற்றியே கிறிஸ்துவுக்கு முன் ஒரு நூற்றாண்டுக்கு ராணுவத் தலைவர்களின் ஆரவாரங்களே ரோம ராஜ்யத்தில் காணப்படுகின்றன. ரோமர்களிடத்து நற்குணங்கள் மேலிட்டிருக்குமளவில் குடியரசு ஸாத்தியமாயிருந்தது. நற்குணங்கள் குன்றவே, ஏகாதிபத்யத்திற்கு இடம் கொடுத்துவிட்டது. ஆகையால் நாளடைவில் குடியரசின் சின்னங்கள் மறைந்து, ஸல்லா, பாம்பி, ஸீஸர், அகஸ்டஸ் முதலிய ராணுவத் தலைவர்களே ரோம ராஜ்யத்தை அடக்கியாள வழியுண்டாயிற்று. கடைசியில் அகஸ்டஸ் காலத்தில், ரோமர்கள் எவ்வித அதிகாரத்தையும் அவரிடத்துக் கொடுத்துவிட்டு, அமைதியைப்பெற்று, அரசர்களிடத்து பயபக்தியுடன் நடந்துகொள்ளும் தன்மையை அடைந்தார்கள். இச்சமயத்தில்தான் இருள்மூடிய ஐரோப்பாவுக்கு மத வொளியைக் கொடுக்கக்கூடிய ஏசுகிறிஸ்து, இவ்வுலகிலுள்ள பெரிய மதங்களுக்கெல்லாம் ஜனன பூமியாகிய ஆசியாகண்டத்தில், ஸிரியா என்ற பாகத்தில், உதயமாயினர்.

பால விநோதக் கதைகள்

(ஒரு தாதா எழுதியது)

1. நவாபும் குருவியும்.

திருச்சிராப்பள்ளியில் ஒரு நவாபு இருந்தான். அவன் அதிக டம்பக்காரன்; தன்னைப்போல வேறு எவருமே உலகத்தில் இல்லை என்று எண்ணி யிருந்தான்; யாவரும் தன்னை அப்படியே மதித்துப்

புகழவேண்டும் என்பது அவன் ஆசை. உண்மையில் அவன் புத்திசாலி அல்ல; வீரனும் அல்ல; அதனால், அவன் வீண் பெருமை குடிகளுக்குப் பிடிக்கவில்லை.

அந்த ஊரில் மலையின்மேல் உச்சிப் பிள்ளையார் கோவில் இருக்கிறதே, தெரியுமா? அதன் கோபுரத்தில் ஒரு குருவி கூடு கட்டி வாழ்ந்து வந்தது. ஒருநாள் இரைதேடும் பொழுது, அந்தக் குருவி, குப்பைமேட்டைத் தோண்டிற்று; அதில் ஒரு செப்புக்காசு குருவிக்கு அகப்பட்டது. காசை வைத்துக்கொண்டு, குருவி, மலையின் அடிவாரத்தில் உள்ள கோவில் மதில் சுவர்மேல், உட்கார்ந்திருந்தது.

அப்பொழுது நவாபு, தன் விருதுகள் பரிவாரங்களுடன் அந்த வழியாக யானைமேல் ஊர்கோலம் வந்தான். அவனுடைய டம்ப குணத்தைக் கேலிசெய்து குடிகள் பேசுவது, குருவிக்குத் தெரியும். நவாபைக் கண்டவுடன், குருவி, தன் காசைக்காட்டி: "எனக்குள்ள பணம் இந்த நவாபுக்கில்லை!" என்று கூவிற்று. நவாபுக்கு உடனே கோபம் வந்துவிட்டது. அவன், ஒரு சேவகனைப் பார்த்து: "அடே சேவகா! அந்தக் குருவியின் காசைப் பிடுங்கிவிடு" என்று உத்திரவு செய்தான்.

சேவகன் தன் காசைப்பிடுங்கவே, குருவி: "என்னிலும் கேடுகெட்ட நவாபு என் காசைப் பிடுங்கிக் கொண்டான்!" என்று முன்னிலும் அதிகம் இரைந்து கூக்குரலிட்டது. அதனால் நவாபு அதிக வெட்கம் கொண்டான். அவன், தலைகுனிந்து:—"அடே சேவகா! அந்தக் காசைக் கொடுத்துவிடு" என்று கட்டளையிட்டான். சேவகன் காசை அப்படியே கொடுத்தான். உடனே குருவி:—"எனக்குப் பயந்த நவாபு என் காசைத் தந்துவிட்டான்!" என்று பெரும் கூச்சலிட்டு, ஊர் எங்கும் பறந்துபோய்க் கூவிற்று.

ஊரார் யாவரும் அதைக்கேட்டுச் சிரித்தார்கள். நவாபுக்கு உண்டான வெட்கத்துக்கு அளவில்லை. தன்னுடைய வீணான டம்பத்தாலும் கர்வத்தாலும் அந்த அவமானம் உண்டானது என்று, அவன் தெளிவாய் அறிந்தான். அன்று முதல் தன் டம்பத்தை விட்டு, அவன் புத்திசாலியாக நடந்துவந்தான்.

மதிப்புரை.

சரீர சாஸ்திரம்*:—இந்நூலை நமது பார்வைக்கு அனுப்பிய கிரந்தகர்த்தருக்கு நமது வந்தனங்கள் உரியன. கனம். ஹைகோர்ட்டு ஜட்ஜ் ப்ரும்மஸ்ரீ T. V. சேஷகிரி ஐயரவர்கள் இதற்கு ஒரு பாயிரம் வரைந்தளித்திருக்கிறார்கள். ஆங்கிலம் அறியாத் தமிழ்மக்களுக்கு, சாஸ்திர சம்பந்தமான தற்காலத்து நவீன அறிவைப் புகட்டுதற்கேற்ற உபகரணங்களில், இந்நூல் சிறந்தது ஒன்றாகும். தமிழ்ப்பயிற்சி விசேஷமாய் இல்லாதவரும் தாமே படித்து விஷயங்களை அறிந்து கொள்ளும்படி எளிய வசன நடையில் எழுதப்பட்டிருப்பதால், மாணவருக்குமட்டுமன்றி, புருஷர் ஸ்திரீகள் பிறருக்கும் இந்நூல் பிரயோஜனமாகும். இதன் முதற் பாகத்தில், தேகத்திலுள்ள அங்கங்களின் பொது அமைப்பைப்பற்றியும் அவற்றின் வேலைகளைப்பற்றியும்; இரண்டாம் பாகத்தில், சாதாரணமாக வியாதிகள் உண்டாகும் விதங்களையும் அவைகளைத் தவிர்ந்து வாழும் வழிகளைப்பற்றியும்; மூன்றாம் பாகத்தில், விபத்துக்கள் நேர்ந்தால் செய்யவேண்டிய முதலுதவிகளைப் பற்றியும், கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே, அனைவரும் சுக வாழ்க்கையின் பொருட்டு அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்களை இந்நூல் விளக்கி கூறுகின்றது; மனத்தால் மட்டும் எண்ணியறிவது சிரம சாத்தியமாகும் விஷயங்களை நன்கு விளக்கிக் காட்டும் அநேகம் சித்திர படங்களையும் கொண்டுள்ளது; சொற்சுலபம் பதத்தெளிவு விஷயவிளக்கம் முதலிய அம்சங்களில் மிகச் சிறந்ததாயிருக்கின்றது. உயிர் நூலை ஊன்றியாராய்ந்துள்ள இந்நூலாசிரியர், அக்கலையின் ஏனைய தத்துவங்களையும் இவ்வாறே இனிய எளிய தமிழ் நடையில் எழுதி வெளிப்படுத்துவாராயின், அது தமிழுலகத்துக்குப் பேருதவியாயிருக்கும்.

---

* பாலக்காடு விக்டோரியா கல்லூரிப் போதகா மகா-ள-ள-ஸ்ரீ மா. ஏகாம்பரநாதன் அவர்கள் M. A., L. T. இயற்றியது. D, C, 16 mo. XIV-167 பக்கங்கள், செ[illegible] புத்தகசாலையில் விற்கப்படும். பிரதி ஒன்றின் விலை ரூபா. 1—4—0

அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாசன்.

தமிழர் நேசன்.

முதல் தொகுதி முதல் பகுதியின்

அனுபந்தம்

Truth is Supreme; that which is Supreme is Truth; on Truth the universe is based. Think Truth, Speak Truth, Act Truth. Better die than lie.

மெய்யே சிறந்த பெருநலமாம்; மெய்யே எவையும் நிலைபெறுத்தும்;
மெய்யால் அழல்கால் கதிர்பிறவும் தத்தம் தொழிலின் விலகாவாம்;
மெய்யே எவைக்கும் இருப்பிடமாம்; மெய்யே மெய்யே சிவமாகும்;
மெய்யே பிரமபதமும் எனப்புகன்றான் வினைதீர் காசிபனே. (காஞ்சிப்புராணம்)

அரிச்சந்திரன்

அங்கம்—I

களம்—1

இடம்: இந்திர சபை.
காலம்: முற்பகல்.
பாத்திரங்கள்: தேவேந்திரன்; மந்திரி; சனகர், சமதக்கினி, வசிஷ்டர், விசுவாமித்திரர், நாரதர் முதலிய முனிவர்கள், நவக்கிரகாதிபர்கள்; திக்குப்பாலகர்கள், நாட்டியமாதர்கள்; வாயிற் காப்போர் முதலிய மற்றையோர்.

[தேவேந்திரன், முனிவர் முதலாயினோர் சூழ்ந்து நிற்க, சிங்காதனத்தினின்றும் எழுந்து கைகூப்பி,]

தேவேந்திரன்.—

[1] உலகமுதற் பொருளை உம்பர்க்(கு) உணர்வரிதாம் பொருளை,
ஓதியவே தாகமத்தின் உச்சியினுட் பொருளைப்,
பலகலையின் பொருண்முடிவின் முடிவான பொருளைப்,
பற்றறப்பற் றியபெரியோர் பரவியவான் பொருளை,

---

* இது ராவ்பஹதூர் ச. பவானந்தம்பிள்ளை அவர்கள் புராணப்படி இயற்றிய 'அரிச்சந்திரன்' என்னும் நாடகத்திலிருந்து எடுத்தது. (All Rights reserved by the author.—இதன் சர்வஉரிமையும் நூலாசிரியரைச் சார்ந்தது.)

1. (இச்செய்யுள் 'உபநிடதம்' என்னும் நூலில் உள்ளது. இதில் வரும் அரும்பதங்களுக்கு உரை.)

உம்பர்க்கு—தேவர்க்கு, பரவிய—வழிபட்ட, அலைதிவலை நுரைகடலில் உதித்து ஒடுங்குமாபோல்—அலைகின்ற துளி (அல்லது அலையும் துளியும்) நுரைகின்ற கடலில் தோன்றி அதனிலேயே ஒடுங்குவதுபோல.

அலைதிவலை நுரைகடலில் உதித்தொடுங்கு மாபோல்
அகிலாண்ட முதித்தொடுங்கும் அதன்மூலப் பொருளை,
இலகியசற் குருவாகி யாளுகும் பொருளை,
எங்குமாம் பரம்பொருளை யாமும்வணங் குதுமே!

[முனிவர்கள் முதலிய யாவரும் தொழுகின்றனர். இந்திரன் ஆதனத்தமருகிறான். முனிவர் முதலிய மற்றையோரும் தத்தமக்குரிய ஆதனங்களில் அமர்கின்றனர். நாட்டியமாதர் நால்வரும் சபையில் வந்து நடனம் புரிந்து இந்திரன் முதலியோரை நமஸ்கரித்துச் செல்கின்றனர். பின்னர் இந்திரன் முனிவர்களை நோக்கி,]

தேவேந்திரன்.—முனி புங்கவர்காள்! ஐம்புலன்களை யடக்கி, நீவிர் இயற்றும் அருந்தவங்கள் ஏதும் இடையூறின்றி இனிது நிறைவேறி வருகின்றனவா?

நாரதர்.—மகபதி! மண்ணரசர்க்கும், விண்ணரசர்க்கும் மன்னராக விளங்கும் தமது செங்கோலின் திறத்தால் எமது தவங்களனைத்தும் செவ்வனே நடந்து வருகின்றன.

தேவேந்திரன்.—அகமகிழ்ந்தோம். (நவக்கிரக தேவதைகளை நோக்கி,) நவக்கிரக நாயகர்காள்! நீவிர் உமது கதி வழுவாது நடந்து வருகின்றீர்களா?

சூரியன்.—தேவர்கள் தலைவ! தமது திருவாணையைத் தாங்கிய யாங்கள், எமது கதியிற் சற்றும வழுவாமலே நடந்து வருகின்றோம்.

தேவேந்திரன்.—சந்தோஷம. (திக்குப் பாலகர்களை நோக்கி,) திக்குப் பாலகர்காள! நீவிர் நுமக்குற்ற திசைகளைப் பாலித்து வருகின்றீர்களா?

வருணன்.—அமரர்க்கரசே! எமக்குற்ற கடமைகளை யாம் செவ்வனே செய்து வருகின்றோம்.

தேவேந்திரன்.—மகிழ்ந்தோம். (மந்திரியை நோக்கி,) அமைச்ச! அசுரர்கள் அமரர்க்கடங்கி நடந்து வருகின்றனரா? மன்னர்க்கும் மன்பதைக்கும் ஆக்கம் கூறி, மகருஷிகள் புரியும் மகங்கள் யாவும் இடையூறின்றி நடை பெற்று வருகின்றனவா?

மந்திரி.—அமரர்க்கரசே! அசுரர்கள் அமரர்க்கடங்கியே நடந்து வருகின்றனர். மகருஷிகள் தவவலி ஒரு புறமிருக்க, மண்ணுலக வேந்தர் சிலர் 'தவத்திலும் மகத்தாகத் தகு நல்லொழுக்கம்' என்றபடி, தம் ஒழுக்கத்தின் மகத்துவத்தாலேயே, குடிகளுக்கொரு குறையும் நேராது கோலோச்சி வருகின்றனர் என, திரிலோக சஞ்சாரிகளான இம் முனிபுங்கவர்களால் தெரிய வருகிறது.

தேவேந்திரன்.—அப்படியா! (முனிவர்களை நோக்கி,) முனீந்திரர்காள்!

> பாய்மைக்க லோலக் கடல்சூழ் புவிபார்த்திவர்க்குள்
> தீமைக்கும் வேகச் சிலுதுக்கும இடங்கொடாது
> வாய்மைக்கும் நன்னூல் வழக்குக்கும் மனத்தி லுற்ற
> தூய்மைக்கும் மிக்கார் தமையாப்ப சனிர்சொன் மின்னைய.[1]

ஆழிசூழுலகத்தை ஆண்டுவரும் அரசர்கள் அநேகரன்றே? அவர்களுள் நன்னெறியினின்று சற்றும் தவறாத மன்னன் ஒருவன் உளனோ? உளனேல் அன்னான் யாவனென்று அருளவேண்டும்.

வசிஷ்டர்.—மகபதி!

> பாருக் கொருவன், பரதார சகோதரனெவும்
> போருக் கொருவன், புகழுக்கும் மறைப்பொருட்கும்
> நேருக்கும் வீடா மனுநூல நெறிக்கும் பொறைக்கும்
> ஆருக்கும் மிக்கான், அரிச்சந்திர னாகும் ஐய.[2]

அயோத்தியின்கண் அரசு செலுத்தி வரும் அரிச்சந்திர மன்னனே நற்குணத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன், பர தாரங்களுக்குச் சகோதரனாய் இருப்பவன்; சமரிலும், கீர்த்தியிலும், சாஸ்திர வுணர்ச்சியிலும் ஒப்பற்றவன். மற்றும உத்தம நீதிநூல்கள் கூறும் விதிகளுக்கு இலக்கியமாயிருப்பவன்.

விசுவாமித்திரர்.—(வசிஷ்டரை நோக்கி,) வசிஷ்ட முனிவரே! அந்த அரிச்சந்திரனையோ, இவ்வளவு சிறப்பித்துக் கூறினீர்?

> வெய்யன்; பதகன்; பரதார விருப்பன்; வீணன்;
> பொய்யன்; நிறையும் பொறையும் சிறிதுமில் புல்லன்;
> கையன்; கபடன்; கபவன்றனை நல்லன் எனறிவ
> வையன் திருமுன் உரைத்தாய்! இதென்னகு மேயோ?[3]

---

1. (அரிச்சந்திர புராணம்) பாய்—(கரைமீது) மோதுகின்ற, மை—கறுத்த, கல்லோல—கல்லென்று சப்திக்கும், வேகச்சிலுதை—விரைவாய்ப் பற்றும் துன்பம்.

2. (அரிச்சந்திர புராணம்) பார்—பூமி, பரதாரம்—பிறன்மனைவி, போர்—சண்டை, மறைப்பொருள்—வேதத்தின் பொருள், நேர்—நடுவுநிலைமை, வீடா—விடாத, மனுநூல்—மனு என்பவரால செய்யப்பட்ட தருமசாஸ்திரம், நெறி—வழி, பொறை—பொறுமை, ஆருக்கும்—எப்படிப்பட்ட யோக்கியர்களுக்கும, மிக்கான்—சிறந்தவன்.

3. (அரிச்சந்திர புராணம்.) வெய்யன்—கொடியவன், பதகன்—(பாதகன்) பாவி, நிறை—(மனத்தை) நிறுத்துதல், புல்லன்—அற்பன், கையன்—

அவன், வெய்யவன், பாதகன், பரதார இச்சையேயுள்ளவன், பொய்யே பூஷணமாக உடையவன், மனவொடுக்கமும் பொறுமையும் சிறிதுமில்லாதவன், அற்பன், வஞ்சகன், கபடன். இத்தகையவனை உத்தமனென்று இச்சபையில் எவ்வாறு கூறினீர்?

வசிஷ்டர்.—(இருகாதுகளையும் கைகளாற் பொத்திக்கொண்டு,) ஆ, ஆ! விசுவாமித்திரரே! என்ன கொடிய வார்த்தைகளை வாய்கூசாது கூற ஒருப்பட்டீர்!

தீவெகு தொழிலின்றி ஒப்பற்றமெய்ச் செவ்வியோனை,
காய்வெந் திறலால் இவைகூறிய கௌசிகா! நின்
வாய்வெந் திலை! நின்மனம் வெந்திலை! வம்பு சொன்ன
நீவெந் திலை! தெய்வமும் நின்கயின் பொய்த்த தன்றே! [1]

தீயனவென்று கருதப்படும் கொடிய செய்கைகளில் ஒன்றேனுமின்றி செவ்விய நற்குணங்கள் பலவுமமைந்த அரசர் சிகாமணியாகிய ஒருவனை, உமக்கு இயற்கையாக உள்ள கோபத்தின் வலியால் இவ்வாறு இழித்துக் கூறினீரே, இது யாருக்கு அடுக்கும்? இங்ஙனம் கூறிய உமது வாய் வேகவில்லையே! உம்முடைய மனமும் வெந்து புண்ணாகாதிருக்கின்றதே! வம்பு வார்த்தைகள் கூறிய நீர் வேகாதிருப்பதும் ஆச்சரியமே! அந்தோ! தெய்வமும் உம்மிடத்துப் பொய்த்து நின்றது போலும்!

விசுவாமித்திரர்.—ஆ! ஆ! வசிஷ்டரே! எம்மை யாரென்று கருதி இவ்வாறு உரைக்கின்றீர்? யாம் ராஜருஷி என்பதை முற்றும் மறந்தீராயினும், யாம் முனிந்தால் முப்புரமும் நீறுபடும் என்பதறியீரோ? யாம் புரிந்த அருந்தவங்களும் எமக்கு அரனளித்த அரிய வரங்களும் உமது உள்ளத்தினின்றும் அகன்றனவோ? எமது விருப்பத்திற்கு விரோதமாய் நடப்பவர் சுவர்க்கம், மத்தியம், பாதலம் ஆகிய மூவுலகத்தினும் முளரோ? எண்ணிறந்த அண்டங்களை, யாம் நினைத்தால் ஒரு கணத்தில் கனலெனச் சுட்டுக் கரியாக்கி விடுவோம். பிரமன் விஷ்ணு சிவனுகிய மும்மூர்த்திகளையும் சிறைப்படுத்தும் திறம் எமக்குண்டு என்பதை மறவாதீர். மாற்றானை அழித்து உற்றானை ஆதரிப்போம். சகல வல்லமையுமுள்ள முனிசிரேஷ்டா யாம். வசிஷ்டரே! இனியேனும் யாம் இன்னாரென்பதையும், எமது ஆற்றல் இத்தகையதென்பதையும் அறிந்து அடங்கியிரும்.

வஞ்சகன், கயவன்—கீழ்மகன், ஐயன்—தலைவன் (இந்திரன்), ஈதென்னுக—இது யாது பயனைக்கருதி.

1. (அரிச்சந்திர புராணம்.) செவ்வியோன்—செம்மையான குணமுடையவன், காய்வெந்திறல்—கோபிக்கின்ற கொடிய வல்லமை.

வசிஷ்டர்.—விசுவாமித்திரரே! நீர் அருந்தவங்கள் செய்து பெருஞ்சித்திகளைப் பெற்றீரேனும், உமது கோபத்தையடக்க அறநீரில்லையே. நீர் முனிந்தால், உமது தவவலியால் முப்புரமழியலாம், அண்டம் புரளலாம், அயன், அரி, அரனைவர்களும் அகர்ந்தம் வருந்தடையலாம். ஆனால் உண்மை ஒரு நாளும் அழியாது. எவராலும் எவ்வகையாலும் எக்காலத்தும் உண்மைக்குக் கேடு வாராதென்பது திண்ணம். மெய்திறம்பாத அரிச்சந்தனை அமரர்கோன் அவையிடத்தே இங்ஙனம் இழித்துக் கூறியது உமக்கு அடாது. அருஞ்சித்திகள் கைவந்த உமக்கும் மேலாக ஒப்புயர்வற்ற ஒரு கடவுள் உண்டென்பதை உணரும்.

விசுவாமித்திரர்.—வசிஷ்டரே! நீர் நீதி கூற வந்தது போதும். ஒரு மண்ணுலக மன்னனிடத்துள்ள குணத்தைக் கூறினால், உமக்கேன் இவ்வளவு கோபம்? அரிச்சந்திரன் உமக்குச் சீடனாக இருப்பதால், அவன் மாசு மறுவற்ற மனத்தனாய்விட வேண்டுமோ? தவசி என்ற பெயரை வைத்துக்கொண்டு இங்ஙனம் ஏகாத வார்த்தைகளைக் கூற வந்தீரே! உமது தலை வெடித்துத் துண்டு துண்டாகப் போனாலென்ன?

வசிஷ்டர்.—கௌசிகரே! நான் கூறிய அனைத்தும் அணுவும் பிசகாத உண்மை. வேதம் பொய்த்தாலும், சந்திர சூரியர் திசைமாறினாலும், அரிச்சந்திரன் சத்தியம் தவறான்.

விசுவாமித்திரர்.—வசிஷ்டரே! நீர் பொய்யும் புரட்டும் கூறுவதோடு அமையாது, மானத்தையும் கைவிட்டீரே! அரிச்சந்திரன் கூறியுள்ள பொய்கள் அநேகம்; அவன் இனறுங் கூறிவரும் பொய்கள் அனந்தம்; இனி அவன் கூறும் பொய்கள் கணக்கிலடங்கா. அவனினும் பொய்யர் வேறெவரும் எவ்வுலகிலுமிலர். அவனது தீய ஒழுக்கங்கள் எண்ணிறந்தன. அவனால் என் இத்தேவசபையின் சிறப்பைக் குலைக்கிறீர்? எமது கோபத்திற்கு ஆளாகவேண்டுமென்பது உமது விருப்பமோ?

வசிஷ்டர்.—கோபத்திற்காளாவதா? பூனைக்கஞ்சிப் புலி யடங்குமோ?

தேவேந்திரன்.—தவசிரேஷ்டர்களே! பொறுங்கள், பொறுங்கள்! உங்களையொத்த மாதவசிகாமணிகள் பொறுமையை இழந்து சினங்கொண்டால், அவர்களைத் தணிப்பவர் யாவர்? இதுவோ நீவிர் ஐம்புலனை வென்ற திறம்? இவ்வாறு நீங்கள் ஒருவர்க்கொருவர் மாறுபட்டுச் சச்சரவு கொண்டால் விண்ணிலும் மண்ணிலும் முன்னோர இகழ்ச்சிக்கன்றோ ஆளாவீர்! வசிஷ்டமா முனிவரே! விசுவாமித்திரரே! உங்கள் கோபத்தை அடக்கி அமர்ந்திருங்கள்.

விசுவாமித்திரர்.—இந்திரா! இந்த வசிஷ்டனுக்கோ நான் அஞ்சி அடங்கி விடுவேனென்று எண்ணுகின்றனை? பசுவைக் கண்டு புலி பதுங்குவதுண்டோ?

தேவேந்திரன்.—போதும், போதும். கொண்ட கோபத்தைத் தணியும். (விசுவாமித்திரர், வசிஷ்டர் இருவரையும் பார்த்து,) முனிபுங்கவர்காள்!

நீங்கள் இருவரும் தவத்தாற் சிறந்தவர்கள். உங்கள் இருவர் பெருமையும் அளவிடற்கரியது. உங்களில் எவர் மொழி மெய், எவர்மொழிபொய் யென்று நிச்சயிப்பது என் அளவினதன்று. ஆதலால் இதற்கு ஒரு முடிவு கூறுகின்றேன் கேளுங்கள். அரிச்சந்திரன் குணத்தைப் பரீட்சிப்போம், அதன்மேல் எவருடைய கூற்று நிலைபெறுகிறதென்று அறிவோம்.

வசிஷ்டர்.—மகபதி! நீர் கூறியது மிகவும் ஏற்றதே. அந்தப் பரீட்சையால் என் சிஷ்யன் அரிச்சந்திரன் ஒரு பொய்யேனும் என்றாவது கூறியதாக ஏற்பட்டால், யான் இவ்வளவு காலம் செய்த தவமனைத்தையும் விசுவாமித்திரருக்குத் தத்தம் செய்து விடுகிறேன். இது சத்தியம்.

நாரதர்.—(விசுவாமித்திரரை நோக்கி,) விசுவாமித்திரரே! உமது சபதமென்ன?

விசுவாமித்திரர்.—(நாரதரை நோக்கி,) என் உரையெல்லாம் பிதற்றுரையென்று கருதினீர்? நானும் ஒரு சபதம் கூறுகிறேன், கேளும்: நான் அரிச்சந்திரனை அளவற்ற பொய்யுரைகள் கூறவும், அநேக அடாத கருமங்களைப் புரியவும் செய்யாவிட்டால், நான் மிகவருந்திச் செய்த அருந்தவங்களிற் பாதி அந்த வசிஷ்டருக்குக் கொடுத்துவிடுகிறேன். இங்கிருக்கும் எல்லோரும் இதற்குச் சான்று.

வசிஷ்டர்.—(விசுவாமித்திரரை நோக்கி,) கௌசிகரே! நல்லது, உம்மாலான தந்திரங்களைச் செய்து அரிச்சந்திரனை உண்மை நெறி பிசகச்செய்ய முடியுமானால் செய்யும். நான் அம் மன்னனுக்கு இங்கு நடந்ததொன்றையும் கூறாமலும், யாதோருதவியும் புரியாமலுமிருப்பேன். இதில் நீர் சந்தேகங் கொள்ளாதவாறு உமது காரியம் முடியும் வரையில் நான் தேவர்களுடனே தங்கியிருப்பேன்.

தேவேந்திரன்.—நல்லது விசுவாமித்திர முனிவரே! இனி நீர் உமது சபதத்தை நிறைவேற்றச் செல்லலாம்.

விசுவாமித்திரர்.—இதோ சென்று ஒரு நொடியில் காரியத்தை முடித்து வருகிறேன்.

[அனைவரும் போகின்றனர்.]

அங்கம்—II

முதற் களம்.

இடம்: அயோத்தியில் அரிச்சந்திரன் அவைக்களம்

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: அரிச்சந்திரன், விசுவாமித்திரர் முதலாயினோர்.

[அரிச்சந்திரன் அமைச்சர் முதலாயினோர் புடைசூழச் சிங்காதனத்தின்கண் அமர்ந்திருக்கின்றான். விசுவாமித்திரர் வருகிறார்.]

அரிச்சந்திரன்.—(முனிவர் வரவைக் கண்டு இருக்கைவிட்டெழுந்து கைகூப்பி நின்று,) முனிவர் பெரும!

விருத்தம்.

கந்தர மிருந்து, காட்டுக் காய்கனி அருந்தி, வேத
மந்திரம் ஓதி, ஈசன் மலரடி மனத்து ளுன்னும்
சுந்தர ராஜ யோகத் தூயகோ சிகப்பேர் எந்தாய்!
என்னமா தவஞ்செய் தேமோ, இணையடி தொழுதற் கின்றே! [1]

சுவாமீ! அமர்ந்தருள வேண்டும்.

விசுவாமித்திரர்.—மன்ன! நீ இறைவன் இன்னருளால் என்றென்றும் நல் வாழ்வு அடையக்கடவை.

கலித்துறை.

வையம், துரகம், மதகரி, மாமகு டம்சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. [2]

வேந்த! இரத கஜ துரக பதாதியும், மணிமகுடமும், சிவிகையும், பொன்னும பொருளும், முத்துமாலை முதலியனவுமெல்லாம், பூர்வஜன்மத்தில் பார்வதி தேவியின் பாத பங்கயத்தைப் பூசித்த புண்ணியர்க்குள்ள இலட்சணங்களாகும். ஆகையால் இந்த நிலையில் உன்னைக்காண மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம். (கையமர்த்தி வாழ்த்துகின்றார்.)

அரிச்சந்திரன்.—(சிங்காதனத்தில் உட்கார்ந்து,) முனிபுங்கவ! அடியேன் புரிந்த புண்ணியமே புண்ணியம். இயற்றிய தவமே தவம். அடியேனது முயற்சி சிறிதும் இன்றி, தேவரீர் இங்கு வரப்பெற்றேன். இது இவ்வ[illegible]த்திமா நகரம் இயற்றிய தவமோ? அன்றி யானும் என் முன்னோரும் செய்த தவப்பயனோ? யாதோ அறியேன். இன்றே இம்மனை மனையாயிற்று. காடும் நன்னாடாயிற்று. தேவரீர் இங்கு எழுந்தருளிய காரணம் யாதோ? அடியேன் அறியுமாறு அருளவேண்டும்.

விசுவாமித்திரர்.—அரிச்சந்திர! மன்னர்க்கும் மன்பதைக்கும் ஆக்கங்கூறி, யாம் ஓர் அரிய மகம்புரிய மனங்கொண்டோம். அதற்குச் சிறிது பொருள் வேண்டும். அதனை மிக எளிதில் செய்துகொள்ள எமக்கு வன்மையுண்டென்பதை நீயே யன்றி உலகமும் அறியும். ஆயினும், அவ்வேள்வி

---

1 (நூலாசிரியர் இயற்றியது) கந்தரம்—குகை, உன்னும்—நினைக்கும், தூய—சுத்தமான, கோசிகன்—விசுவாமித்திரன், மாதவம்—பெருந்தவம், இணையடி—இரண்டு பாதங்களை.

2 (அபிராமி அந்தாதி.) வையம்—தேர், துரகம்—குதிரை, மதகரி—மதயானை, மாமகுடம்—பெரிய கிரீடம், சிவிகை—பல்லக்கு, கனகம்—பொன், ஆரம்—முத்துமாலை, சின்னம்—அடையாளம்.

வேதர் பொருட்டுப் புரிவதாதலால், அதில் நின் பொருளைச்செலவிட்டு நினக்கு நன்மை யுண்டாக்க நாடுகின்றோம்.

அரிச்சந்திரன்.—முனிவர் நாயக! தேவரீர், பொருளல்லாத பொருளை முன்னிட்டு, அடியேனையும் ஒரு பொருளாக எண்ணியது எனது நல்வினைப் பயனுவதன்றி மற்று யாது! பிறர் மகிழக்கண்டு, தாம் மகிழ்வதே பெரியார் செயகை யாதலின், தேவரீர் எம்போல்வார் உய்யும் வண்ணம் அருள் கொண்டனிர். அவ்வரிய மகத்திற்காகும் பொருளைத் தேவரீர் அருள்புரியின், அடியேனால் இயன்ற அளவு இப்பொழுதே அளிப்பதற்குச் சித்தமாக விருக்கின்றேன். இதனினும் யான் பெறத்தக்க பேறு வேறு யாது!

விசுவாமித்திரர்.—அரிச்சந்திர! அதற்கொன்றும் பெருந்தொகை வேண்டுவதில்லை.

> வான வர்புகழ் வாய்மையின் மன்னவ!
> யானை மேலநின் றெறிந்த கவண்சிலை
> போன தூரம் பொருள்குவிப் பாயெனின்
> மோன வேள்வி முடித்திடல் ஆகுமே.[1]

தேவரும் மெச்சும் வாய்மை வாய்ந்த வேந்தர் பெரும! உன்னத மதயானை மீது ஏறி நின்று ஒருவிட புருஷன் வீசி யெறிந்த கவணகல் எவ்வளவு தூரம் சென்று விழுமோ அத்தனை அகல உயர முள்ளதொரு பொற்குவியல் அளிப்பையேல் சாலும். அதுகொண்டு எனது வேள்வி முடிவு பெறும்.

அரிச்சந்திரன்.—சுவாமி! அதற்கென்ன வேண்டிய மட்டும் தேவரீர் எடுத்துக் கொள்வதில் தடை யாது? அடியேனும் தேவரீரது தொண்டனே யன்றோ.

விசுவாமித்திரர்.—இருக்கட்டும். அரிச்சந்திர! அதிகம் பெறுதல் தகாது. பொன்னை வெறுக்கவேண்டு மென்றே அதற்கு வெறுக்கை யெனப் பெயரிட்டனர். கூறியதற்கு மேலும் வேண்டியுளதேல், அப்போது பார்ப்போம். நீ இப்போது கொடுத்தற் கிசைந்த பொருளை நின்னிடத்திலேயே வைத்துப் போகின்றோம். அதனை வேண்டியபோது பெற்றுக் கொள்வோம். ஆசீர்வாதம். நீயும் நின நாடும் நீடூழி வாழ்க. (எழுகின்றார்.)

அரிச்சந்திரன்.—(சிங்காதனத்தினின்றும் எழுந்து கைகூப்பி,) முக்குறும் பெறிந்த முனிவர! வேண்டுங் காலத்தைத் தெரிவித்தால், அடியேன் கொணர்ந்து சேர்க்கின்றேன்.

[அரசன் பலமுறை வணங்குகின்றான். மந்திரி முதலாயினோரும் வணங்குகின்றனர். விசுவாமித்திரர் மிடுக்குடன் திரும்பிச் செல்கின்றார்.]

---

[1] "வானவர்" எனனும் பாட்டு. (அரிச்சந்திர புராணம்.)
கவண்சிலை—கவண்கல், மோனவேள்வி—மௌனவிரதம்பூண்டு செய்யும் யாகம்.